கல்கி

KALKI 19-10-80 90 காசு



போயே விட்டது
உடம்பு வலி



ஒரே ஒரு

ஸாரிடான் மூலம்

ட்ரேட்மார்க் ‘ரோஷ்’

வலிமையானது
பாதுகாப்பானது
ஒன்றே ஒன்று போதுமானது

RP. 5934

உலகக் குத்துச்சண்டை சாம்பியன் முகம்மது அலி நான்காவது தடவையாக உலக சாம்பியன் ஆகும் பெருமையைத் தகர்த்து விட்டார் லாரி ஹோம்ஸ். குத்துச் சண்டையில் தோற்ற முகம்மது அலிக்கு எட்டு மில்லியன் டாலர்கள் கிடைத்தது. வென்ற லாரி ஹோம்ஸுக்கோ 2.8 மில்லியன் டாலர்கள் தான்!

இந்த வெற்றியில் லாரி ஹோம்ஸுக்கு இருவித உணர்ச்சிகள். ''நான் ஒரு மனிதரோடு குத்துச் சண்டையிட்டு வென்றேன் என்பதில் மகிழ்ச்சி. ஒரு உன்னத குத்துச் சண்டை வீரரைத் தோற்கடித்தேன் என்பதில் வருத்தம்!''

வசூல் ஆன தொகை ஆறு மில்லியன் டாலர். இதுவே ஒரு ரிகார்டு.

1978ம் வருஷம் லாரி ஹோம்ஸ் ஷாவர்ஸோடு மோதிக் கொண்டிருந்தார். இறுதி வரை போராடிய ஷாவர்ஸைக் கடைசியில் இறுகக் கட்டிக் கொண்டு லாரி ஹோம்ஸ் சொன்னார்: ''நான் உன்னை விரும்புகிறேன். நீ ஒரு நல்லசிறந்த குத்துச் சண்டைக் காரன்.!''

''என்றைக்குமே நான் உலக சாம்பியனாக இருந்துவிட முடியாது'' என்று அடக்கத்துடன் கூறும் புது உலக சாம்பியன்ஹோம்ஸுக்கு மைக் வீவர் இப்போதே சவால் விட்டுக் கொண்டிருக்கிறார்.

ஹோம்ஸும் முகம்மதலியும் பத்திரிகைப் பிரதிநிதிகளைச் சந்திக்கும் வேளையில் நடந்த ருசிகரமான சம்பவம்: ஹோம்ஸ் தம் அருமை மனைவியுடனும் சிறு பெண் குழந்தையுடனும் வந்திருந்தார். முகம்மதலி அந்தச் சிறு பெண் குழந்தைக்கு முத்த மழை பொழிந்தார்!

முடிந்தது முகமது அலி சகாப்தம்!



✱ ஹோம்ஸ்



✱ முகம்மது அலி

அப்பொழுது ஹோம்ஸ், ''முகம்மதலி மிகப் பெரிய சாம்பியன்; மிக உன்னதமான மனிதர்!'' என்று புகழ்ந்தார். அந்தச் சமயத்தில் முகம்மதலி போட்ட போடு: ''அப்படியானால் இந்த அளவுக்கு என்னை ஏன் அடித்து நொறுக்கினாய்?''

— குண்டுமணி



குதூகலமான தீபாவளிக்கு
சாரதாஸின்
பிரமிப்பூட்டும் டிசைன்கள்
வஸந்தப்ரியா
ஸ்நேகப்ரபா
சாரதாஸ்
(முகூர்த்தப் பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)
தன் பில்டிங்
மவுண்ட் ரோடு
சென்னை-600 002
போன் : 87177
N.S.B. ரோடு
திருச்சி-620 002
போன் : 27077
தீபாவளி முடிய ஞாயிற்றுக்கிழமை விற்பனை உண்டு

பார்த்தீனியம் சென்னைக்கும் ஆபத்து!

பார்த்தீனியம் என்ற ஒரு வகைச் செடி பங்களூரில் எங்கு பார்த்தாலும் வளர்ந்து காடாக மண்டியுள்ளது. இதைக் கண்ட இடத்தில் பிடுங்கிக் கொளுத்தும்படி கர்நாடக முதல்வர் குண்டுராவ் மக்களைக் கேட்டுக் கொண்டு இதற்கென ஒரு நாளை ஒதுக்கி இயக்கமே நடத்தினார்.

சென்னை மாநிலக் கல்லூரி தாவர இயல் பேராசிரியர் டாக்டர் இ. கோவிந்தராஜுலுவைச் சந்தித்து இதனால் என்ன ஆபத்து என்று வினவியபோது அவர் கூறினார்:

இந்த வகைச் செடி இப்போது சென்னையில் ஏன், எங்கள் கல்லூரியிலேயே வளர்ந்துள்ளது. பொட்டல் நிலங்களிலும் குப்பை மேடுகளிலும் துரிதமாக வளர்ந்துவிடும். நகரின் அழகே பாதிக்கப்படும். இப்போது சென்னையில் அதிகமாக இது தலைகாட்டத் தொடங்கியுள்ளது அபாயம்தான்.



இது அமெரிக்காவிலிருந்து வந்தது என்பது தாவர வல்லுநர்களின் கருத்து. ஒரு சின்னச் செடியில் பல ஆயிரம் பூக்கள் இருக்கின்றன. பூக்கள் சிறிய அளவில் வெள்ளை நிறத்தில் உள்ளன; செடியின் ஒவ்வொரு மஞ்சரியிலும் ஐம்பது முதல் நூறு பூக்கள் உள்ளன. ஒரு செடியில் சுமார் நூறு மஞ்சரிகளுக்கும் அதிகமாக இருக்கலாம்.

செடி இரண்டு மீட்டர் உயரம் வரை வளரும். இலை பிளவுபட்டும், தண்டு பட்டைப் பென்சில் போலவும் இருக்கும். செடி முழுவதும் தூவிகள் (வெள்ளை உரோமங்கள்) உள்ளன.



✕ பேராசிரியர் கோவிந்தராஜுலு

ஒவ்வொரு பூவிலிருந்தும் கனிகள் இருநூறு முதல் முந்நூறுவரை தோன்றுகின்றன. இந்தக் கனிகளைச் சாதாரணமாக விதைகள் என்று கூறுவார்கள். ஒவ்வொரு கனியும் கறுப்பு நிறத்துடன் தலைகீழ் முட்டை வடிவத்துடன், மிகவும் சிறியதாகவும் லேசாகவும் இருக்கின்றன. இதன் நுனியில் இலேசான செதில்கள் கிரீடம் போன்று அமைந்துள்ளன. இதன் உதவியால் இந்தக் கனிகள் மிக எளிதில் வேகமாகக் காற்றினால் எடுத்துச் செல்லப்படுகின்றன. எங்கு விழுந்தாலும் அங்கு மழை பெய்ததும் முளைக்கிறது. அடுத்த சந்ததி உருவாகிறது.

குண்டு ராவ் 'பிடுங்கிக் கொளுத்து' என்றதை நான் சிறந்த யோசனையாக ஒப்புக்கொள்ள மாட்டேன். அதிக நேரத்தை எடுத்துக்கொள்ளும் நடைமுறைக்கு உதவாத யோசனை. இப்பூண்டுகளை ஒழிக்க வேண்டுமென்றால் மஞ்சரிகள் உண்டாவதற்கு முன்பே ஒழிக்க வேண்டும்.

தோல் அரிப்பு, ஆஸ்துமா போன்ற பல உடல்நலக் குறைவுகள் ஏற்பட பார்த்தீனியம் காரணமாகிறது.

பார்த்தீனியம் செடிகளை அடியோடு ஒழிக்க ஒரே வழி, நவீன முறையில் ரசாயனக் கொல்லிகளை உபயோகிப்பதுதான்.

பேட்டி: "சிக்கி" பார்த்தினியம் செடி, கனி-படம் உதவி: டாக்டர் கோவிந்தராஜுலு

தண்ணீருக்குத் தடை!

ஒரு கிராமத்தில் உள்ள நிலச்சுவான்தார் அதிக வட்டிக்குப் பணம் கொடுத்து கொள்ளையாகச் சம்பாதிப்பவர். கிராமத்தைச் சேர்ந்த இளைஞன், அவரிடம் இந்த முறையில் வகையாக மாட்டிக்கொள்ள, அவர் அவன் மனைவியைக் கேட்க, அப்பாக்கித் தோட்டாவால் நிலச்சுவான்தாரின் உயிர் போகிறது. போலீசுக்குப் பயந்து வேறு ஒரு கிராமத்துக்கு வருகிறான் இளைஞன். அது தண்ணீர் பார்க்காத கிராமம். மக்களோடு அவனும் புதிய முறையில் முயற்சி செய்யத் தண்ணீர் பெருகுகிறது. அவனை மக்கள் பாராட்டும் கட்டத்தில்தான் தாங்கள் ஒரு கொலைக் குற்றவாளிக்குப் பாதுகாப்பு அளித்து வருவதை அவர்கள் உணருகிறார்கள். ஆனால் அவன் செய்த உதவிக்காகப் போலீசிடம்



அவனைக் காட்டித் தராமல் மறைக்கின்றனர். இருந்தும் போலீஸ் விடாமல் துரத்த, பல கிராமங்கள் ஓடி, இறுதியில் தனக்கே தண்ணீர் கிடைக்காமல் இறக்கிறான்.

இதுதான் கோமல் சாமிநாதன் எழுதிய ''தண்ணீர்! தண்ணீர்!'' என்ற நாடகத்தின் கதை. சென்னையில் இந்நாடகத்துக்குப் போலீஸ் தடை விதித்துள்ளது!

இதைப் பற்றிக் கோமலிடம் விசாரித்தபோது:

''26–9–80 அன்று அரங்கேற வேண்டிய நாடகம் இது. இந்தத் தடையால் ஏற்கனவே புக் செய்த ஏழு நிகழ்ச்சிகளை ஒத்திப் போட வேண்டியதாயிற்று.

''சென்னையில் ஒரு நாடகம் அரங்கேறு முன்னர், போலீஸ் துறையில் உள்ள ஒரு குழு நாடகத்தின் வசனங்களைப்பார்த்து ஒப்புதல் அளித்து லைசென்ஸ் வழங்க வேண்டும். இது வன்முறையைத் தூண்டும் விதத்தில் அமைந்திருக்கிறதாம். கதைப் போக்கை மாற்றச் சொன்னார்கள். நான் மறுத்தேன். ஒரு நல்ல கருத்தைச் சொல்ல முற்பட்டால் இந்தக் கதிதானா? என் முந்தைய நாடகம் சுவர்க்க பூமியும் இதேபோல் ஆபத்துக்கு உள்ளாகிப் பின்பு தப்பித்தது.

''கொலைகாரனைக் கிராமத்தார் மறைத்து வைத்திருப்பது குற்றம் என்பது அவர்கள் வாதம். நான் இதற்கு மேஜர் சந்திரகாந்த் நாடகத்தை நினைவு படுத்தினேன். பதில் இல்லை.

''இந்த நாடகத்தில் ஒரு புரட்சிக்காரன் பாத்திரம் வருகிறது. அதை நீக்கச் சொன்னார்கள். அவர்கள் விருப்பப்படியே இதில் இருந்த கம்யூனிஸ்ட் கட்சி, சிவப்புக் கொடி ஊர்வலம் போன்றவற்றை நீக்கியுள்ளேன்.

''ஆயின் பிரச்னை இதைவிட ஆழமானது என்று கருதுகிறேன். ஒரு தனிப்பட்ட மனிதனின் கற்பனையிலிருந்து வந்த கருத்துக்குத் தடை விதிக்க அல்லது அதை எடைபோடப் போலீசுக்கு என்ன தகுதி இருக்கிறது? அப்புறம் கருத்துச் சுதந்திரம் என்ன வேண்டிக் கிடக்கிறது? அதென்னமோ தெரியவில்லை, போலீசைப் பற்றி எழுதினாலே அவர்களுக்குப் பொசுக்கென்று கோபம் வருகிறது. வேறு யாரைப் பற்றி எப்படி எழுதினாலும் அவர்கள் தடுப்பதில்லை. உதாரணமாக இந்த நாடகத்தில் நான் பத்திரிகைக்காரர்களையும் கிண்டல் செய்து எழுதிய வசனங்களை ரொம்பவும் ரசித்தார்கள்!

''இதைவிட இன்னொரு வேடிக்கை உண்டு. போலீஸ் கொடுக்கும் லைசென்ஸ் சென்னை நகருக்கு மட்டும்தான். தஞ்சாவூரில் நாடகம் நடத்த வேணுமானால் அந்த மாவட்டக் கலெக்டர் வசனங்களை ஆராய வேண்டும். அதுவும் மூன்று பிரதிகள் கேட்பார். இப்படிப் பிரதிகள் எடுக்கவே ஏராளமாய்ச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது.

''மேற்கு வங்கத்தில் நாடகத்துக்கு சென்ஸார் என்ற பேச்சே கிடையாது.

''இங்கும் இதே நாடகத்தை நான், நாவலாக எழுதி வெளியிட்டால் தடை இல்லை. இந்த ரீதியில் நாடக உலகத்துக்கு எப்போது விமோசனம் பிறக்கும்?

''இப்போது திருப்பத்தூர் வெடி குண்டு நிகழ்ச்சி வேறு இந்தத் தடைக்கு ஒரு காரணம் என்கிறார்கள். எப்படியோ விரைவில் நாடகம் அரங்கேறும் என்று நம்பிக்கொண்டிருக்கிறேன்!''

பேட்டி: லிக்கி


"ஈகிள் ப்ரின்ஸஸ் பற்றி சொல்லவும் வேண்டுமா?"



"இது அழகானது..."
கவர்ச்சியான ஒரு விருந்தோம்பி.




"இது அரியது..."
தூசு உட்செல்லாது மூடுகிறது...24 மணி நேரத்திற்குமேல் சூடு குறையாது காக்கிறது.




"என்ன இருந்தாலும் இது ஈகிள் வாக்யூம் ஃப்ளாஸ்க் அல்லவா?"

ஈகிள் வரிசையிலே 123 வேறுவேறு தினுசுகள்.

CASE-113-182 TAM


எம்.பி.க்கள்
தமிழ்நாடு
உ.பி
பெரிய அதிகாரிகள்
இ.காங்கிரஸ் தலைமையின் 'கை' வரிசை


ஈரான்
ஈராக்
உலக நாடுகள்
யுத்தம்


தெருத்தெருக்கெல்லாம் போராட்டம்
நாராயணசாமி நாயுடு
நம்ம வயல்லே அமோக விளைச்சல்!

1980 அக்டோபர் 19
ரௌத்திரி ஐப்பசி 3
மலர்: 39 இதழ்: 12



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா • பாரதியார்

ஆபத்தான யோசனை!

எழுத்தாளர் சங்கம் ஆண்டுவிழா கொண்டாடுவதிலோ அதில் பிரதமர் கலந்துகொள்வதிலோ பிழை ஏதும் இல்லை. ஆனால் அவர்கள் அந்த விழாவைக் கொண்டாடிய முறையில்தான் கோளாறு..

பிரதமரின் சௌகரியத்தை உத்தேசித்து விழா (மன்னிக்கவும்;கூட்டம்) கிண்டி ராஜபவனத்தில் நடந்தது. நடந்த நேரம் பிற்பகல். பெரும்பாலான எழுத்தாளர்களுக்கு அழைப்பு இல்லை. பிரதமருக்குரிய பாதுகாப்பு கருதி பலத்த காவல் ஏற்பாடுகள் இருக்கும்போது அப்பாவி எழுத்தாளன் கூட்டத்தில் கலந்து கொள்வதாவது?

முன்னும் பின்னும் நிகழ்ச்சிகள் இல்லாத, இரண்டு மணி நேர இருட்டறை நிகழ்ச்சிக்கு 'மகாநாடு' என்ற மகுடம் எதற்கு?

சென்னை-5

எஸ். வாணிசங்கர்

கல்கி நேயர் வாணி சங்கரின் மனத்தாங்கல் நியாயமானது. நமக்கு இன்னொரு குறையும் உண்டு. அது அன்று அகிலன் பேசியதன்தொடர்பாக உருவானது. எழுத்தாளர் சங்கத்தின் துணைத் தலைவர் என்ற முறையில் வரவேற்புரை வழங்கிய அவர், ''நல்ல எழுத்தாளர்களும் கவிஞர்களும் படிப்படியாகத் தங்கள் செல்வாக்கை இழந்து வருகின்றனர்'' என்றார். சொல்லிவிட்டுப் போகட்டும். அடுத்து, ''தமிழ்ப் பத்திரிகைகள் போட்டா போட்டி, வியாபார நோக்கு காரணமாக ஆபாசமாகி வருகின்றன'' என்றார். இத்துடன் நிறுத்திக் கொண்டிருந்தாலும் பிரச்னை இல்லை. தொடர்ந்து, ''விஷமமானதும் கலப்படமானதுமான எழுத்துக்களை அரசு கட்டுப்படுத்த முன்வருமேயானால் அதற்கு எழுத்தாளர் சங்கம் முழு மனத்துடன் ஆதரவு தரும்'' என்று ஒரு போடு போட்டார்!

இங்கேதான் அகிலன் ஆபத்தான பாதையில் திசை திரும்பி விட்டார். ''எழுத்தாளர் சங்கம் முழு மனத்துடன் ஆதரவு தரும்'' என்று எந்த அடிப்படையில் கூறினார் அகிலன்? அறிய விரும்புகிறோம். இது குறித்து பூர்வாங்கக் கூட்டம் நடத்தினார்களா? சங்க அங்கத்தினர்களின் அபிப்பிராயங்களைக் கோரிப் பெற்றார்களா? வோட்டெடுப்பு நடத்தினார்களா? விவரம் வேண்டுகிறோம்.

நல்லவேளை, அகிலனின் ஆபத்தான யோசனையைப் பிரதமரே ஏற்காமல் நிராகரித்து விட்டார். அவர் சொன்னார்:

''இந்த யோசனையில் உள்ள ஆபத்துக்களை நான் உணர்ந்து எச்சரிக்கையுடன் இருக்கிறேன். கட்டுப்படுத்துவது என்று ஆரம்பித்தால் எதைக் கட்டுப்படுத்துவது, எதைக் கட்டுப்படுத்தக் கூடாது என்று அறிவது ரொம்பக் கஷ்டமாகிவிடும். எது நல்லது, எது கெட்டது; எது சரி, எது தப்பு என்று நிர்ணயிக்கும் திறமை மிக்க ஆண்களும் பெண்களுமே இன்று தேசத்துக்குத் தேவை. இதை அரசு மக்களுக்காகச் செய்து கொண்டிருக்க முடியாது; கூடாது!''

பிரதமரின் இந்தப் பொன்னான கருத்தை வரவேற்கிறோம்; வாழ்த்துகிறோம். பிரதமர் பொதுவாக மக்களைக் குறிப்பிட்டார். பத்திரிகை ஆசிரியர்களும் மக்களில் உள்ளடக்கம்தான். அரசியலில் பிரதமருக்குப் பேராதரவு தரும் பத்திரிகை ஆசிரியர்கள், இலக்கியத்திலும் நல்லது கெட்டது குறித்துச் சிந்தித்துச் செயல்படட்டும்.

அத்தியாயம் 12

அர்ஜுன் போர்ட்டிகோவில் காரை நிறுத்திவிட்டு இறங்கினான். பின் சீட்டில் மல்லிகா தூங்கிக் கொண்டிருந்தாள். மின்சார விளக்கின் ஒளி காரினுள் லேசாகப் படர, அவன் அவளைப் பார்த்தான். சாந்தம் நிலவும் முகத்தில் ஒருவிதத் திருப்தி பிரதிபலிப்பதாகப் பட்டது. அவள் அவனை நம்பி வந்திருக்கிறாள். அவன் ஒரு நல்ல மனம் படைத்தவன் என்று தன்னையே முழுக்க, முழுக்க அவனிடம் ஒப்படைத்துக் கொண்டிருக்கிறாள். அவனுக்கு எதிரிகள் இரண்டே இரண்டு பேர். ஒன்று அவனைப் பெற்ற தாயார். ஒரு ஏழைக் குமாஸ்தா சம்பந்தியாக வர என்றுமே ஒப்புக்கொள்ள இயலாதவள். இன்னொன்று அவனேதான். இது வரையில் எந்தப் பெண்ணும் அவனை மணமேடைக்கு ஈர்த்ததில்லை. மல்லிகா ஈர்த்திருப்பதாகத் தோன்றுகிறது. ஆனால் உண்மையிலேயே மனம் லயித்திருக்கிறதா? அவன் தன்மீதே சந்தேகம் கொண்டான்.

''மல்லிகா!''

மறு கணமே அவள் துள்ளிக் கொண்டு எழுந்தாள். கண் விழித்ததும் கலங்கிப் போனாள்; தான் எங்கே இருக்கிறோம் என்ற பிரக்ஞை எளிதில் வரவில்லை.


''வீடு வந்துவிட்டது மல்லிகா.''

'சீட்டில் உட்கார்ந்த அவள், ''தூங்கி விட்டேன்'' என்றாள்.

''அசதி.... வா, உள்ளே போவோம்...''

''ரொம்பஸாரி, அர்ஜுன். என்னையறியாம....''

''டோண்ட்பி ஸ்டுபிட்.... ராத்திரி பூரா ரயிலில் தூங்க



வில்லே. 'பகலெல்லாம் அலேச்சல்.... வா....''

அவன் முன்னே நடக்க அவள் பின்-தொடர்ந்தாள். தூக்கம் கலேயாத கண்ணில் போர்ட்டிகோ படவில்லே. பெரிய திண்ணேயும் அதில் கவரோரமாய்க் கிடக்கும் கூடை நாற்காலிகளும் தெரியவில்லே. கண் முன் ஒரு பாயும் தலேயணேயும்தான் தெரிந்தது.

ஹாலே அடைந்ததும் ''என்ன மாமி சாப்பிட்டாச்சா?'' என்றான் அர்ஜுன். பிறகு மல்லிகாவைப் பார்த்து, ''இவதான் வேம்பு



GH

பி.வி.ஆர்

... இவ இல்லேன்னு நாங்க என்ன ...செய்வோமோ?'' என்றான்.

வேம்புமாமி மேலும் கீழும் பார்த்தாள். அழகான ஒரு பெண். கழுத்தில் தாலிக்கயிறோ, கொடியோ இல்லே. காலில் மெட்டி இல்லே. மாப்பிள்ளே ராஜாமணியின் செல்லப்பிள்ளே பெண்களுடன் சுற்றுகிறவன் அல்ல என்று இதுவரையில் நினேத்திருந்த அவள் திடீரென்று வெறுப்பை உமிழ்ந்தாள்.

''யார் இவள்?''

''நம்ம ஊர்தான்.''

''பேரு?''

''மல்லிகா.''

''எதுக்கு அழைச்சுக்கிட்டு வந்திருக்கே?''

''எல்லாம் விவரமா அப்புறமா, நீ அரிசியிலே கல் பொறுக்கிக்கிட்டிருக்கிறப்போ சொல்றேன். பெட்ரூமை ஒழிச்சுக் கொடு... அவ அசதியா இருக்கா.''

''இன்னிக்கு ஒரு நாளா?''

''முதல்லே இன்னிய ராத்திரியைப் பற்றிக் கவலேப் படுவோம்.''

''நீ?'' என்றாள் வேம்பு மாமி.

அவளுடைய பார்வையில் பிரதிபலிக்கும் எரிச்சல் கேள்வியை விளக்கியது.

''நான் மாடியில் என் ரூமில் படுத்துக் கொள்கிறேன், பயப்படாதே!''

''நான் பெட்ரூமைச் சரி செய்கிறேன். அதுவரையில் இங்கே உட்காரு. பாத்ரூம் பெட்ரூமுக்கு அட்டாச்சுடு... வேணும்னு கைகால் கழுவிக்கோ...''

மல்லிகா வாய் திறவாமல் பாத்ரூமை நோக்கி நடந்தாள்.

''எனக்குத் துளிக்கூடப் பிடிக்கலே!'' என்றாள் வேம்பு மாமி.

''என்ன பிடிக்கலே?''

''ஒரு வயசு வந்த பெண்ணே ஒரு வயசான பிள்ளே அழைக்கிச்சுட்டு வந்தது!''

''பின்னே நான் உன்னை மாதிரி வயசான மாமியையா அழைச்சுட்டு வர முடியும்?''

''உன் அப்பாவுக்குத் தெரிஞ்சா நானும் உடந்தைன்னு என்னை வெட்டிப்போடுவார்.''

''இவ இப்ப அவர் கிட்டேதான் வேலை பார்க்கிறா. மாசம் முந்நூறு ரூபா.''

''அவ வீடு என்னாச்சாம்?''

''மாமி!''

''என்ன?''

''நீ இப்படிக் கேள்வி கேக்கறதைப் பார்த்தால் எனக்கு ஒரு சின்னச் சந்தேகம் உண்டாகிறது.''

''என்ன சந்தேகம்?''

''யார் யஜமானன் யார் கை நீட்டிச் சம்பளம் வாங்குகிறான்னு....''

''நாளைக்கே போயிடறேன்.''

''ஓ.கே. போயிடு... பின்னாலேயே வக்கீல் நோட்டீஸும் வரும். உன் பிள்ளையின் ஆபீஸுக்குக் கோர்ட்லேந்து ஆர்டர் போகும். அவர்கள் மாசா மாசம் நானூறு நானூறு பிடிச்சு எனக்கு அனுப்பிடுவா....''

வேம்பு மாமி ஒரு கணம் அடங்கினாலும் குமுறல் லேசாக ஒலித்தது.

அர்ஜுன் தொடர்ந்தான்.

''இருபது வருஷமா எங்க குடும்பத்தோட பழகியிருக்கே. உன் வீட்டிலே என்ன நல்லது பொல்லாதது நடந்தாலும் எங்களைத்தான் அண்டி வந்திருக்கே... உன்னை என் அம்மா கூடப் பிறவாத தங்கை மாதிரி நடத்தி வர்றா.... இந்த வீட்டைப் பார்த்துண்டு வேளா வேளைக்குச் சாப்பிட்டுண்டு இருக்க. மாசம் நாத்தம்பது வாங்கிக்கிறே... இப்ப உன் நாக்கு நீள்றது. ஏதோ உரிமை உள்ளவள் மாதிரிப் பேசறே... நான் நினைச்சேன்னா இப்பவே, இந்த நிமிஷமே இந்த ஹாபிபுல்லா சாலையின் நடுவே நிக்க வைக்க முடியும். நீ உன் பிள்ளை கிட்டேயும் போக முடியாது. உன் மருமகள் வாசல்லே தண்ணி தெளிச்சு உன்னை விரட்டுவா....''

''குத்திக் குத்தி....''

''யெஸ்... அவளுக்கு முன்னாடி என்னை அடக்கற மாதிரிப் பார்த்தே. பேசினே? அவ கிட்டேயும் சுமுகமா ரெண்டு வார்த்தை நீ பேசலே. போ. அவ வர்றா... பெட் ரூமைச் சரிசெய். புது பெட்ஷீட். தலைகாணி உறை எல்லாம் போடு. அவ காலையிலே எழுந்ததும் காப்பி கொடு. சூடா ஸ்ட்ராங்கா இருந்தாத்தான் அவளுக்குப் பிடிக்கும்....''

அர்ஜுன் மாடி ஏறினான். மல்லிகாவுக்கு 'குட்நைட்' சொல்லவில்லையே என்ற ஆதங்கம் உண்டாயிற்று. மனத்துக்குள் சொல்லிக்கொண்டான்.

மல்லிகா சோபாவில் உட்கார்ந்தாள். அர்ஜுன் மாடி ஏறிச் செல்வதைக் கண்ட அவள், அவன் மீண்டும் இறங்கி வருவான் என்று தான் நினைத்தாள். அர்ஜுனைக் காணோம்.

இடீரென்று குரல் கேட்டது. தகரத்தில் உடைந்த சில்லோட்டால் இழுப்பது போன்ற ஒலி.

''உன் சயன அறை ரெடி'' என்றாள் வேம்பு மாமி.

மல்லிகா எழுந்தாள். நகர்ந்தாள். சயன அறை!

வேம்பு மாமி அவள் அருகே வந்தாள்.

''எனக்கு உள்ளே ஒண்ணு வைச்சுண்டு வெளியே ஒண்ணு பேசத் தெரியாது.''

''அப்படியா?''

''இளக்காரமா கேள்வி கேட்காதே! நீ யார்?''

''அதான் அர்ஜுன் சொன்னாரே! மல்லிகா''

''எதுக்கு நீ இங்கே வந்திருக்கே?''

வேம்பு மாமியின் குரல், மாடியிலிருக்கும் அர்ஜுன் காதில் கொஞ்சம்கூட விழக் கூடாது என்று தாழ்ந்திருந்தது.

இதை மல்லிகா புரிந்து கொண்டாள்.

''மிஸ்டர் அர்ஜுன்!'' என்று கத்தினாள்.

''ஏன் கத்தறே?''

''உங்க கேள்விகளுக்கு நான் பதில் சொல்லக் கூடாதுன்னு ஆர்டர் போட்டிருக்கார். அவரேதான் சொல்லுவாராம். அதான்....''

''தயவு செய்து அவனைக் கூப்பிடாதே!''

''ஒரு பாயும் சாதாரண பஞ்சு தலையணையும் இருக்கா?''

''ஏன்?''

''எனக்கு ரப்பர் மெத்தையில் படுத்து, கட்டிலில் தூங்கிப் பழக்கமில்லே. நான் ஒரு சாமான்யன்.... ஸாரி.... சாமான்னியள்.''

''இல்லே.''

''அப்ப பெட்ஷீட்டைக் கீழே போட்டுண்டு கையை வெச்சுண்டு தூங்கிக்கிறேன்.''

''அர்ஜுனுக்குத் தெரிஞ்சா என்னைக் கிழிக்கப் போடுவான்.''

''எப்படித் தெரியும்... நான்தான் உள்ளே தாழ்ப்பாள் போட்டுக்கப் போறேனே.''

''நீ யார்?''

''என் கிட்டே நீங்க ஒரு கேள்விகூடக் கேட்கப்படாது.''

''மாப்பிள்ளை ராஜாமணியின் பரம்பரை ரொம்ப ஒசத்தி....''

''அதைத் தாழ்த்த அர்ஜுன் பாடு படுகிறார்னு சொல்றேன். சரி. இதை அவரிடம் கார்த்தாலே சொல்லிடறேன், குட்!''

''என்னை குட்னு இதுவரை யாருமே சொன்னதில்லே. ஜயாவுக்கு நான் தங்கை மாதிரி.''

''ஜயாவா... ஓ. அர்ஜுனின் அம்மா...''

''இருபது வருஷப் பழக்கம்.''

''கவலைப்படாதீங்க. உங்களைப் பற்றிய எல்லா விவரங்களையும் நான் நாளைக்கு அவரிடமிருந்தே தெரிஞ்சிக்கிறேன்....''

''எங்க ஆபீஸிலே லஞ்ச் டயத்தை எடுத்துட்டாங்க!''

''அடடா ஏன்?''

''அதுக்குப் பதிலா 'லஞ்ச' டைம்னு மாத்தியாச்சு!''

-அ. இராமதாஸ்



மகரிஷி

ஹேமா ஆனந்ததீர்த்தன்

கண்ணதாசன்

இந்திரா பார்த்தசாரதி

ம.பொ.சி

கிருபானந்த வாரியார்

கல்கி நவம்பர் 92

தீபாவளி சிறப்பிதழ்

அதிக பக்கங்கள்

சங்கராபரணம் பாடும் சிங்காரச் சேலைகள்...

பண்டிகைக்குப் பட்டுகள்,
திருமணப் புடவைகள்,
கைத்தறிப் பருத்தி வகைகள்...

சிறப்புத் தள்ளுபடி 10%

அக்டோபர் 16 முதல்.

ஹேண்ட்லூம் ஹவுஸில் காஞ்சீபுரம், பனாரஸ், பெங்கால், போச்சம்பள்ளி, கத்வால், கோயம்புத்தூர் முதலிய இடங்களில் தயாரான மிகச் சிறந்த புடவை வகைகள் உள்ளன. மற்றும் கஃப்தான், ஜிப்பா, குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் ஏற்ற ரெடிமேட் ஆடைகள், படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள் உள்ளன.

வாருங்கள்:

ஹேண்ட்லூம் ஹவுஸ்

9, ரத்தன பஜார்,
சென்னை 600 003.

• ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்.



ADWAVE/HH/1466

வேம்பு மாமிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அவளுடைய ஐம்பது வயதில் எத்தனையோ பேர்களை வெறும் வாயாலும் பார்வையாலுமே சமாளித்திருக்கிறாள். அவளை முறியடித்த முதல் பெண் அவள் மருமகள். இரண்டாவது, இவள்— மல்லிகா.

மறு நாள்.

இரண்டு நாட்கள் கழித்து மூன்றும் நாள்.

வேம்பு மாமி இருவரையும் நன்றாகப் புரிந்து கொண்டாள். இதுவரையில் கலியாணம் தேவையில்லாத சடங்கு என்று அம்மாவிடம் அடம்பிடித்து வந்த அர்ஜுன் மல்லிகாவிடம் மனத்தை அடகு வைத்து விட்டான். ஏற்கவே மாப்பிள்ளை ராஜாமணி தம் சென்னை வியாபாரத்தை அவனிடம் ஒப்படைக்கப் போவதாகச் சொல்லி விட்டார். அவர்கள் பேசிக்கொள்ளுவதைக் கேட்டால் மாப்பிள்ளை அவர்களுக்கு ஆதரவு அளிப்பதாகத் தோன்றுகிறது. இதை அறியாத ஜயா அறிந்ததும் என்ன செய்வாள்?

திடீரென்று கார் சத்தம் கேட்கவே வேம்பு மாமி ஹாலுக்கு விரைந்து வந்தாள்.

''இதுதானே மாப்பிள்ளை ராஜாமணியின் பங்களா?''

''ஆமாம். அவர் ஜி.எச்.ல் இருக்கிறார்.''

''அது எனக்குத் தெரியும். அர்ஜுன் இருக்காரா?''

''இல்லை. நீங்கள் யார்?''

''ஜயா எப்ப வர்றாள்?''

''தகவல் இல்லை. நீங்க யார்னு சொல்லலையே.''

''அதைச் சொல்றதுக்கு முன்னாடி, நீ யார்னு தெரிஞ்சுண்டா மேற்கொண்டு பேசச் சௌகரியமா இருக்கும்...''

''நான் ஜயாவுக்குத் தங்கை மாதிரி.''

''மாதிரின்னா?''

''அவ்வளவு நெருங்கின பழக்கம். இருபது வருஷமா.''

''நீதான் இந்த பங்களாவைப் பார்த்துக் கொண்டிருயாக்கும்.''

''ஆமாம். என் பேரு வேம்பு.''

''பணக்காரப் பெயராத் தெரியலையே...''

வேம்பு பதில் சொல்ல வாயெடுத்தாள். ஆனால் வந்தவளை விரோதித்துக் கொள்ளத் தைரியம் வரவில்லை.

''உனக்கு அட்வகேட், லீடிங் இன்கம்டாக்ஸ் லாயர் குஞ்சிதபாதத்தைத் தெரியுமா?''

''தெரியாது.''

''இன்கம்டாக்ஸ் கட்டறவா எல்லோருக்கும் அவரைத் தெரியும். அது போகட்டும். நான் அவருடைய மிஸஸ். என் பெயர் சுந்தரி.''

''உள்ளே வாருங்கள்.''

''இவ்வளவு சொன்னப்புறம்தான் உள்ளே வரச் சொல்லத் தோணித்தாக்கும்!''

சுந்தரி சோபாவில் உட்கார்ந்தாள்.

''மாப்பிள்ளை மூணு வருஷம் முன்னாலே இன்கம் டாக்ஸில் மாட்டிண்டார். நாலு லட்சம் நீட்டினா. கஜேந்திரன் மாதிரி 'ஓ'ன்னு அலறிண்டு ஓடிவந்தார். என்ன நடந்ததுன்னு நினைக்கிறே? சுப்ரீம் கோர்ட் வரை எங்க வீட்டுக்காரர் போனார். சுப்ரீம் கோர்ட் எங்கே இருக்கு தெரியுமோ?''



சீனாவில் பிள்ளையாரின் பெயர் 'க்வான்ஷிடியிக்'
ஜப்பானில் 'விநாயக்ஷா'
பர்மாவில் 'மகாபிணி'
கம்போடியாவில் 'ப்ரா கணேஷ்'
மங்கோலியாவில் 'தோத்கார்-அவுன் காகான்'
தகவல் : இராமகுமாரசாமி
ஆதாரம்: வெற்றுக் கடவுள் பிள்ளையார்

'டில்லி'ன்னு சொல்ல வாயெடுத்த வேம்பு மாமி ''லண்டன்'' என்றாள்.

''தப்பு...தப்பு... நான் உன் கிட்டே கேஸ் விஷயமெல்லாம் பேசக் கூடாது... நான் வந்த காரியம்....''

''சொல்லுங்கோ...''

''ஜயா எப்படி உன்னை வைச்சுண்டிருக்கா... படி ஏறி வந்தவாளை, தாக சாந்திக்கு ஒரு கூல்ட்ரிங்க்ஸ் கொடுக்கிற பரம்பரை ஆச்சே மாப்பிள்ளை பரம்பரை! இருக்கட்டும்...''

'இருக்கட்டும்' என்கிற வார்த்தை அடித்தளத்திலிருந்து ஒலித்தது.

''இது உங்க வீடு மாதிரி. நீங்களே எது வேணுமானாலும்.....''

வேம்பு மாமியின் யுக்தி பலிக்கவில்லை.

''ஏதேனும் ஜூஸ் கொண்டு வா... டெலிபோன் எங்கே இருக்கு?''

''அதோ அந்த ரூமில்.''

''ஜயா நெம்பர் எனக்குத் தெரியும்; இருந்தாலும் நீ சொல்லு.''

வேம்பு மாமி சொன்னாள்.

டெலிபோன் அறைக்குச் சென்ற உடனேயே திரும்பி வந்தாள் சுந்தரி.

''என்ன பூட்டியிருக்கு?''

''அர்ஜுன் பூட்டிட்டுப் போயிடறார். என் பெண் பம்பாயில் இருக்கிறாள். நான் அவளோட டைரக்டா பேசி, டெலிபோன் டிபார்ட்மெண்டுக்கு ஒரு புதுக் கட்டிடம் கட்ட வழி பண்ணிடுவேனோன்னு பயம்!''

''பூட்டியிருக்குன்னு நீ ஏன் முதல்லேயே சொல்லலை?''

''நீங்க கேட்கலை... ஜூஸ் கொண்டு வரேன்....''

''நீயே குடு.... தானேக்கு ஜயா வர்றா... நான் அவகிட்டப் பேசிக்கொள்றேன். அவளுக்கு நீ தங்கை மாதிரித்தான். ஆனா நான் சம்பந்தி மாதிரி இல்லை! சம்பந்தியேதான்!''

''என்ன?''

சுந்தரி பதில் பேசாமல் இறங்கி நடந்தாள். காரில் ஏறிக்கொண்டாள். வேம்பு மலைத்து நின்றாள். அப்படியானால்?

இந்த மல்லிகா?

சுந்தரியின் பெண்ணா?

ஒரு பெரிய லாயரின் மகளா? (தொடரும்)

திரு சிவாஜி கணேசன் ''பொம்மை'' அக்டோபர் இதழில் ''மனம் திறந்துபேசுகிறேன்'' என்ற தலைப்பில் எழுதியிருப்பதிலிருந்து சில பகுதிகள்:

நான் ஒரு 'ஆர்ட்டிஸ்ட்!'

—சிவாஜி கணேசன்

என் திரையுலகப் பிரவேசம்...

அது அனைவரும் அறிந்தது. 1952ல் நடந்தது.

என் நல்ல நேரம் கதாநாயகனாகவே அந்தப் 'பராசக்தி' அறிமுகப்படுத்திவிட்டான்!

. கதாநாயகனாக நடித்து வந்தபோதே வில்லனாகவும் நடித்தேன்.

''வில்லன் வேஷமா, என்னைப் போடச் சொல்கிறீர்களே? நான் கதாநாயகனாயிற்றே! இந்த இலக்கணம் வழுவலாமா?'' என்று நான் அப்போது வாய் திறக்கவில்லை. இப்போதும் வாயைத் திறக்க மாட்டேன்.

கதாநாயகனாகத்தான் நடிப்பேன் என்று அன்றும் அடம் பிடித்ததில்லை; இன்றும் அந்தப் பிடிவாதம் என்னிடம் இல்லை.

'வயதுக்கேற்ற வேஷம் தானே போட வேண்டும்' என்ற குரல் இப்போது எழுந்திருக்கிறது.

வயதுக்கேற்ற வேடம் என்றால்?

என் ஐம்பத்திரண்டாவது வயதில் நான் போட வேண்டியது தாத்தா வேடம் என்கிறார்களா?

என்னைவிட வயதில் மூத்தவர்கள் கதாநாயகனாக நடித்தார்களே?

அப்போது எப்படி ஒப்புக் கொண்டார்கள்?

'முதல் தேதி' என்ற ஒரு படம் வந்ததே, நினைவுக்கு வருகிறதா?

நான் பட உலகுக்கு வந்த ஆரம்ப காலத்தில் நல்ல இளம் வயதில் பெரிய குடும்பஸ்தனாக, வயதான வேடத்தில் அதில் நடித்தேன்.

அப்போது யாரும் 'இந்த வயதில் இந்த வேஷம் ஏன்?' என்று கேட்கவில்லை!

அப்படிக் கேட்கவில்லையே என்று நான் வருத்தப்படவும் .இல்லை.

ஏன்?

நான் ஒரு நடிகன். என் தொழில் நடிப்பு. ஏற்கும் எந்த வேஷத்தையும் என் திறமையின் முழு சக்தியையும் உபயோகித்து நடிக்க வேண்டும் என்ற கொள்கை உடையவன் நான்.

இந்தக் கொள்கை அன்றும் — இன்றும்— நாளையும் அப்படியேதான் இருக்கும்!

என்றுமே, 'இவரைப் போடு, அவரைப் போடு, அந்த ஆள்தான் கதை வசனம் எழுத வேண்டும். இன்னார்தான் டைரக்ட் செய்ய வேண்டும்' என்று எவருக்கும் நான் கட்டளையிட்டதில்லை; கட்டாயப்படுத்தியதும் இல்லை!

பத்திரிகை ஆசிரியர்கள் நானும் ஒரு மனிதன் என்பதை,என்னைப் பார்க்க வேண்டும். எனக்கும் ஆசாபாசங்கள் உண்டு. அதை மறக்க வேண்டாம்;

இனிமேல் கதாசிரியர்கள்,எழுத்தாளர்கள் புதிய பாத்திரங்களை உருவாக்கினால் நான் நடிக்கத் தயாராக இருக்கிறேன்.

எனக்கேற்ற புதுமையான பாத்திரங்களை உருவாக்கிக் கொடுங்கள்.

என் திறமைக்குச் சவாலாக அமைய வேண்டும் என்ற மாதிரியில் வேடங்கள் கொடுங்கள்.

மறுத்தேனா?

மறுக்கிறேனா?

மறுப்பேனா?


'இந்த வேடத்தை என்னால் நடிக்க முடியாது' என்று ஒதுக்கித் தள்ளியது இன்று வரை என்னிடம் நடக்காத ஒன்று.

இனிமேல் காதல் டூயட்டுகள் வேண்டாம் என்கிறீர்களா? ஓ. கே.!

ஒன்று மட்டும் மனம் விட்டுச் சொல்லிக் கொள்வேன்.

மக்கள் என்னை வெறுத்து, என் படங்களைப் பார்க்க மறுப்பதாக என்று நான் அறிகிறேனோ அன்றே பட உலகை விட்டு நான் விலகி விடுவேன்.

நான் என்றுமே என்னை உயர்வாக, பெரிய நடிகனாக, ஒரு மாபெரும் சகாப்தமாக நினைத்





கல்கி மாதாந்திரப் பரிசுத்திட்டம்

(அக்டோபர்)

திரைப்பட ரேஸின் முக்கிய குதிரைகளுக்குப் பின்வருமாறு நம்பர்கள் தரப்பட்டுள்ளன: 1—டைரக்டர்; 2—ஒளிப் பதிவு; 3—ஒலிப் பதிவு; 4—இசை அமைப்பு; 5—நடிப்பு; 6—கதை வசனம்.

நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:

வாரம் ஒரு படம் வீதம் நாலு வாரத்துக்கு நாலு படங்கள் குறிப்பிடுகிறோம். அந்தப் படத்தைப் பார்த்து வெற்றி பெறும் குதிரை நம்பரை அதற்கான கூப்பனில் குறித்துக் கொள்ளவும். நாலு வார முடிவில் நாலு கூப்பன்களையும் ஒன்றாகச் சேர்த்து உறையிலிட்டு, கல்கி, மாதாந்திரப் பரிசுத் திட்டம், தபால் பெட்டி எண் 3159, சென்னை—32 என்ற விலாசத்துக்கு அனுப்பவும். முடிவு தேதி நவம்பர் 20. நாலு ரேஸ்களிலும் சரியான குதிரையைத் தேர்ந்தெடுத்தவருக்குப் பரிசு ரூ. 1000. சரியான விடையை ஒன்றுக்கு மேற்பட்டவர் எழுதினால் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படும்.

மூன்றாவது படம்: **வள்ளி மயில்**

ஜெயிக்கும் குதிரை எண்: ....

என் பெயர் ....

விலாசம் ....

....

....

கையெழுத்து ....

துக்கொண்டதில்லை.... நினைக்கவும் மாட்டேன்.

என்னை உயர்வாக எண்ணித் தற்பெருமை அடித்துக் கொண்டதும் இல்லை. அது எனக்குப் பிடிக்காது.

நான் ஒரு ஆர்ட்டிஸ்ட்.

இந்த நினைப்புத்தான் என் இதயத்தில் இருக்கிறது. அவ்வளவே!

[''வயதுக்கேற்ற வேடம்'' என்ற கருத்து அபத்தம் என்பதை ஒப்புக் கொள்கிறோம். இதனை சிவாஜி சகாப்தம் பற்றிய விவாதத்தில் பலர் தெள்ளத் தெளிவாக்கியுள்ளனர். ஆனால் அண்மைக் காலத்தில் வெளியான சிவாஜி நடித்த சில படங்கள் அவரது ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் விதத்தில் அமையவில்லை; அவருக்குத் தரப்பட்ட பாத்திரங்கள் அவருக்குப் பெருமை சேர்க்கும்படியாக இல்லை என்பதையும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.

இதற்கும் சிவாஜி முழுப் பொறுப்பல்ல. அவரைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாத திரை உலகின் தவறுதான். ''என் திறமைக்குச் சவாலாக அமையும் மாதிரியில் வேடங்கள் கொடுங்கள்'' என்கிறார் சிவாஜி. அவர் ஆவலைத் திரை உலகம் பூர்த்தி செய்யட்டும். நாம் பார்த்து மகிழ்வோம்.

—ஆசிரியர்]

எங்கள் பௌதிகப் பேராசிரியர் கட்டை குட்டையாக இருப்பார். நகைச் சுவையுடன் பாடங்கள் நடத்துவார். மாணவர்கள் தவறு செய்தால் வேடிக்கை செய்து அவர்கள் தப்பை உணரச் செய்வார்.

ஒரு நாள் உயரமான ஒரு மாணவன் சற்றுத் தாமதமாக வகுப்புக்கு வந்ததால் வெளியில் நின்று கொண்டிருந்தான். பாடம் சொல்லிக் கொடுப்பதை நிறுத்திவிட்டு மிக வேகமாக அம்மாணவனிடம் சென்று, ''என்ன சார், கோபமா? Why are youlookingdown on me? வகுப்புக்குள் நேராக வரவேண்டியதுதானே? கல்லூரி சம்பளம் கட்டிவிட்டீர்களானால் we teachers look up to you for our salary. So you have a right to get in if you have paid your fees.'' என்றார். அந்த மாணவனுக்கு ரொம்பவும் வெட்கமாகவும் சங்கடமாகவும் போய்விட்டது. மற்றவர்கள் 'கொல்' என்று சிரித்து விட்டார்கள். -வி. மாலதி





பசவப்பா பயந்துபோய் கெஞ்சுகிறான்
பாஸ் அவசரப் படாதீங்க! நான் தப்புக்குப் பரிகாரம் பண்ணிடறேன்.
முதல்லே இவனை விசாரி. ராம்குமார் பத்தி இவனுக்கு இன்னும் எவ்வளவு தூரம் தெரியும்னு கண்டு பிடி!
விசாரிக்கிறபடி விசாரித் தால் பயல் சொல்லாமலா போய்விடுவான்?
விசாரிக்கவே வேண்டாம். நானே சொல்றேன்—எனக்கென்ன பயம்? ராம்குமார் தனக்குத் தருவதாக பேசப்பட்ட பணம் போதாதுன்னு நினைச்சான். நீ அடையும் அபரிமிதமான லாபத்திலே பெரும் பங்கு கேட்டான்.....
007 பாலு 12
கதை: குமரன்
படம்: வினு
...தரல்லேன்னா போலீசுக்குப் போய் அப்ரூவரா சரணடை யறதா. மிரட்டினான்.
அதனாலே கடைசியா சில பிலிம் ரோல்கள் கைமாறியதும் அவனைத் தீர்த்துக் கட்டிட்டீங்க.
ரயில் விபத்திலே அவன் இறந்ததா ஊர் உலகம் நினைக்கும். ஆனா எனக்குத் தெரியும் பசவப்பா. அவனைப் பிடிச்சுத் தள்ளிட் டான்னு. அது ஓர் எச்சரிக்கையாக வும் அமைஞ்சுது. ....
யாருக்கு எச்சரிக்கை?
தேசமெங்கும் உன்னுடைய லஞ்ச வலையிலே அகப் பட்ட எத்தனையோ ராம்குமார்கள் இல்லையா? அந்த ஒற்றர்களுக்கெல் லாம் எச்சரிக்கை!
'வாலாட்டினா தொலைஞ்சீங்க'ன்னு அவங்களுக்கு ஒரு பாடம் நடத்தினீங்க!


பசவப்பா! யூ இடியட்! இந்தப் பொடியனிடம் நீ ஏமாந்ததுக்கு உன்னுடைய விரல்களை ஒவ்வொண்ணை ஒடிக்கணும்!
பாஸ்! பாஸ்! அவசரப்படாதீங்க!...
... இவன் பேசுறது அத்தனையும் யூகம்தான். தெரியலையா? யார் நம்புவாங்க? சாட்சியம் என்ன இருக்கு இவனிடம்?
சாட்சியம் தானே...?
பேஷா இருக்கே! என் அம்மாவோட பாங்க் ஸேஃப்டி லாக்கர்லே சாட்சியம் பத்திரமா இருக்கு!
என்னது!
... ஆமாம்! ராம்குமாரோட மேஜை டிராயரில் எனக்கு அகப்பட்ட அயல் நாட்டு மினி காமிரா. அதிலே சில ஃபிரேம்கள் எக்ஸ் போஸ் ஆகியும் இருக்கு. பிலிமை டெவலப் பண்ணினா கிடைக்கக்கூடிய போட்டோக்கள் உங்களுக்கு ஆயுள் தண்டனை பெற்றுத் தரும்!
பசவப்பா...!
புரியுது பாஸ்! இவன் அம்மாவையும் ஸேஃப்டி லாக்கரையும் நான் கவனிச்சுக்கறேன். ஒரே சாட்சியமான அந்தக் காமிராவைப் பத்திரமா கொண்டு வந்து உங்களிடம் சேர்ப்பிப்பது என் பொறுப்பு. கவலைப் படாதீங்க!
ஐயோ! என் அம்மாவுக்கும் என்னால் ஆபத்தா?
தொடரும்


இந்தியத் துணிகளில் சில கவர்ச்சிமிக்க, அலாதி டிசைன்களும், வண்ணச் சேர்க்கைகளும்
இந்தியாவின் கிராமங்களில் காணப்படுகின்றன. நமது ஜனத்தொகையில் 80 சத வீதத்திற்கு மேல்
கிராமங்களில் வசிக்கின்றனர். பருவகாலங்களுடனும், சடங்கு களுடனும் நிறம் இணைக்கப்பட்டு வந்தது.
இவ்வாறாக இளஞ்சிவப்பு நிறம் மணப்பெண்கள் அல்லது மங்கலத் தருணங்களில்
அணிவதற்கான, நல்ல சகுனத்திற்கு அடையாளமாக அமைந்தது. காவிநிறம்
துறவறத்தின் நிறமாகவும், மஞ்சள் வசந்தத்தின் நிறமாகவும் அமைந்தது. கடவுள்களும்
தனித்தனி நிறத்தினுல் அறியப்பட்டனர். பிரமனுக்குச் சிவப்பும், சிவனுக்கு வெண்மையும்,
விஷ்ணுவுக்கு நீலமும் நிறமாக அமைந்தன. தாவண்கெரெ காட்டன் மில்ஸ் நிறச்
சம்பந்தமான இந்தப் பழம்பெரும் பாரதப் பரம்பரையைப் பேணி, தரமான துணிகளின்
பற்பல வகைகளை தனிப்பட்ட ருசிகளுக்கேற்ப வழங்கி வருகிறது
தலைசிறந்த துணிவகைகளின் மகத்தான பரம்பரையைப் பேணிப் போற்றுகிறது
தாவண்கெரே
தி தாவண்கெரே காட்டன் மில்ஸ் லிமிடெட்
தாவண்கெரே-577 002
ஷோரூம்: காவேரி பவன், பெங்களூர் 560 009,
நாஜிபண்பேட், ஹுப்ளி 580 020.
சித்துர்கா ரோடு, தாவண்கெரே-577 002
நவராத்திரி
TA/DCM/80L/Tam

கீதா:

எத்தனையோ வருஷங்களுக்குப் பிறகு இவருக்கு இந்த எண்ணம் உதித்திருந்தது. எனக்கே ஆச்சரியமாகப் போயிற்று.

குழந்தைகளை இவர் எங்கேயும் கூட்டிப் போவதில்லை. என் அண்ணா அழைத்தாலும் சரி, அவர் தங்கை கூப்பிட்டாலும் சரி— ஏதோ ஒரு காரணம் — அனுப்ப மாட்டார்.

அப்படிப்பட்டவர் திடீரென்று எங்களைத் தேக்கடிக்கு அழைத்துப் போகப் போவதாகச் சொன்னபோது எங்களால் நம்ப முடியவில்லை.

ஒரு சனிக் கிழமை மாலை. நான், அவர், மூன்று குழந்தைகள் பஸ்ஸில் புறப்பட்டோம். குழந்தைகளுக்குப் போகும் வழியில் ஹோட்டலில் சாப்பிட வேண்டும் என்று ஆசை.

ஆனால் இவர் கண்டிப்பாகச் சொல்லியிருந்தார். ஆகவே மூன்று வேளைக்கு வேண்டிய உணவைக் கையில் தயார் செய்து கொண்டு போயிருந்தோம். நாங்கள் கொண்டு போயிருந்த லக்கேஜ் சோற்று மூட்டைதான் அதிக கனம்.

நண்பர் ஒருவர் எங்களைக் கம்பம் பஸ் நிலையத்தில் சந்தித்தார். அருகில் இருந்த லாட்ஜில் அறை போட்டிருப்பதாகச் சொன்னார். மூன்றுமணி நேரம் வெய்யிலில் பயணம் செய்தது ஒவ்வொருவர் முகமும் அவிந்துபோன கொழுக்கட்டை போல் வெம்பிக் கிடந்தது.

எங்கள் மூட்டைகளைச் சுமந்து கொண்டு— அலுத்துச் சலித்தபடி — ஹோட்டலை நோக்கி நடந்தோம்.

அங்கே கதவு பூட்டப்பட்டிருந்தது. கதவைச் சுற்றி எக்கச்சக்கமான கூட்டம். யாரோ சினிமாப் படம் பிடிக்கும் கோஷ்டியாம். ஒரு மாதமாகத் தங்கியிருந்து படம் பிடிக்கிறார்களாம். நடிகைகள் சிலர் அங்கே தங்கியிருந்தார்கள். அவர்களைப் பார்க்கத்தான் அத்தனை கூட்டம்.

எங்களுக்கு ஒதுக்கப்பட்ட அறைக்குப் பக்கத்து அறையில்தான் படத்தின் கதாநாயகி இருந்தாள்.

என் பெண் அவளை உடனே அடையாளம் கண்டுகொண்டாள். ''ஜெயப்ரியா அம்மா ஜெயப்ரியா!'' என்று என் காதுகளில் கிசுகிசுத்தாள்.

நான் அவளை ஏறிட்டுப் பார்த்தேன். அவளும் என்னைப் பார்த்தாள்.

அவளுக்கு வயது இருபது இருக்கும். நாற்காலியில் சாய்ந்தபடி உட்கார்ந்து காலை ஒரு ஸ்டூலில் நீட்டிக் கொண்டிருந்தாள். கைக்கு எட்டும் தூரத்தில் ஒரு தட்டில் பழங்கள் நறுக்கி வைக்கப்பட்டிருந்தன.

இதற்குள் என் கணவர் அறைக்குள் நுழைந்து விட்டார். தாழ்ப்பாளை அசைத்தும், தொண்டையைச் செருமியும் எங்கள் கவனத்தைக் கலைத்து அறைக்கு அழைத்தார்.

நாங்கள் போனோம்.

''உம்... சீக்கிரம்... சீக்கிரம்... காருக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். இன்னும் அரை மணியில் சுருளி நீர்வீழ்ச்சிக்குப் போகவேண்டும்!'' என்று அவசரப்படுத்தினார்.

நான் முகம் கழுவி உடை மாற்றித் தயாரானேன். குழந்தைகளும் புறப்பட்டார்கள்.

வண்டி சுருளி அருவியைப் பார்த்துப் போய்க் கொண்டிருந்தது. என் மனத்திலே நினைவு அருவி என்னைச் சுழலைப் பாய விட்டது.

நான் அந்த நடிகையை விட அழகில் மட்டமில்லை. நல்ல நிறம். இன்னும் என் பகளை என்

பிரமைகள்

அன்னம்



நங்கையாக மதிப்பிடுகிறார்களே தவிர பெண்ணாக இல்லை.

அவள் வாழ்க்கை என்ன ராஜபோகமானது? அதிர்ஷ்டம்! அத்தனை பேரும் அவளுக்காக... அவளைச் சுற்றி ... எத்தனை சௌகரியங்கள்....

காலையில் எப்பொழுது வேண்டுமானாலும் எழுந்திருக்கலாம். பால்காரன் வருகிறானா என்று கவலைப்பட வேண்டாம். எங்கே போகவும் கார், ரயில் முதல் வகுப்பு... ஆகாய விமானப் பயணம்....

''என்ன யோசனை?'' என அதட்டி என்னை இறங்கச் சொன்னார் என் கணவர்.

அருவியில் உடை மாற்றிக் குளிக்க வெட்கமாக இருந்தது. அப்படியே நின்றோம்.

அந்தப் பெண் வந்திருந்தால்...? அந்தக் காட்சிக்காகவே படம் நாலு வாரம் கூட ஓடும். அவளும் ஆயிரக் கணக்கில் பணம் வாங்குவாள்.

நாங்கள் திரும்பும்போது எங்கள் காரைச் சற்றுத் தள்ளி நிறுத்தி விட்டார்கள். போலீஸ்காரர்கள் கூட்டத்தை ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்தார்கள்.

அங்கு எங்கேயோ பங்களாவில் படப்பிடிப்பு எனப் பேசிக் கொண்டார்கள்.

எங்கள் கார் படப்பிடிப்புக் குழுவைத் தாண்டி சென்றது. அவள் திரும்பிப் பார்த்தாள். என்னைப் பார்த்துப் பரிதாபப் படுவது போல் இருந்தது அந்தப் பார்வை.

ஜெயப்பிரியா :

ஷூட்டிங்.... ஷெட்யூல்.... கால்ஷீட்! குமட்டுகிறது.... அப்படிக் குமட்டுகிறது. இதோ காரில் போய்க் கொண்டிருக்கிறேன்.

பெட்ரூம் சீன். முதல் இரவு.

காகிதப் பூக்களின் தோரணம். இரவல் வாங்கப்பட்ட கட்டில். கடனுக்குத் தரப்பட்ட மெத்தை...

என் மனம் அமைதியாகஇல்லை. அதுவும் இன்று மதியத்திலிருந்து சரியாக இல்லை.

யாரோ ஒரு மத்தியதரக் குடும்பம் போல் இருக்கிறது. ஓர் ஆண், ஒரு பெண், மூன்று குழந்தைகள்.... பார்க்க எவ்வளவு அழகாக இருந்தது!....

அவன் முன்னே செல்ல, அவள் பின்னே பணிவுடன் நடக்க, அந்தக் குழந்தைகள் பாசத்துடன் ஒட்டி உறவாட....

என் அறை முன் அவள் சில கணங்கள் நின்றாள். அவளைவிட நான் என்ன அழகு? அவள் மட்டும் திரையில் நடிக்க வந்தால் நான் எந்த மூலை? எனக்கு அதிர்ஷ்டம்... இல்லை.... எனக்குக் குடும்ப வாழ்க்கையை அனுபவிக்க அதிர்ஷ்டம் கிடையாது.

அவன் கூப்பிடுவதற்குள் அவள் ஓடி விட்டாள். பயந்து அல்ல... உரிமையுடன்.

இதே வேஷம்தான் நானும் போட்டிருக்கிறேன். இது நடிப்பு.... அது நிஜம். எத்தனையோ படங்களுக்கு இதுவரை இரு மணப் பெண் வேஷம் போட்டாகி விட்டது. இனியும் போடுவேன்.

ஆனால் என் வாழ்க்கையில் அது நடக்குமா? நடந்தால் உலகம் அதை ஏற்றுக் கொள்ளுமா? ''சான்ஸ் இல்லை... ஒருத்தனைப் பிடித்துவிட்டாள்'' என்று பேசுவார்கள்.

அவளைப் போல் தைரியமாக நாலு இடத்துக்கு நான் போக முடியுமா? பேச முடியுமா? நடக்க முடியுமா?

அவள் வாழ்கிறாள் — தனக்காக அல்ல— தன் குடும்பத்துக்காக.

நான் வாழ்கிறேன் — நடைப் பிணமாக. எனக்காகவும் இல்லை. வேறு யாருக்காகவும் இல்லை.

இன்னும் பத்து வருடங்கள் கழித்து...

அவனுக்குத் தலை நரைத்திருக்கும். இரண்டு பல்கூட விழுந்திருக்கும். இருந்தாலும் அவனுக்கு அவள் ரதியாகத்தான் தெரிவாள். இதே பாசம், இதே அன்பு நீடித்திருக்கும்.

அன்றைக்கு என்னைச் சுற்றி—

யாருமே இருக்க மாட்டார்கள். இன்றைக்கு என்னைச் சுற்றி வரும் கதாநாயகன் இன்னும் ஒரு குமரியுடன் 'டூயட்' பாடுவான். எனக்கு அம்மா வேஷம் கூடக் கெஞ்சினால் தான் கிடைக்கும்.

ஆனால் அவளை இன்று போல் அவள் புருஷன் தாங்குவான். குழந்தைகள் கவனிப்பார்கள். கணவன், மனைவி என்று இருந்த அவள் உலகம மருமகள்,மாப்பிள்ளை, பேரன் பேத்தி என்று விரிவடையும்.

ஹூம்...., எல்லாவற்றுக்கும் கொடுப்பினை வேண்டும்.



பக்பட் மாயா தியாகி விவகாரத்துக்குப் பிறகு படாதிபதிகள் சும்மா இருப்பார்களா? ஜீனத் அம்மனைப் போட்டுப் படம் பிடிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

இன்ஸாப் கீ தாராஸு என்ற படத்தில் கதாநாயகி ஒருவனால் கெடுக்கப்படுகிறாள். போலீசில் புகார் கொடுக்கிறாள். கையாலாகாத்தனமோ, அரசியல் தலையீடோ, அல்லது லஞ்ச ஊழல்தான் காரணமோ போலீஸாரால் ஒன்றும் செய்ய முடியவில்லை.... பிறகு என்ன நடக்கிறது? 24ம் பக்கம் பார்க்கவும்.

தேசு

நாங்கள் அறைக்குத் திரும்பினோம்:

இரண்டு கட்டில்கள் போதவில்லை. அதிகப்படி படுக்கைகள் வரவழைத்தார் அவர். குழந்தைகள் இருவர் கட்டிலில் படுத்துக் கொள்ள நாங்கள் தரையில் படுக்கும்படி ஆகிவிட்டது.

படுத்த மறு நிமிடம் அவர் தூங்கிவிட்டார். ஆனால் எனக்கு உறக்கம் வரவில்லை.

'இந்த மனிதரிடம் எதைக் கண்டு என் வாழ்க்கையை நான் ஒப்படைத்தேன்? நானும் படித்தவள்தான். பட்டதாரிதான். ஏன் என் சுதந்திர உணர்வை என்னால் வெளிக்கொணர முடியவில்லை?'

இத்தனை நாள் நான் எண்ணாதது எல்லாம் ஏன் என்னை இப்போது வாட்டுகின்றன?

தூங்கியும் தூங்காத ஒரு நிலை. ஒரு கனவு. பக்கத்து அறையில் இருந்த டைரக்டர் — நான் பார்த்த ஆள் — என்னை நடிக்கக் கூப்பிடுகிறான். முதல் படத்துக்கே ஐம்பதாயிரம் ரூபாய். நான் சரி என்கிறேன். கமலுடன் நடிக்கிறேன். ரஜினியுடன் நடிக்கிறேன். சிவாஜியுடன் கூடத்தான்.

மாலைகள் மரியாதைகள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு என் வீட்டுக்கு வருகிறேன்.

சொப்பனத்தில் கூட பங்களா வரவில்லை. எங்கள் பழைய வீடுதான் வந்தது. அறைக் கதவைத் தட்டுகிறேன். திறக்கவில்லை. ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்கிறேன்.

அங்கே அவர் ஒரு கயிற்றில் தொங்கிக்...

''என்ன உளறுகிறாய்? விபூதியை இட்டுக் கொண்டு படு!'' என்று அவர் என்னை உசுப்புகிறார்.

விழித்துப் பார்க்கிறேன். பின்னர் உறக்கமே இல்லை.

பக்கத்து அறையில் அவள் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருப்பாள். எதற்கு அவள் கவலைப்பட வேண்டும்? பணக் கஷ்டமா? குடும்ப பாரமா?

காலையில் எழுந்ததும் எதைப் பற்றியும் யோசிக்க நேரமில்லை. குளித்துவிட்டு, குமுளி செல்லும் பஸ்ஸில் நின்று கொண்டு பயணம் செய்து அங்கிருந்து ஒரு டாக்ஸியில் புறப்பட்டுத் தேக்கடி போகும்போது மணி எட்டரை.

'போட்' ரெடியாக இல்லை. காத்துக் கொண்டிருந்தோம்.


ஜெயப்ரியா

நாங்கள் படப் பிடிப்பு முடிந்து வீட்டுக்குத் திரும்பும்போது மணி இரவு பன்னிரண்டு.

கண்களெல்லாம் ஒரே எரிச்சல். காலா காலத்தில் சாப்பாடு இல்லாததால் பசி மிஞ்சிப்போய் வயிற்றில் ஏதோ ஒரு வேதனை. இரவு உறங்கியாக வேண்டுமே!

பழக்கத்துக்கு அடிமையானதால் ஒரு பானம்... அதில் ஏதோ மாத்திரை.

நான் மயங்கிப்போய்க் கிடந்தேன். அந்த மயக்கத்தினுள்ளே ஒரு கனவு.



நான் அறிஞர் அண்ணா அரசு ஆண்கள் கலைக் கல்லூரியில் (நாமக்கல்) தாவர இயல் படிக்கும்போது, சுந்தரராஜன் என்ற துணைப் பேராசிரியர் பாடம் நடத்தி வந்தார். அவர் வகுப்புக்குள் நுழைந்து விட்டாலே எங்களுக்கு குஷிதான்.

அன்று 'வினாடி வினா' வகுப்பு. என் நண்பர் இராமுவைப் பார்த்து ஒரு கேள்வியைக் கேட்டார் ஆசிரியர். நண்பரோ பயந்த சுபாவமுடையவர். தெளிவில்லாத ஆங்கிலத்தில் புரியாத பதிலைக் கூறினார். மறுபடி வாய்ப்புத் தந்தும் சரியான விடையை அவரால் தர இயலவில்லை.

பேராசிரியர் என் முகத்தை மிகவும் கடுமையாக வைத்துக் கொண்டு, ''உன் வீடு எங்கு இருக்கிறது?'' என்று கேட்க, மாணவர் முகவரி கூறினார். உனக்கு எப்பொழுது fvee hour கிடைக்கும் என்று அவர் கேட்க, மாணவர் விடை தந்தார்.

அப்பொழுது, நாங்களோ, ''பரவாயில்லை, நண்பருக்கு ஆசிரியர் வீடு தேடிச் சென்று வகுப்பு எடுப்பார்'' என்று நினைத்திருந்த போது,

திடீரென ஆசிரியர், ''ஒன்றுமில்லை, உன்னிடம் தினமும் நான் டியூஷனுக்கு வரலாம் என்று நினைக்கிறேன். அப்பொழுதுதான் நீ பேசும் language (மொழி) எனக்கும் புரியும்'' என்று கூறினாரோ இல்லையோ, எங்கள் வகுப்பே சிரிப்புக் கடலில் மூழ்கியது.

-ஆர். முருகன்

எனக்குக் கல்யாணம் ஆகிவிட்டது. புருஷன் வேறு யாருமில்லை. அந்தப் பக்கத்து ரூம்காரர்தான்.

ஒரு சாதாரண அறை. ஒரு பாய். ஒரு தலையணை. ஆசையோடு உள்ளே போகிறேன். அறை காலியாக இருக்கிறது.

தலையணையின் மேல் ஒரு கடிதம்.

'நீ சினிமா நடிகை என்று தெரியாமல் திருமணம் செய்து கொண்டு விட்டேன். நீ மாசு மருவற்றவளாக இருக்கலாம். ஆனால் என் மனம் அதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. நீ இதுவரை எப்படி இருந்தாயோ அப்படியே இருந்துவிடு. என்னைத் தேடாதே' அம்மா என்று அலறுகிறேன்! எந்த வசனகர்த்தாவும் இப்படித்தான் எழுதிக் கொடுத்திருப்பார்.

''என்னம்மா கனாக் கண்டீங்களா?'' என்று கேட்கிறாள் என் வேலைக்காரி. அவளுக்கு வயது நாற்பது. அவளுக்கும் நான் அம்மாதான்.

காலையில் எழுந்திருக்கும் போது மணி ஏழு. இன்று ஷூட்டிங் கிடையாது, எல்லோருக்கும் தேக்கடி பிக்னிக்,



கதாநாயகி, தன்னைப் பலவந்தப்படுத்திய அதே கயவன் தன் தங்கையையும் களங்கப்படுத்துவதைக் காண்கிறாள்.... அப்புறம்? 39ம் பக்கம் பார்க்கவும்.

சீதா

எங்களுக்கும் அதே போட்டில் இடம் கிடைத்தது.

என்னையும் என் பெண்ணையும் எதிரெதிரே உட்கார்த்திவிட்டு எனக்குக் காவலாக அவரும், பெண்ணுக்குக் காவலாகப் பிள்ளையையும் அமர்த்திஞர்.

''வெளியே பார்.... வெளியே பார்!'' என்ற கண்காணிப்பு வேறு.

நாங்கள் போன நாள் எங்களுக்கு அதிர்ஷ்டம். கூட்டம், கூட்டமாக மந்தை மந்தையாக யானைகளைப் பார்த்தேன். தனியாக ஒன்றுகூட இல்லை.

சினிமாக் கோஷ்டியில் யாரோ ஒருவர் கூறிக் கொண்டிருந்தார்:

''இந்த யானைக் கூட்டம்கூடத் தன் குடும்பத்தோடு நிம்மதியாகக் கவலையில்லாமல் இருக்கு.... நம்ம பொழைப்பைப் பாருங்க... குடும்பம் எங்கேயோ நாம எங்கேயோ... வயிற்றுக்காகஎப்படியெல்லாம் அலைகிறோம்?''

யாரோ ஓர் உண்மையை என் நெஞ்சில் அறைந்தது போல் பட்டது எனக்கு.

ஜெயப்பிரியா :

எத்தனை அடக்க ஒடுக்கமாக உட்கார்ந்திருக்கிறார்கள் அவர்கள்! அதுவே ஓர் அழகாகத்தான் இருக்கிறது.

நான் தனியாக உட்கார்த்தப் பட்டிருந்தேன். எனக்குத் தரப்பட்ட தனி மரியாதையல்ல. கூட இருந்த அத்தனை பேருக்கும்—கதாநாயகன் உட்பட — ஒரு குடும்பம் இருந்தது. இசுவிசுக்களுக்குப் பயந்து ஒதுங்கி இருந்தேன் நான்.

அந்த யானைக் கூட்டங்களைப் பார்க்கும் போது ஒரு தனிக் கவர்ச்சி தெரிந்தது.

நன்றாகக் குளித்துவிட்டுச் செம்மண் சேற்றைக் குழைத்துப் பூசிக் கொண்டன அவை, என்னைப் போல. நல்ல குடும்பத்தில் பிறந்துவிட்டுக் காசுக்காக என்னவெல்லாம் செய்கிறேன்?

அந்தப் பெண்ணின் கணவர் கூறிக்கொண்டிருக்கிறார்: ''பார்த்தாயாடா ராஜா? அந்த யானையெல்லாம் எத்தனை சுதந்திரமாக இருக்கிறது? ஒரு பொறுப்புக் கிடையாது... நாளைக்கு ஆபீஸ் போக வேண்டாம், பள்ளிக்கூடம் போக வேண்டாம்... இஷ்டப்படி சாப்பிடலாம், தூங்கலாம்!''

என் மனம் அந்த வார்த்தைகளை அசை போட்டது. குடும்பம் என்பது சிறை என்கிறார்களே அப்படித்தானே?

சீதா

நாங்கள் ஹோட்டலுக்குத் திரும்பினோம். என் கணவரின் நண்பர் அவர் கையைக் குலுக்கிஞர்.

போனில் செய்தி வந்ததாம். அவருக்குப் பிரமோஷன். மெட்ராஸில் வேலை. தனிக் குவார்ட்டர்ஸ். கார் கூட உண்டாம்.

நாங்கள் பஸ்ஸுக்குப் புறப்பட்டோம். அவர் முன்னாலே போக நான் பின்னாடி. கையில் சாப்பாட்டு மூட்டை கனக்கவில்லை. மனத்தில் எண்ணச் சுமையும் இல்லை.

பக்கத்து அறைப் பக்கம் நான் திரும்பவில்லை. என்ன கூத்தாடிப் பிழைப்பு? என் கணவர் — என் குழந்தைகள் — என் குடும்பம்— எனக்கு சுவர்க்கம்.

அவர் திரும்பிப் பார்க்கிறார். அந்தப் பார்வையில் அவர் என்மீது வைத்துள்ள பாசமும் பரிவும் தெரிகிறது.

நான் விரைகிறேன் — வசதியான வாழ்க்கையை நோக்கி.

ஜெயப்பிரியா :

எனக்காகத் தந்தி காத்திருக்கிறது.

இரண்டு ஹிந்திப் படங்கள் 'புக்' ஆகியிருக்கின்றன. ஒன்று அமிதாப் பச்சனுடன்.. இன்னொன்று ரிஷி கபூருடன்.

முதல் முறையாக ஆறு இலக்கம் வாங்கப் போகிறேன்.

எனக்காக லட்சக் கணக்கான ரசிகர்கள்... என்னைத் திரையில் கண்டு திருப்தியடையும் பல குடும்பங்களை நினைத்துக் கர்வப்படுகிறேன்.


அதோ அந்தக் குடும்பம் திரும்பிப் போகிறது....

எந்த எலி வங்கிலோ, இருட் குகையிலோ அவர்கள் இன்றும் தொடரும். விடிந்தால் ஆயிரம் பிரச்னைகள்...

அப்பப்பா..... இப்படிப்பட்ட சுதந்திர வாழ்க்கை கிடைத்த நான் எத்தனை அதிர்ஷ்டக்காரி?....

ஒரு டிரேயில் பாட்டிலும், சோடாவும், கோப்பையும் வருகின்றன.

நான் ஆனந்தத்தில் நீந்தப் போகிறேன்!


Agfa Photography at 3m.

செயல் வீரனின் கடைசிப் பயணம்

கி. கஸ்தூரிரங்கன்

ஜூன் 24, 1980 செவ்வாய்க் கிழமை மாலை 4 மணி.

ஒரு செயல் வீரனின் கடைசிப் பயணம்.

எங்கிருந்து இத்தனை பேர் வந்தார்கள் என்று அதிசயிக்க வைக்கும் லட்சங்கள். இரவு முழுதும் பல மணி நேரம் க்யூவில் நின்று கடைசி முகத்தரிசனத்துக்காகக் காத்து நின்ற காங்கிரஸ் இளைஞர்கள். அரசியல் கலப்பில்லாத பொதுமக்கள்; மூதாட்டிகள் சிறுமிகள்.

இரவெல்லாம் மகனின் சடலத்தின் அருகிலேயே உட்கார்ந்திருந்த இந்திரா காந்தி கண்ணீர் விடவில்லை. சோகம் கலந்த முகத்துடன் மூலையில் உட்கார்ந்துவிடவில்லை. தேறுதல் கூற வந்தவர்களுக்குத் தைரியம் சொன்னார். நடந்தது நடந்துவிட்டது. இனிமேல் என்ன செய்ய இருக்கிறது என்று தத்துவம் பேசினார்.

மாநில முதல்வர்கள் வந்தனர். எம். ஜி. ஆர் வந்து கண்ணீர் விட்டார். கருணாநிதி வந்து நின்று விம்மினார். பதவிகளின் உச்சத்தை எட்டியவர்கள் எல்லாரும் அங்கே சாவின் சன்னிதானத்தில் செருக்கெல்லாம் போய்த் தாழ்ந்து தழுதழுத்து நின்றனர்.

சஞ்சய் காந்தி மீது கோபப்பட்டவர்கள் நடந்ததெல்லாம் மறந்து போய் 'ஐயோ பாவம், சிறு வயதில் அநியாயமாகப் போய் விட்டாரே' என்று அங்கலாய்த்தனர். அவரது அன்னையின் துயரத்துக்காகப் பச்சாதாபப்பட்டனர்.

தேர்தல் வெற்றிக்குப் பின் தாயின் பழியைத் துடைத்து அவரை மீண்டும் சிம்மாசனத்தில் இருத்திய சஞ்சய் முடிசூடா இளஅரசனாக மறுபடியும் செல்வாக்குப் பெற்றார். இந்திராவை அணுகிப் பிரச்னைகளுக்குத் தீர்வு வேண்டிய கட்சித் தலைவர்கள் மந்திரிகள், அதிகாரிகள் பொது மக்கள் அனைவரும் சஞ்சய் காந்தியைச் சந்தித்தால் போதுமென்ற நியதி ஏற்பட்டது.

தினமும் நூற்றுக் கணக்கான நபர்களைச் சந்தித்தார். அரை நிமிடம். 'சரி, செய்கிறேன்' என்று அவர் சொன்னால் போதும். காரியம் முடிந்த மாதிரிதான். செய்ய முடியாது என்றால் உடனே 'இல்லை முடியாது' என்றும் சொல்லிவிடுவார்.

இதனால் சஞ்சய் காந்தியை அணுகியவர்கள் நிறைந்த மனத்துடன் திரும்பி வந்தனர்.

சஞ்சய்க்கு வேண்டியவர், வேண்டாதவர் என்ற தீவிர பாகுபாடும் இருந்தது. இந்திரா காந்தி பதவி துறந்த காலத்தில் அவரோடு துணை நின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் கேட்டது கிடைத்தது. ஜனதா ஆட்சியுடன் ஒத்துழைத்தவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள்.



சி. ஐ. பி. அதிகாரி சென், போலீஸ் அதிகாரி பிந்தர், டில்லி வளர்ச்சி ஆணையத் தலைவர் ஜக்மோகன் இவர்கள் எல்லாம் ஜனதா ஆட்சியில் பதவி இழந்து, எமர்ஜென்ஸி காலக் குற்றவாளிகளாக இந்திராவுடன் கோர்ட்டில் வந்து நின்றார்கள். அவர்கள் பேரிலிருந்த வழக்குகள் எல்லாம் வாபஸாயின. பதவி உயர்வுடன் அவர்கள் மீண்டும் அரசு அதிகாரிகளாயினர்.

ஜனதா ஆட்சி சொல்படி கடமை ஆற்றிய அதிகாரிகள் பக்கம் பக்கமாக துரத்தி அடிக்கப்பட்டார்கள்.

இந்திரா வழக்குகளை விசாரணை நடத்திய விசேஷக் கோர்ட்டுகளின் நீதிபதிகள் சட்டப்படி இக்கோர்ட்டுகள் செல்லாது என்று தீர்ப்பு வழங்கிக் கடையைக் கட்டினர்!

'கிஸ்ஸா குர்ஸிகா' வழக்கில் சஞ்சய், வி. சி. சுக்லா இருவரும் இரண்டாண்டு கடுங்காவல் தண்டனையை சுப்ரீம் கோர்ட் மறுவிசாரணை செய்து 'குற்றம் நடந்ததற்கு ஆதாரம் உண்டு; ஆனால் இந்த இருவரும் தான் பொறுப்பாளி என்பதற்கு ஆதாரம் இல்லை' என்று தீர்ப்பு வழங்கியது!

சஞ்சய் காந்தி தொண்டர் இருவர் உத்தரப் பிரதேசத்தில் விமானக் கடத்தல் குற்றத்துக்காக விசாரணையில் இருந்தனர். இந்த வழக்கும் வாபஸ் ஆயிற்று. இருவரும் காங்கிரஸ் வேட்பாளராகத் தேர்தலில் நின்று அமோக வெற்றியுடன் உ. பி. மாநிலச் சட்டமன்றத்தில் இடம் பிடித்தனர்.

ஜனவரி தேர்தலை அடுத்து சஞ்சய்காந்தி முக்கியமான லோக் சபா அங்கத்தினரானது மன்றிக் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளராகவும் ஆனார். லோக் சபையில் 30 இளைஞர் காங்கிரஸ் உறுப்பினர்கள் எதிர்க் கட்சித் தலைவர்கள் ஆட்சியைக் குற்றம் கூற எழுந்த போதெல்லாம் கூச்சல் போட்டு அவர்களைப் பேச விடாமல் தடுத்தனர். 'இது வரை இவர்கள் கூச்சல் போட்டு வந்தனர்; இவர்களுக்குப் பாடம் கற்பிக்க இது ஒன்றே போதும்' என்று சஞ்சய் காந்தி தீர்மானித்துச் செயல்பட்டார்.

பொதுவாக பார்லிமெண்ட், எதிர்க் கட்சிகள், பத்திரிகைகள், கோர்ட்டுகள் எல்லாம் தேவையற்ற தொந்தரவுகள் என்ற கருத்து சஞ்சய் காந்தியின் போக்கில் பிரதிபலித்தது.

மந்திரிகள் அத்தனை பேரும் சஞ்சய் சிபாரிசு அல்லது ஆமோதிப்பின் பேரில் நியமனம் பெற்றவர்கள். எனவே, சஞ்சய் சொன்னபடி அவர்கள் செயல்பட்டு வந்தனர். முக்கியமான பைல்கள் சஞ்சய் காந்தியின் பார்வைக்கு அனுப்பட்டன. சஞ்சய் காந்திக்காக ஓர் அரசாங்க அதிகாரி விசேஷ உதவியாளராக நியமனம் பெற்றார்.

சஞ்சய் காந்தி மறுத்துவிட்டதால் பகுகுணாவுக்கு மந்திரி சபையில் இடம் கிடைக்கவில்லை. அவர் நிலையில் துண்டைப் போட்டுக்கொண்டு கட்சியை விட்டே ஓடினார்.

அடுத்து நிகழ்ந்த ஒன்பது மாநிலத் தேர்தலில் தமிழ்நாடு நீங்கலாக மற்ற மாநிலங்களில் அனைத்திலும் இந்திரா காங்கிரஸ் வெற்றி கொண்டது. உ.பி.யில் அமோக வெற்றி. நேரு இருந்தபோதுகூட அத்தனை பெரிய வெற்றி கிடைக்கவில்லை.

பெரும்பாலும் சஞ்சய் காந்தியின் வேட்பாளர்களே தேர்தலுக்கு நிறுத்தப்பட்டனர். அதனால் சஞ்சயின் செல்வாக்கு இன்னும் உயர்ந்தது. ஆனால் அவருடைய அசுவமேத குதிரை தமிழ் நாட்டில் மட்டும் புறம்கண்டது. பழியைக் கருணாநிதியின் தலையில் சுமத்தி சஞ்சய் மற்ற மாநிலங்களை காங்கிரசுக்கு மீட்ட பெருமையை அடைந்தார்.

அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களே மாநில முதல்வராகப் பொறுப் பேற்றனர். இந்திராவின் கொள்கைப்படி, ஹரிஜன், முஸ்லிம் முதலான சிறுபான்மை வகுப்பு எம்.பி.க்கள் மாநில முதல்வராக அனுப்பப்பட்டனர். இதன் பயனாக 'திணிக்கப்பட்ட' முதல்வர்களை எதிர்த்து அதிருப்தியாளர் குழு ஒவ்வொரு மாநிலத்திலும் தோன்றிவிட்டது. அதன் விளைவு இப்போது தான் தெரிய ஆரம்பித்துள்ளது.

சஞ்சயும் அவருடைய இளைஞர் குழாமும் பதவிகள் எதையும் ஏற்கக் கூடாது என்ற கொள்கையைக் கடைப்பிடித்தனர். ஆனாலும் உத்தரப் பிரதேசத்தில் பெரும்பான்மை காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் சஞ்சயே முதல்வராக வேண்டும் என்று தீர்மானம் போட்டனர். சஞ்சய்க்கும் ஆசைதான். ஆனால் இந்திரா காந்தி தடுத்து நிறுத்திவிட்டார்.

பிச்சைக்காரன்: "பத்துப்பைசா பிச்சை போடு சாமி... இல்லாட்டி...."

பிரமுகர்: "இல்லாட்டி...?"

பிச்சைக்காரன்: "இந்தத் தொண்ணூறு பைசாவை வச்சுக்கிட்டு ஒரு லாட்டரிச்சீட்டு கொடு!"

உ. ராஜாஜி



மகன் தம் பக்கத்திலேயே துணையாக இருக்க வேண்டும் என்று.

கட்சிப் பொறுப்பேற்ற சஞ்சய் கட்சி விவகாரங்களில் அதிகமாக ஈடுபட்டார். ஆட்சி நடவடிக்கைகள் மந்திரிகளின் பொறுப்பிலேயே விடப்பட்டிருந்தன. அவ்வப்போது சஞ்சயிடமிருந்து மெமோக்கள் வரும். 'தயவு செய்து இதைக் கவனிக்கவும்' என்று அநேகமாக லைசென்சுகள், மனுக்கள் இவற்றைப் பற்றியவை. அவற்றின் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தன.

இந்திரா காந்தியும் ஆட்சி நடத்துவதில் அவ்வளவாகக் கவனம் காட்டவில்லை. வேண்டுதலை நிறைவேற்றக் கோயில் கோயிலாகத் தீர்த்த யாத்திரை செய்து கொண்டிருந்தார். இதன் காரணமாக விலைவாசி மற்றும் சட்டம் ஒழுங்கு பற்றி எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எதுவும் செயலாக்கப்படவில்லை. ஜனதா ஆட்சியைப் போலவே இந்திரா ஆட்சியும் செயலற்றதாகத் தோன்ற ஆரம்பித்து விட்டது.

ஆனால் சஞ்சய் இருந்தவரை அடிப்படைப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண வேண்டிய தீவிர நடவடிக்கைகள் வரும் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. நேரடியாக இல்லாமல் மறைமுகமான கெடுபிடி நடவடிக்கைகளுக்குத் திட்டங்கள் தயாராகி வந்தன.

பொருளாதார அளவிலும் பொதுத் துறை ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தித் தனியார் துறை ஊக்குவிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

திடீரென்று ஒரு காலை சஞ்சய் இல்லாமல் போய்விட்டார். இந்திரா காந்தியையும் காங்கிரஸ் கட்சியையும் ஒரு சூனியம் சூழ்ந்து விட்டது.

சாந்தி வனத்தில் நேரு சமாதிக்கு அருகே சஞ்சயின் சடலத்துக்கு அவரது அண்ணன் ராஜீவ் கொள்ளி வைத்தார்.

அப்போது எல்லார் மனத்திலும் தோன்றிய உணர்வு சஞ்சய் இடத்தில் ராஜீவ் வரக்கூடும் என்பதுதான். சஞ்சயுடன் ஒப்பிடும்போது ராஜீவ் பல விஷயங்களில் எதிர் நேரான குணங்களைக் கொண்டவர். சாது. அரசியலில் அடாவடித் தனத்தை விரும்பாதவர். பதவிகளில் ஆசை யில்லை. தம் குடும்பம், விமான ஓட்டியாகத் தம் வேலை என்று திருப்தியாக இருப்பவர்.


ஆனால் இந்திராவுக்கு நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருப்பவர்கள் கட்சியிலோ, ஆட்சியிலோ யாரும் இல்லை.


இந்த ஒரு காரணத்துக்காகவே ராஜீவ் அரசியல் பிரவேசம் செய்ய வேண்டியிருக்கும் என்பதால் அனைவரின் கவனமும் ராஜீவின்பால் திரும்பியிருக்கிறது.

சஞ்சய் வாழ்க்கையே ஒரு சர்ச்சை. அவர் இறந்தபோது கூட சர்ச்சை விடவில்லை. நேருவின் சமாதியில் சஞ்சயை எப்படி எரிக்கலாம் என்று ஒரு கேள்வி. இதைப் பெரிதாகப் பாராட்ட வேண்டிய அவசியமில்லை. இந்திராவும் சஞ்சயும் தேசத்தைக் குடும்பச் சொத்தாக நினைத்துச் செயல்படுவதை மறுத்தாலும் நேருவின் குடும்பம் தேசத்தின் மாபெரும் சொத்து என்பதை மறுப்பதற்கில்லை.

(முற்றும்)


அரிப்பும் எரிச்சலும் தரும்
வியர்க்குருத் தொல்லையிலிருந்து
விடுதலை பெறுவீர்!
நைஸில்
உபயோகிப்பீர்-
மிகத்துரித நிவாரணம்
அளிக்கும்
வியர்க்குரு
பவுடர்.
2
பேக்குகளில்—
'ப்ளூ' மற்றும்
'ஸாண்டல்வுட்'
வாங்குவீர் நைஸில்.
விரட்டுவீர்
வியர்க்குருவை.
பால்கம் பவுடரைவிட
குறைந்த விலையில்!
மருந்துக் கலவை
யுள்ள நைஸில்:
1. அதிக வியர்வை
யைத் தவிர்க்கிறது.
2. வியர்வையை
உறிஞ்சுகிறது.
3. துர்நாற்றம் ஏற்
படுத்தும் கிருமி
களை அழிக்கிறது.
4. சருமத்திற்கு இத
மளிக்கிறது.
nycil
GN-79-PR-TM





பணக்கார சிநேகிதி

கீதா பென்னட்

அவசரமாய் டிபனுக்கு ஏற்பாடு பண்ணிக் கொண்டிருந்தேன். நேரத்துக்கு எல்லாம் முடிந்தால்தான் அவர் வீடு திரும்பியதும் கோவிலுக்குப் போகலாம்.

என் மகன் கண்ணனுக்கு இன்றைக்கு நான்கு முடிந்து ஐந்து வயதாகிறது.

இவருடைய சம்பளத்துக்குத் தகுந்த லக்கமாய்க் குறைந்த விலையில் துணி எடுத்து எதிர்க் கடை விட்டல் ராவ் கைவண்ணத்தில் அவனுக்கு டிராயர் தைத்திருந்தேன்.

வாசலில் நின்று கொண்டு அப்பாவுக்காகக் காத்திருந்த கண்ணன், பெரிய குரலில் இரைந்தான்.

''அம்மா, லதா மாமி வந்திருக்காங்க!''

அவன் குரலைத் தொடர்ந்து ஒலித்தது லதாவின் குரல்.

''டேய்.... டேய்! என்னை மாமின்னு கூப்பிடாதேன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்? அழகா ஆண்டின்னு கூப்பிடேன்.''

''சரி லதா மாமி!'' — லதா சிரித்துக் கொண்டே உள்ளே நுழைந்தாள்.

எப்படித்தான் நினைவில் வைத்துக் கொண்டு ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் வருகிறாளோ? பிறந்த நாள் மட்டுமா? எங்களுடைய திருமண விழா! பண்டிகை நாட்கள்! எல்லா நாட்களிலும்தான். ''கண்ணனுக்குப் பிறந்த நாள்'' என்று நினைவுபடுத்த ஒரு செகரட்டரி போட்டிருப்பாள். அவளுக்கென்ன பெரிய பணக்காரி! மில்லியனரான மில் முதலாளியின் மனைவி!

லதா கண்ணைப் பறிப்பது போல் தள தளவென்றிருந்தாள். அப்போதுதான் டென்னிஸ் ஆடிவிட்டு வருகிறாள் போலும்! ரூஜ் போடாமலேயே மிகவும் சிவந்த கன்னங்கள். அவள் குடிக்கும் ஆப்பிள் ஜூஸ் நேரே கன்னங்களுக்கே போய் விட்டனவோ!

ஆனி ஃப்ரெஞ்சின் கைவண்ணத்தில் மிளிர்ந்த கால்கள். டைட்டாக அணிந்திருந்த வெள்ளை டென்னிஸ் உடை. கையில் மட்டையைச் சுழற்றிக் கொண்டு அவள் நானுச் சமையலறைக்கும் வந்துவிட்டாள்?

''அம்மா அம்மா... லதா மாமி எனக்குப் பிறந்த நாள் பரிசு கொடுத்தாளே!'' — கண்ணனின் கையில் சின்னதாய் ஒரு பார்சல். அதன் மேல் குட்டியாய் ஒரு ரிப்பன் பூ. அவன் அதை அவசரமாய்த் திறக்க முயன்றான்.

எனக்கு ஆயாசமாய் வந்தது. எப்போதும் போல் சீப்பாய் ஒரு பரிசு கொணர்ந்திருப்பாள். பணக்காரச் சிநேகிதியாய் இருந்தால் என்ன? மனசு வந்து கை நிறையப் பணம் செலவழித்துக் குழந்தைக்குப் பரிசு கொடுத்தால் அவள் ஆஸ்தி கரைந்து விடுமா என்ன?

நான் நினைத்தது சரிதான்!

மிகச் சாதாரண ரெடிமேட் ஆடை!

இவளை யார் பரிசு கொடுக்கச் சொன்னார்கள்?

நான் அவளிடம் ஒன்றும் சொல்லாமல், காப்பியைக் கொடுத்தேன்.

அவள் சடசடவென்று பேசிவிட்டுப் போய் விட்டாள்.

அவள் அந்த மேனுட்டு இட்துபுற ஸ்டீயரிங் காரை ஒயிலாய் ஓடித்துக்கொண்டு ஓட்டியதைப் பார்த்துக் கொண்டே நின்றேன்.

பணம் இருக்கும் இடத்தில் நல்ல மனம் இல்லையே!

நான் ஏழைதான்! அதைச் சுட்டிக் காட்டவே இப்படிச் செய்கிறாளோ? என் கல்யாணத்துக்கு ஒரு சின்ன வாழ்த்துக் கடிதம்தான் கொண்டு வந்தாள். கண்ணனின் முதல்

ஆண்டு நிறைவுக்கும் எளியதாய், சீப்பாய் ஒரு பரிசு! எனக்கும் அவளுக்கும் எத்தனை நாள் — வருடப் பழக்கம்! கல்லூரியில் பி. ஏ. படித்த நாட்களில் அவள்தான் "மிஸ் ப்ரின்ஸஸ்". தினம் ஒரு காரில் வருவாள். தினம் ஒரு உடையில் வருவாள். டெனிம் ஜீன்ஸ், ஒரு நாள் வாயில் புடவை ஒரு நாள் குட்டி ஸ்கர்ட், ஒரு நாள்மாக்ஸி என்று அவளைப் பார்க்க ஒரு கூட்டமே காத்திருக்கும். அதில் நான் மட்டும் என்ன ஒசத்தி? என்னை மட்டுமே அவள் சிநேகிதியாய் ஏற்றுக் கொண்டாள் என்று எத்தனை சக மாணவிகளுக்குப் பொறுமை?

இருந்தாலும் இப்படி ஒரு பரிசு கொடுத்தாளே என்று எனக்குக் கோபம் ஆறவில்லை.

என் கணவர் வீடு திரும்பியபோது பொரிந்து கொட்டினேன்.

அவர் எப்போதும் போல் மாறாத புன்னகையில் காட்டி தந்தார்.

"இதோ பார்! உன் சிநேகிதி டென்னிஸ் மட்டையை இங்கேயே விட்டுட்டுப் போய் விட்டாள். நானேக்கு இதைக் கொடுக்கிற சாக்கிலே நேரேயே கேட்டுடேன்."

"கேட்கத்தான் போறேன்!" மனத்துக்குள் சவால் விட்டுக் கொண்டேன்.

மறுநாள் இவர் ஆபீசுக்குப் போன உடனேயே கண்ணனைத் தூக்கிக் கொண்டு லதாவின் பங்களாவுக்குப் போனேன்.

அது என்ன பங்களாவா! ஏதோ அரண்மனை மாதிரி இருந்தது. ஒவ்வொரு அறையிலிருந்தும் மூக்கை நீட்டிக் கொண்டிருந்த ஏர் கண்டிஷன் பெட்டிகள்.

வேலைக்கார முத்துவுக்கு என்னைத் தெரியுமாதலால், "வாங்கம்மா! உட்காருங்கம்மா!" என்று என்னை வரவேற்பறையில் உட்கார வைத்தான்.

மாடியிலிருந்து சில நிமிடங்களில் வன தேவதை மாதிரி இறங்கி வந்தாள் லதா.

"மாடிக்கு வாயேன் கீதா! என் ரூமுக்குப் போய் உட்கார்ந்து பேசலாம். எத்தனை நாள் கழிச்சு வந்திருக்கே. முத்து, எல்லாருக்கும் காப்பி கொண்டாயேன்!"

சுவாதீனமாய் என்னைத் தன் அறைக்கு அழைத்துப் போனாள் லதா.

என் மனம் அந்தக் கேள்வியைக் கேட்ப தற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தது.

அவள் கண்ணாடி எதிரே உட்கார்ந்து தன் குட்டையான கூந்தலை பிரஷ் செய்து கொண்டே சொன்னாள்:

"நேத்திக்கு நானே அப்புறம் உங்க வீட்டுக்கு வரணும்னு இருந்தேன்."

அவள் கை விரைவாய் பிரஷ் பண்ணியது.

"பாரேன் கீதா! உன்கிட்டே ஒரு விஷயம் சொல்லணும்னு ரொம்ப நாளா நினைச்சிட்டிருக்கேன். சொல்லட்டுமா?"

இப்போது அவள் முகத்தில் மாக்ஸ்-ஃபேக்டரை ஒற்றிக் கொண்டிருந்தாள்.

என்ன சொல்லப் போகிறாள்?

"எனக்கு நெருங்கிய சிநேகிதிஒருத்தி. பேரைச் சொல்ல மாட்டேன். எனக்கு

ஒருவன்: உனக்கு ஆகாதவன் யாராவது இருந்தா சொல்லு நம்ம ஐக்கயா ஆளை 'அட்ரஸ்' இல்லாம ஆக்கிடுவான்!

மற்றவன்: கொன்னுடுவானா?

ஒருவன்: இல்லே, வீட்டு நம்பரையும் தெரு பேரையும் அழிச்சிட்டு வந்துடுவான்!

- வே. சீதாராமன்



மனசுக்கு ரொம்பப் பிடிச்சவ. ஆனா பாவம் அவகிட்டே எங்களை மாதிரி பணம் கிடையாது. இல்லாட்டா என்ன? மனசு மட்டும் தங்கம். அவ வீட்டு ஃபங்க்ஷன் எல்லாத்துக்கும் நான் போவேன், பரிசு கொடுப்பேன். ஆனா சீப்பாத்தான் வாங்குவேன். ஏன் தெரியுமா? அதே மாதிரி என் வீட்டுக் கல்யாணத்துக்கும், பிறந்த நாளுக்கும் அவ வரணும். நான் ஏகப்பட்டதா பணத்தைக் கொட்டி அவ குழந்தைக்குத் தொட்டில்னும் அவளுக்குப் பட்டுப் புடவைன்னும் வாங்கித் தரலாம். ஆனா அதுவே நானேக்கு எனக்குப் பரிசு கொடுக்கணும்னு அவளாலே அப்படிச் செலவழிக்க முடியுமா? லதா அவ்வளவு பெரிசாப் பரிசு கொடுத்தாளே நம்மாலே முடியலையேன்னு மனசு வருத்தப்படும். அல்லது கடன் வாங்கியாவது பரிசு கொடுக்கணும்னு தோணும். நான் என் சிநேகிதிக்கு நிறையக் கோபத்தைக் கொடுத்திருப்பேன். ஆனா அவளோட சிநேகிதம் எனக்கு இல்லாதுபோகக் கூடாதுன்னுதான்...."

அவளை நான் மேலே பேச விடவில்லை.

"ஐ ஆம் ஸாரி லதா! உன்னைத் தப்பா நினைச்சதுக்கு என்னை, மன்னிச்சுடு!"


என் கண்களில் நீர் நிறைந்தது.

"ஆமாம் கீதா! நேத்திக்கு என் டென்னிஸ் ராக்கெட்டை எடுக்க வந்தபோது நீ உன் கணவரிடம் சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டேன். நான் உன்கல்யாணத்துக்கு ஒரு வாழ்த்துக் கடிதம் மட்டும் கொடுக்காமல், ஆயிரம் ரூபாய்க்குப் பரிசு கொடுத்திருந்தால் நீயும் என் கல்யாணத்துக்கு ஆயிரம் ரூபாய்க்குப் பரிசு கொடுக்கணும்னு நினைக்க மாட்டியா? அதுதானே முறை! என்னோட பணக்கார சர்க்கிள் சிநேகிதர்களை விட உன் சிநேகிதத்தைத்தான் நான் ரொம்ப உயர்வாய் மதிக்கிறேன் கீதா!"

அவள்தான் எவ்வளவு உயர்ந்த சிநேகிதி!

College Campus ராணிமேரி கல்லூரி

தொகுப்பு: நாயகன்



காலை

காலைக் கதிரவன் பொற்கோலம்
சோலை தொறும் வண்ண மலர்க்கோலம்
பாலைப் பொழிந்திடும் பசுக் கூட்டம்
வாலைக் குழைத்திடும் - அவை கன்றினம்.
நீல மலைச் சாரலில் மேனிமயில் ஆட
வாலைக் குமரி பாட குரலும் ஒலிர புலரும் காலை.
இல்லந்தொறும் புனிதமலங்க - கோவில் மணி கேட்டிட
கல் மனமும் கரைந்திட மெல்லப் புலரும் காலை.
உள்ளம் அது பொங்கிட கள்ளமனமும் தெளிவுற
உள்ள பொருள் பெருகிட மென்மை புலரும் காலை.
கஞ்சம் மலர இரவி புலர கொஞ்சும் கொஞ்சமாக
மிஞ்சி நிற்கும் இரவை விஞ்சிப் புலரும் காலை.
பள்ளி எழுந்து பிள்ளைகள் உள்ள பொருள் உணர
பள்ளிச் செல்ல விழைவுதுள்ளி மெழப்புலரும் காலை.
பாடித்திரியும் புள்ளினம் நாடிச் செல்லும் பழமரம் -
இவை
கூடிப்பெற இன்பம் தேடும் புலரும் காலை.
பீடு நடை மாந்தர் வீடுவிட்டுப் பெயர்ந்து
பாடு பட்டு உழைக்க ஈடு அற்ற காலைப் புலரும்!

— இ. லக்ஷ்மி

முதல் சம்பளம்!




“என்னடா, ஏதாவது முயற்சி பண்ணினியா, இல்லையா?'' — அவனுடைய அப்பாவின் அதட்டல் குரல்.

அவன் தலைகுனிந்து நின்றான்.

''என்னடா, நான் கேட்டுண்டே இருக்கேன். இடிச்ச புளியாட்டமா நிக்கறியா? பதில் சொல்லேன்.''

''நிறைய இடம் ஏறி இறங்கிப் பாத்துட்டேன். எங்கேயும் வேலை காலி இல்லேங்கறான்.''

''பின்னே எஸ்.எஸ்.எல்.சி.க்கு எவண்டா வேலை குடுப்பான்? அவனவன் பி.ஏ.வும், எம்.ஏ.வும் படிச்சுட்டு வேலை இல்லாம திண்டாடறான். உனக்கு என்னடான்னு படிப்பும் ஏறல்லே. அய்யாவுக்கு ஒசந்த வேலையாவும் வேண்டியிருக்குது. உன்னப் பெத்த குத்தத்துக்கு நான்தான்டா தண்டனை அனுபவிச்சாகணும்! அப்பாவுக்கு ஒத்தாசையா நாலு காசு சம்பாதிக்கணுமேன்னு இருக்குதாடா, உனக்கு? போ, போயி சோத்தைக் கொட்டிட்டு, தூங்கு முடங்கிக்க. அதுக்குத்தான் லாயக்கு'' அப்பா கோபத்தில் கத்தினார்.



அப்பாவிடம் தினமும்: ஏச்சுக்கூலிக் கேட்கும் போது எப்படியாவது அவருக்கு சம்பளம் என்ற பெயரில் ஏதாவது கொடுத்து விட வேண்டுமென்ற தீவிரம் ஏற்பட்டது.

நடந்து போய்க் கொண்டே இருந்தவன் திடீரென ஒரு யோசனை தோன்ற நின்றான்.

மணியைப் பார்த்தான்.

இரவு எட்டு மணி.

மடமடவென்று லாண்டரி கடைக்குப் போய் கையில் இருந்த பணத்தைப் போட்டு 'வாஷ்' போட்டிருந்த இரண்டு பேன்ட், சட்டைகளை வாங்கிக் கொண்டு சென்ட்ரல் ரயில் நிலையம் போகும் பஸ்ஸில் ஏறினான்.

'வித் அவுட்'டில் போகாமல் பம்பாய் சென்று விடுவது, மாட்டிக் கொண்டாலும் தண்டனையை அனுபவித்து மறுபடியும் பம்பாய் சென்று அலைந்து வேலை தேடிக் கொள்வது என்று அவனுள் முடிவு!

திடீரென ஓர் உலுக்கல்; ஓசை. என்ன நடக்கிறது என்று புரிவதற்குள் அவனது மண்டையில் ஒரு பலத்த அடி.....

சென்ட்ரல் ஸ்டேஷன் அருகே நடந்த ஒரு பஸ் விபத்தைப் பற்றிப் போட்டு இறந்த அவனுடைய பெயரையும் சேர்த்துப் பத்திரிகைகள் செய்தியை மறுநாள் வெளியிட்டன.

அவனது முதல் சம்பளமாக மட்டுமின்றி கடைசி சம்பளமாகவும் மாநில முதலமைச்சர் அளித்த ரூ. 2000- நஷ்ட ஈட்டை அவனுடைய தந்தை பெறுவதை படமெடுத்தும் பத்திரிகைகள் சிலதினங்களில் வெளியிட்டன.

-ஜி. விஜயதுர்கா.

அரிசியிலே கல்!

காலேஜ் போய் சேர்றக்குள்ளேயே பஸ்ல ஒரு சினிமா பாத்துறலாம். எப்படிங்கிறீங்களா? சினிமால ஹீரோயின் சான்ஸ் கிடைக்குதோ இல்லையோ எங்க பஸ்ல ஏறிட்டா நிச்சயம் ஹீரோயின்தான். எங்க பஸ்ல டிராவல் பண்ற வரைக்கும் உங்களுக்கு கதாநாயகி அந்தஸ்து கொடுப்பாங்க. எங்க பஸ் ஹீரோக்கள். அவங்க வீட்டுக்காக ரேஷன் கடைல நிக்கிறாங்களோ இல்லியோ பஸ்லவன்ல ஏறிறு நின்னுட்டேதான் வருவாங்க. அதுவும் படியிலதான். ஃபுட் போர்டிலே நிக்கறது தாங்க ஹீரோவோட லட்சணம். ஹீரோன்னு ஹீரோயினுக்கு உதவவேண்டாமா? அந்த சீனும் வருது. ரொம்ப கூட்டமா இருக்கும் போது அந்தப் பக்கத்திலே இருக்கிற ஹீரோயின் டிக்கெட் வாங்கவியேங்கற கவலையில ஹீரோ உடம்பு பாதியா உருகிடுங்க. மீதிப் பாதி உடம்போட அவர் கண்டக்டருக்கும் கல்லூரிக் கன்னியருக்கும் இடையிலே டிக்கெட் போக்குவரத்து நடத்தற சேவை இருக்கே சமூக சேவைன்னு இது தாங்க.

எங்க பஸ்ல ஒருத்தர் வராருங்க. அவர் கல்லூரில படிக்கிறாரு. இரண்டே நோட்புக் தான் அவருக்கு. பதினாறு வயதினிலே'க்கள் டிராவல் செய்யும் பஸ்ஸிலே இரண்டு நோட்புக் ரொம்ப பெரிய சுமை இல்லியா? பளு தாங்காம அவர் அந்த பாரத்தை மகளிர் பகுதியிலே உட்கார்ந்திருந்த ஒரு பதினெட்டை நோக்கி நீட்டினார். அவர் இறங்கற ஸ்டாப் வர வரைக்கும் அந்தப் பெண் அவற்றைச் சுமக்கணுமாம். என்ன உட்கார்ந்திருக்கா இல்லையா? அவர் கண்ணும் அந்தப் பதினெட்டின் கண்ணும் சந்திக்கின்றன.

'கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின்..

அப்புறம் என்ன? கோடை காலத்தின் 110 டிகிரி உஷ்ணம் அந்த கன்வேர்ந்து வரதைப் பார்த்தார் . அங்கே...

வாய்ச் சொற்கள் என்ன பயனுமில. பேசாமல் கையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டார். புத்தகங்களோடுதான்!

..'இட்டா தாயின் வெட்டெடை மற.'

என் தோழி பூரணி ''ஒரேயடியா ஆண்களை தாக்கணுங்கிறதுக்காக நீ இதை எழுதியிருக்கிற மாதிரி தெரியுது'' என்று ஆண் குலத்துக்காகப் பரிந்து பேசுகிறாள்.

அரிசியிலே கல் இருப்பது போல ஆங்காங்கே இந்த மாதிரி ஆண்கள் சிலர் இருக்கறாங்க என்றுதான் கூற வந்தேன். தற்சமயம் கிடைக்கிற அரிசியிலே கல்கொஞ்சம் அதிகமாவே இருக்கு.

-வி. வசந்தி





அரசியல்வாதி

ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும்
அற்புதப்பூ!
இருப்பதை இல்லையென்றும்,
இல்லாததை இருப்பதென்றும்—
கூறிடும்
ஒரு மாயாஜால வித்தைக்காரர்!
செத்த கன்றின் உடலில்
வைக்கோலைத் திணித்து
மாட்டின் முன்வைத்து
மாட்டையே ஏமாற்றிப்
பால்கறக்கும் பால்காரர்!
தேர்தல் காலங்களில்—
இவர் ஒரு
வேலையற்று அலையும் பட்டதாரி!
மற்ற நேரங்களில்—
தேடிக் கண்டுபிடிக்கப்பட வேண்டிய
ஒரு நக்சலைட்!
மேடை ஏறினால்—
''இலங்கை எங்கிருக்கிறது?''
என்ற ஆசிரியரின் கேள்விக்கு
''இலங்கை இந்தியத் தீவில்
இருக்கும் ஒரு தீபகற்பம்''
என்று
கொஞ்சமும் பயமின்றி
கூச்சமும் சிறிதுமின்றிக்
கூறிடும் ஒரு மாணவர்!
பதவிக்குப் போகும் முன்—
பக்கத்தில் இருப்போர் — மற்றும்
எல்லோரின் பெயரையும்
எடுத்து மனனம் செய்து
ஒப்புவிக்கும் ஒரு 'கம்ப்யூட்டர்'!
பதவிக்குச் சென்றபின்—
எல்லாப் பெயர்களையும்
எளிதில் மறந்து விட்டு
''யார் நீங்க, யார் வேணும்?''
என்றே கேட்டிடும் மறதிக்காரர்!
ஆனால் எப்போதும் மறக்காமல்
அடிக்கடி இவர் பயன்படுத்தும்
ஒரு வார்த்தை
''ஜனநாயகம்''!

-சி. சுமதி

காவலாளி (மியூஸியம் பார்க்க வந்தவரிடம்): சார்! இந்த நாற்காலிலே உட்காராதீங்க. இது அக்பரோட நாற்காலி!

பார்க்க வந்தவர்: அதனாலென்னங்க! அவர் வந்தார்னா எழுந்துடறேன்!

●

ஆபீஸ்காரர் (வீட்டுக்காரரிடம்): என்ன சார் இது! இப்படி பத்தாவது மாடிலே குடி இருக்கீங்க.... லிஃப்ட்டும் ஒரு வாரமா ரிப்பேர் பண்ணலே... நடந்து மேலே வர்றது கஷ்டமா இருக்கு சார்...!

வீட்டுக்காரர்: ...ஏம்பா அனுவசிய கஷ்டப்படறே... பேசாம போஸ்ட்லே அனுப்பிடு...

-ஸ்ரீ. விஜய துர்கா

டெலிவிஷன் உபயோகிக்காதீர்கள்...

ஆம். தரக்குறைவான துணைச் சாதனங்களுடன் (அக்சஸ்சரீஸ்) உபயோகிக்காதீர்கள். எப்பொழுதும் நல்ல தரமுள்ள துணைச் சாதனங்கள், டிவி மேன்மையுடன் செயல்பட உதவுகின்றன. ஆதலால் தரமான அக்சஸ்சரீஸ்களை தேர்ந்தெடுப்பது, மிகவும் இன்றியமையாதது. உங்கள் நன்மைக்காக கீழே சில குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

ஆன்டெனு (ஏரியல்)

தேவையான அலைவரிசையைப் பெற ஆன்டெனுவின் அளவு சரியானதாக இருத்தல் வேண்டும். சரியான அளவு இல்லாத ஆன்டெனுவினுல் படங்கள் மங்கலாகவும், இரட்டையாகவும் தோன்றும். குறைபாடுடன் பொருத்தப்படும் ஆன்டெனு எலிமென்ட்டுகளினுல், ஆன்டெனு சுழலுவதால் இரட்டைப் படங்களும், புள்ளிகள் நிறைந்த படங்களும் தோன்றும். இக்குறைகள், தரமில்லாத ஏரியல் ஒயர்களினுலும் ஏற்படுவது உண்டு, தரக்குறைவான ஒயர்களினுல், ஆன்டெனு சரியான தொடர்பு இல்லாமல், கருமையான பட்டைகளை (பாண்டு மூவ்மெண்ட்) படத்தில் நகரவைக்கிறது.

டிவி டவரிலிருந்து, 25 முதல் 30 கி.மீட்டருக்குள் வசிப்பவர்கள் '3-எலிமென்ட்' ஆன்டெனு உபயோகித்தால் போதுமானது.

வோல்ட்டேஜ் ஸ்டெபிலேஸர்

சாலிட் ஸ்டேட் டிவியுடன் ஒரு 'ஆட்டோமேடிக் வோல்ட்டேஜ் ஸ்டெபிலேஸர்' உபயோகிக்க வேண்டும். ஏனெனில் வோல்ட்டேஜ் 200க்கு குறைவாக இருப்பின், டிவி செவ்வனே செயல்படும் முறை பாதிக்கப்படுகிறது. இது டிவியை பாதிப்பதில்லை. ஆனுல் நிலையில்லாத, நெடுக்கமுள்ள படங்கள் தோன்றும். படங்கள், டிவி திரையின் முழு அளவுக்கு தோன்ருது. வோல்ட்டேஜ் 250க்கு மேல் போனுல் உருப்புகள் அடிக்கடி பழுதடையும். டிவி நீண்ட நாட்கள் உழைக்காது.

ஆட்டோமேடிக் ஸ்டெபிலேஸர் வாங்கும்பொழுது 200லிருந்து 250க்குள் வோல்ட்டேஜ் உள்ளதா என சரிபார்த்துக் கொள்ளவும். எப்பொழுதும் ஸ்டெபிலேஸரை முதலில் இயக்கிய பிறகே டிவியை இயக்க வேண்டும். இப்படிச் செய்வதால், ஸ்டெபிலேஸரை இயக்கியவுடன் பாய்ந்துவரும் மின் அழுத்தத்தினுல் டிவியில் உள்ள ஃபியூஸ் பழுதடையாது.

கண்கூசும் ஒளி தடுப்பு ஸ்கிரீன்

கண்கூசும் பிரகாசமான ஒளி கண்ணுக்கு உபாதை விளைவிக்காமலிருக்க, மங்கலான நிறம் கொண்ட, கீறல்கள், குமிழிகள், இல்லாத ஸ்கிரீன்களையே உபயோகிக்க வேண்டும்.

மறவாதீர்கள், விலை சிறிது கூடுதலாக இருந்தாலும், நீங்கள் வாங்குவது நல்ல தரமான அக்சஸ்சரீஸ்களாக இருக்கட்டும். இதனுல் நீங்கள் பிற்காலத்தில் துயர் அடையாமலிருக்கலாம்.

மக்கள் நலனை முன்னிட்டு

சாலிடேர் டிவி

தயாரிப்பாளர்களான,

ஹை-பீம் எலக்ட்ரானிக்ஸ் பி. லிட்., சென்னை-600 020.

ஸ்தாபனத்தாரால் வெளியிடப்பட்டது.

HE/117C

பரந்த முதுகும் பச்சைத் துண்டும்

கமலா நடராஜன்

பெட்ரோமாக்ஸ் லைட்டுகளின் உஸ்...ஸ் என்ற ஒலி தவிர—

ஆலமரத்தடி மேடையில் ஒருசில நிமிடங்கள் அபூர்வ அமைதி.

பெரிய மிராக பொன்னுரங்கம் — மணியக்காரர், நாட்டாண்மை என்று பல பொறுப்புக்களை ஒருசேர வகிப்பவர் — குனிந்த தலை நிமிராமல் யோசனையோடு குந்தியிருந்தார்.

இருக்காதா பின்னே?

மகனைப்போல் வளர்த்த அவர் உடன் பிறந்த தம்பி மாணிக்கம், கூட்டத்தில் ஒரு பக்கம் குற்றவாளியாக நின்றிருக்க, அந்த வழக்கு பற்றியும், அதன் முடிவு பற்றியும் அறிந்துகொள்ளும் ஆவலில் அநேகமாக அந்த ஊர் மக்கள் அத்தனை பேரும் அங்கு காத்திருக்கிறார்களே.

''மாணிக்கம் முடிவா நீ என்ன சொல்லறே?'' —பஞ்சாயத்தில் ஒருவரான பரமசிவம் கேட்டார்.

அவன் மௌனமாக, ஆனால் தலை நிமிர்ந்தபடி நின்று கொண்டிருந்தான்.

''சொல்லேம்பா, செல்வி உன் மேலே சுமத்துற குத்தத்துக்கு உன்னோட பதில் என்ன?'' — இது பஞ்சாயத்தில் மற்றொருவரான பிச்சையப்பா.

''பல தடவை கேக்கிறதினால மட்டும் பதில் மாறிடவா போகுது? எத்தனை தரம் கேட்டாலும் உண்மையான பதில்னு ஒண்ணு தான் இருக்க முடியும்'' — அவன் 'பளிச்' சென்று விடை பகர்ந்தான்.

''அப்படின்னு நேத்து செல்விகிட்டே தப்பா நடக்க முயற்சி பண்ணலை?...''

''நான் இல்லே. அதோடு மட்டுமில்லே. நேற்று முழுக்கச் செல்வியை நான் கண்ணாலே கூடப் பார்க்கல்லே.''

''பொய்.''

— சட்டென்று பதில் வந்த திசையை அனைத்துக் கண்களும் வெறித்தன.

பெண்கள் பகுதியில் அதுவரை ஓர் ஓரமாய் உட்கார்ந்திருந்த செல்வி எழுந்து நின்றுஅழுத்தம் திருத்தமாய்க் குரல் கொடுத்தாள்.

இவ்வளவு நேரம் அவள் தகப்பன் நாகமுத்துதான் அவளுக்காக வழக்காடிக் கொண்டிருந்தான். இப்பொழுது அவளே எழுந்து பேசத் தொடங்கவும் கூட்டத் தினர் ஆர்வம் அதிகரித்தது.

''ராத்திரி எங்க கறிகாய்த் தோட்டக் குடிசையில் படுத்திருந்த என்னைக் கெடுக்க வந்தது மாணிக்கம்தான். நான் மட்டும் உடனே சப்தம்போடாமே இருந்திருந்தா..'' குரலில் அழுத்தம் குறைந்து அழுகை கசிந்தது.

மீண்டும் சிறிது நேர அமைதி.

''ஏம்மா ஒரு கன்னிப் பொண்ணு நீ எதுக்காக ராத்திரி வேளையில் தோட்டத்துக் குடிசையில் தனியாப் படுத்திருக்கணும்'' — பரமசிவம் குறுக்கு விசாரணை செய்தார்.

''நாலு நாளா அந்த மாடு ராவோடு ராவா எங்க தோட்டத்திலே பூந்து பயிரை அழிச்சிட்டுப் போயிடுது. நானும் என் அப்பனும் நெத்தி வியர்வை நிலத்தில் சிந்தப் பாடுபட்டு வளர்த்த பயிரு. அது யார் வீட்டு மாடுன்னு கையும் மெய்யுமாய்ப் பிடிக்கணும்னுதான்.''

''அதுக்கு உன் அப்பன் நாகமுத்து இல்லியா?''

''பாவம்! பகலெல்லாம் மாடா உழைக்கிற அது, ராத்திரியிலே குடிச்சுப்போட்டுத்



தலே குப்புற விழுந்ததுன்னு சூரியன் உதிச் சாட்டித்தான் எழுந்திருக்கும். ரெண்டுமூணு நாள் அது போய்ப் படுத்திருந்தும் ஏமாந்த தனமா அசந்துட்டதனுலே அன்னிக்கு நானே போய்ப் படுத்திருந்தேன்.''

''என்ன இருந்தாலும் நீ ஒரு பெண் பிள்ளே எந்தத் தைரியத்தில் அப்படிப்போய்ப் படுத்திருக்கலாம்?''

''வீடு கூப்பிடு தூரத்திலேயும் உங்களேப் போல நல்லது கெட்டதை விசாரிச்சுத் தீர்ப்புப் பண்ண நாலு பேர் இங்கு இருக் கிறதுனுலே இன்னமும் நம்ம ஊர் அந்த அளவுக்குக் கெட்டுப் போயிடலேங்கிற தைரியத்தினுலும் தான்!''

பொன்னுரங்கம் அப்போதுதான் சட் டென்று நிமிர்ந்தார். பிறகு கேட்டார்:

''வந்தவன் மாணிக்கம்தான்னு நீ நிச்சய மாச் சொல்லக் காரணம்?''

''அவர் ஓடினபோது, மங்கின நெலா வெளிச்சத்தில் தெரிஞ்ச அந்தப் பரந்த முதுகும், என் காலடியில் விழுந்து கிடந்த இந்தப் பச்சைத் துண்டும்தான்.''

அதுவரை இடமாக நின்றிருந்த மாணிக் கம், அப்போதுதான் அதிர்ச்சியால் விழிப் பதுபோல் தெரிந்தான்.

பொன்னுரங்கத்தின் மனத்தில் வேதனே வழிந்தது. ஒரு முறை தம்பியைப் பார்த்து விட்டு மீண்டும் அவர் தலே குனிந்தார்.

''செல்வி சொல்றது முழு உண்மைன்னு தான் நாங்களும் நினேக்க வேண்டிய இருக்கு. ஏன்னு இப்போதைக்கு நம்ம கிராமத்திலே சில சமயங்களில் பச்சைத் துண்டு போட்டுக் கிட்டுத் திரியற ஒரே ஆசாமி மாணிக்கம் தான்.''

அனேவரது கண்களும் மாணிக்கத்தை நோக்க—

''மாணிக்கம், இதுக்கு என்னப்பா பதில் சொல்றே?'' — பிச்சையா கேட்டார்.

பொன்னுரங்கம் அவரையும் தன் தம்பி யையும் ஒருமுறை திரும்பப் பார்த்தார். கலங் காத நெஞ்சமுள்ள அவரும் ஒரு விநாடி கலக்கமுறுவது கண்களில் தெரிந்தது.

பெட்டிக் கடைக்காரருடன் ஒரு பேட்டி

''அச்சுக்குப் போகும்போது தலேப்பை நல்லா சரி பார்த்துக்குங்க.:. பேட்டிக் கடைக்காரருடன் ஒரு பெட்டினு அச்சாகித் தொலேச் சிடப் போகுது!''

-உ. ராஜாஜி



மாணிக்கம் சொன்னுன்: ''இதற்கு நான் பதில் சொல்ல இரண்டு நாள் அவகாசம் வேணும்.''

''சரி நீ சொல்ற மாதிரி உனக்கு இரண்டு நாள் அவகாசம் தரதா வச்சுக்குவோம். அதற்குள் நீ ஊரை விட்டே ஓடிட மாட் டேங்குறதுக்கு என்ன உத்தரவாதம்?'' என் ருர் பரமசிவம்.

''என் அண்ணன் — நாட்டாண்மை — பொன்னுரங்கம்-அவர்தான் உத்தரவாதம்.''

பஞ்சாயத்தாரில் மற்ற நால்வரும் பொன் னுரங்கத்தைப் பார்க்க - சற்று நேரத் திகைப் புக்குப் பின், அவர் தம் சம்மதத்தின் அறி குறியாகத் தலேயசைத்தார்.

கூட்டம் இரு தினங்கள் ஒத்தி வைக்கப் பட்டது.

மறுநாள் முழுவதும் அண்ணன் தம்பி இரு வரிடையே மௌனத்தில் கழிந்தது.

அன்று மாலே வயற்காட்டிலிருந்து திரும் பிக் கொண்டிருந்த பொன்னுரங்கத்தின் உள்ளத்தில் ஆயிரம் சிந்தனேகள். எப்படி நடந்திருக்க முடியும்?

சாதாரண ஒரு சின்னக் குற்றம் இத் தகைய பெரிய குற்றங்களுக்கும் வித்தாகி விடக் கூடுமா என்ன?

நேற்று முன்தின இரவு நினேவுக்கு வரு கிறது — செங்கமலம், ராக்கப்பன் வந்து அவ ரைத் தேடிச் சென்றதாகச் சொன்னவுடன் அவசரமாகப் புறப்பட்டார்.

அப்போது இரவு பதினெரு மணி.

''இப்படி ஒரு பழக்கத்துக்கு அடிமையா விட்டதாலே இப்போ நேரம் காலம் கூடப் பார்க்காம ஓடத்தோணுது பார்த்தீங்களா'' —அவன் சினந்தான்.

''உஷ்.... சத்தம் போடாதே மாணிக்கம் வாப் போருன்.''

''கொட்டுற பனி கூடத் தெரியலேயா? இந்தாங்க இதையாவது தலேயிலே சுத்திக் குங்க.' அவசரத்தில் அவன் கையில் கிடைத் தது அந்தப் பச்சைத் துண்டுதான். அவருக் கிருந்த ஆர்வத்திலும் பரபரப்பிலும் அதை வாங்கிச் சுற்றிக் கொண்டு போய்விட்டார்.

ராக்கப்பன்தான் அவருக்குச் சரக்கு விநி யோகம் செய்பவன். எங்கிருந்தோ எப் படியோ உயர் ரக மது வகைகளேக் கடத்தி வந்து கொடுத்து விடுவான்.

செங்கமலத்துக்குச் சில தினங்களுக்கு முன் தான் இது தெரியும். அவர் குணம் ஒரு மாதிரி என்பதால் கண்டிக்கப் பயந்தான்.

பொன்னுரங்கத்துக்கு மற்றவரிடம் எப் படியோ தம்பியிடம் இது விஷயத்தில் கொஞ்சம் யோசனே. மாணிக்கம் அவரிடம் அவ்வளவுமரியாதையும் பக்தியும் வைத்திருந் தான். அந்த எண்ணத்தில் ஒரு தொய்வு உண்டாக்கிவிடக் கூடாது என்ற பயம்.

ஆகவேதான், அவர் அதற்குரிய இடமாக, நாகமுத்துவின் தோட்டத்திலிருந்து சிறிது தூரத்தில் தம் வயலில் உள்ள பம்ப் ஷெட் கட்டிடத்தைத் தேர்ந்தெடுத்து விட்டிருந் தார்.

அன்று இரவும் அப்படித்தான் போனுர். கொஞ்சம் அதிகமாகவே போய்விட்டது.



வசந்தத்தின் புத்துணர்ச்சி...

புதிய

எல்ஃபா

சுவையான இனிய பானம்

எல்ஃபா குழந்தைகளின் வளர்ச்சிக்கும், ஊட்டத்திற்கும், தாய்மார்களுக்கும் உகந்ததோர் பானம். எல்லா வயதினருக்கும் ஏற்றது.

எல்ஃபா பாதமும், பாலும் மற்ற இதர சத்துக்களும் நிறைந்தது. நீங்கள் எல்ஃபாவின் சுவையினை முற்றும் அறிந்திட சூடான பால், குளிர்ந்த பால், ஐஸ்கிரீம் முதலியவைகளுடன் கலந்து உபயோகிக்கலாம். தவிர ஹல்வா, ஜிலேபி, லட்டு முதலான இனிப்புகளின் ருசியை அதிகரிக்க எல்ஃபா சேர்த்துத் தயாரியுங்கள்.

எல்ஃபா உங்கள் குடும்பத்தின் அன்றாட வாழ்க்கையை புத்துணர்ச்சியுடன் ஆக்கவல்லது.

300 கிராம், 100 கிராம் பாக்கிங்குகளில் கிடைக்கிறது.



Marketed by:
Pussbell CORPORATION
Virudhunagar 626 002

ADWAVE/PC/1461


திருச்சியில்
தரமான ரெடிமேட்
ஆடைகள் நியாயமான
விலையில் வாங்க
கிட்ஸ்
கார்னர்
தொலைபேசி
23933
35,சிங்காரத்தோப்பு,திருச்சி-620008

சட்டத்தின் மீதும் போலீஸ் மீதும் நம்பிக்கை இழந்த அவள் தானே கயவனுக்கு நீதி வழங்குகிறாள்!

அவரவரும் சட்டத்தைத் தன் கையில் எடுத்துக்கொள்ளும் ஆபத்தைத் தவிர்க்க, போலீஸார் அரசியல் தலையீடின்றிச் செவ்வனே கடமையாற்ற வேண்டும் என்ற கருத்தை உள்ளடக்கிய படம். — சித்தி



நாகமுத்துவின் தோட்டக் குடிசை வரை வந்தவர் சற்று அதன் வாசலில் உட்கார்ந்திருந்து புறப்பட்டது போல் ஞாபகமிருக்கிறது. மற்றவை....?

ஏறக்குறைய அந்தி மயங்கும் நேரம்.

அந்த இடத்தில்தான் சாலையை யொட்டி நாகமுத்துவின் குடிசையும் தோட்டமும்.

ஜன சந்தடியற்ற அந்த வேளையில் அவர் அவற்றைக் கடந்தபோது—

'நெற்றி வேர்வை நிலத்தில் சிந்த என் அப்பனும் நானும் பாடுபட்டு வளர்த்த பயிர்' என்று செல்வி சொன்ன அதே தோட்டத்தின் ஒரு பகுதியை அவளே ஒருமாட்டை விட்டு மேய்த்துக் கொண்டிருப்பதைக் கண்டவர் திடுக்கிட்டார்.

ஊர்ப்பஞ்சாயத்தில் ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது. மாணிக்கம் குற்றவாளிதான். குற்றத்தை அவனே ஒப்புக் கொண்டு விட்டான்! எனவே பஞ்சாயத்தாரில் மற்ற நால்வரும் அவனுக்கு ஐந்நூறு ரூபாய் அபராதம் விதித்துத் தீர்ப்பளிக்குமாறு கேட்டுக் கொண்ட போது—

பொன்னுரங்கம் அதற்கு உடன்படவில்லை.

ஒரு கன்னிப் பெண்ணின் வாழ்வைக் கெடுக்கத் துணிந்த குற்றம், காசு பணத்தைக் கொடுத்துச் சரிசெய்துவிடக் கூடியது அல்ல.

'மாணிக்கம் அவளைத்தான் மணந்து கொள்ள வேண்டும்.'

அவருக்கும் நாகமுத்துவுக்கும் இடையில் உள்ள அந்தஸ்து பேதத்தையும் மறந்து அவர் இப்படிக் கூறியபோது—

கூட்டம் மொத்தமும் வியப்படைந்து திகைத்தது.

ஐந்தாறு நாட்களுக்குப் பின்—

''அண்ணிக்குத்தான் நாம ரெண்டு பேரும் நன்றி சொல்லணும். இல்லேன்னு சொன்னா, அந்தஸ்தில் மிகவும் குறைந்த உன் அப்பாவைச் சம்பந்தியா ஏத்துக்க என் அண்ணன் சம்மதிச்சிருக்கவே மாட்டார்'' — தோட்டத்துக் குடிசையில் செல்வியிடம் மாணிக்கம் சொல்லிக் கொண்டிருந்தான்.

''எனக்கென்னவோ என் கழுத்தில் நீங்க மூணு முடிச்சுப் போடற வரைக்கும் பயமாய்த்தான் இருக்கு. விஷயம் எப்படியாவது வெளியிலே தெரிஞ்சு, உங்க அண்ணன் காதுக்குப் போயிட்டா?'' — செல்வி உண்மையிலேயே நடுங்கினாள்.

''எப்படிப் போக முடியும்? இந்த விஷயம் உனக்கும், உன் அப்பாவுக்கும், எனக்கும், என் அண்ணிக்கும்தான் தெரியும். நாலு பேரும் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறோம். யார்போய் அவர் கிட்டே சொல்ல முடியும்?''

''இருந்தாலும் உங்களுக்கு ரொம்பத் தைரியம்!''

''எல்லாம் அண்ணி கொடுத்த தைரியம் தான். முதலில் நம்மைப் பத்திச் சொன்னப்போ, நம்ம அந்தஸ்து பேதத்தையும் அண்ணன் குணத்தையும் நினைச்சு அவுங்களும் பயந்தாங்க. அப்புறம்தான் ஒரு நாள் அந்தப் பச்சைத் துண்டை உங்க குடிசை வாசலில் கிடந்து எடுத்து என் கிட்டே நீ கொடுத்ததைப் பத்தி பேச்சு வாக்கில் சொன்னபோது அவுங்க தயாரிச்சு விட்ட நாடகம்தான் இது. ஆனா ஒண்ணு மட்டும் இன்னும் புரியலே. அந்தத் துண்டு எனக்கும் தெரியாமல் எப்படி உன் வீட்டு வாசலுக்கு வந்திருக்கும்?''

''அதுதானே, எப்படி வந்திருக்கும்?''

மாணிக்கமும் அவளும் மண்டையைப் பிய்த்துக்கொள்ள—

வயலுக்குப் போகும் வழியில், தம் வருங்காலச் சம்பந்தி நாகமுத்துவிடம் சிறிது பேசிவிட்டுச் செல்ல அங்கு வந்த பொன்னுரங்கம் ஒன்றுவிடாது அவர்களது சம்பாஷணையைக் கேட்டுச் சிரித்துக் கொண்டே திரும்பியவர் நினைத்துக் கொண்டார்:

''எலே மாணிக்கம், நான் ஒண்ணும் உங்க நாடகத்திலேலே ஏமாந்துடலே. அன்னிக்குச் செல்வி தன் வீட்டுத் தோட்டத்தில் தானே ஒரு மாட்டை விட்டு மேய்ச்சுக்கிட்டிருந்ததைப் பார்த்தவுடனேயே, இது பொய் வழக்குன்னு எனக்குப் புரிஞ்சுபோச்சு. முதல் நாள் வழக்கில், 'அந்த'ப் பிரச்னை முக்கியமாப் போயிட்டதனாலே இந்த உண்மையை அறியணும்னு யாருக்கும் தோணலே. ஆனா அடுத்த நாள் அவளுக்கே ஒரு பயம் வந்து, தான் சொல்லிவிட்ட பொய்யை உண்மையாக்கத்தானே அப்படிச் செய்திருக்கா. இதை யெல்லாம் யோசிக்க நான் முடிவு பண்றதுக்குள்ளே, அந்த ஓர் இரவும் பகலும் என்மீதே எனக்கு ஒரு நம்பிக்கைக் குறைவை ஏற்படுத்திவிட்ட என்னுடைய அந்தத் தீய பழக்கத்துக்கு, இதையே காரணமா வெச்சு ஓர் அதிர்ச்சி வைத்தியத்தைக் கொடுத்து, ஒழிச்சுக் கட்டின உன் அண்ணிக்கு நானும் நன்றி செலுத்த வேண்டாமா? அதனாலதான் அவளே விரும்பி ஏத்துக்கிட்ட உங்க கல்யாணத்துக்கு நானும் ஒத்துழைப்புத் தர்றதாத் தீர்மானிச்சுட்டேன்!''



பம்பாய் ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷனில் பணி புரியும் ஸ்ரீ V. ராஜாராமின் குமாரன் சிரஞ்சீவி சந்திரசேகருக்கும் (Planning Officer, International Airport Authority of India, H.Q.O. New Delhi) ஸ்ரீ P. V. பாலசுப்ரமணியனின் (Ministry of Defence, New Delhi) குமாரத்தி சௌபாக்கியவதி கௌரிக்கும் 5-9-80 அன்று புதுடில்லி சரோஜினி நகர் பாரத்கர் ஹாலில் திருமணம் வெகு சிறப்பாக நடந்தேறியது.

வாழ்க மணமக்கள்



✖ கொமேனி



✖ ஈரானிய யுத்த விமானம்

ஒரு புரளிக்கு முடிவு

கே. ஸ்ரீனிவாசன்

ஈரானில் கொமேனி நாடு திரும்பி அந்நாட்டு மன்னர் ஷா முடி அறந்ததும் உண்டான திருப்பம் மதத்துக்குக் கொடுக்கப்பட்ட மகத்துவம். மதம் வேறு அரசு நிர்வாகம் வேறு என்ற பரம தத்துவம் கைவிடப்பட்டது.

ஈரான் நாளுக்கு நாள் சகதியில் புதையப் புதைய அண்டை நாடான ஈராக் முன்னேறி வந்தது. அந்நாட்டில் ராணுவத்தில் அவ்வப்பொழுது மாறுதல்கள் ஏற்படுவது உண்டு. ஆனால் அது அந்நாட்டின் அந்நிய உறவைப் பாதித்தது இல்லை. இந்தியா கணிசமாக ஈராக்குடன் தொழில் சம்பந்தமான உறவு கொண்டுள்ளது.

மன்னர் ஷா காலத்தில் ஏற்பட்ட ஒப்பந்தம் குதிரை முக உருக்குக் கனியை எடுத்துப் பொடித்து அதைத் திரவத்தில் கலந்து அந்தத் திரவத்தை எண்ணெயைக் குழாயில் அனுப்புவது போல மங்களூருக்கு அனுப்ப ஒப்பந்தம் ஏற்பட்டது. மங்களூரில் மீண்டும் கனியைத் திரவத்திலிருந்து பிரித்து ஈரானுக்குக் கப்பலில் அனுப்ப வேண்டும்.

இது மிகவும் கடினமான திட்டம். ஆனால் இந்திய நிர்வாகப்புலிகளும் என்ஜினியர்களும் அதைத் திறம்பட நடத்தி வைத்தார்கள். மங்களூரில் கனி தயார். ஆனால் அதை யார் ஈரானுக்குக் கொண்டு செல்வது? கொண்டு சென்றாலும் அதை உருக்காக பாடம் செய்ய யார் உள்ளார்கள்? கொமேனியின் கைங்கரியம் காரணமாக ஈரானில் உருக்கு உற்பத்தி என்பது பகற் கனவாயிற்று.

ஈராக்குக்கும் ஈரானுக்கும் இடையே புகைச்சல் உண்டு. ஈராக் முஸ்லிம்கள் அரபுகள். ஆப்பிரிக்காவில் மொராக்கோவில் துவங்கும் அரபு சங்கிலி எகிப்து, ஸௌதி அரேபியா வழியாக வந்து ஈராக்கில் முடிகிறது. அரபு அல்லாத நாடுகளும் அரபு நாடுகள்தான்.

ஈராக்கில் அரசு மதத்தை நிர்வாகத்துடன் கலந்து குழப்புவதில்லை. ஆகவே அந்நாட்டு பொருளாதாரம் மிடுக்கு நடை போடுகிறது. கொமேனி தன் அடிப்படை இஸ்லாம் ''புரட்சி''யை அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் துவங்கியதும் ஈராக் எச்சரித்தது. ஆனால் ஈரான் செவி சாய்க்கவில்லை. மூண்டது யுத்தம். இதை எழுதும் சமயம் ஈராக் கிட்டத்தட்ட தன் லட்சியத்தை நிறைவேற்றி விட்டது. அதாவது எண்ணெய் உற்பத்தியாகும் பகுதிகளைப் பிடித்து விட்டது.

ஈராக்கின் ராணுவ சப்ளைகள் ரஷ்யாவிலிருந்து வந்தவை. ஈரானுடைய ராணுவம் அமெரிக்க மோஸ்தர். அமெரிக்க பணயக் கைதிகளைக் கிட்டத்தட்ட ஒரு வருடமாகச் சிறை வைத்து சர்வ தேச வேண்டுகோள்களைக் காலின் கீழ் போட்டு மிதித்த ஈரானுக்கு யார் உதவுவார்கள்?

இந்த யுத்தம் இஸ்லாம் நாடுகளுக்கிடையே யுத்தம் மூளாது என்ற புரளிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது.

✖ ஈராக் சிப்பாய்கள்



காலம்
காத்திருப்பதில்லை



அதுமட்டுமல்ல...நாம் இழந்த காலத்தை மீண்டும் பெறமுடியாது.

காலம் விரைந்தோடும் முன்பாக, உங்கள் எதிர்காலத்துக்குத் திட்டமிட்டு சேமிக்க வேண்டும். உங்கள் எதிர்காலத்துக்கு உதவிட, உங்கள் சக்திக்கும், தேவைக்கும் ஏற்ற பல்வேறு சேமிப்புத் திட்டங்களை கரூர் வைஸ்யா பாங்க் அளிக்கிறது. தக்கதோர் திட்டத்தைத் தேர்ந்தெடுத்து உங்கள் எதிர்கால நலனுக்கென சேமியுங்கள்.

1. திருமகள் திருமணத் திட்டம்
2. ஜம்போ சேமிப்புத் திட்டம்
3. சூர்யோதயா சேமிப்புத் திட்டம்
4. தேனீ சேமிப்புத் திட்டம்

மற்றும் புதிதாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ள எமது ரொக்கப் பத்திரங்கள் திட்டம்.

உங்கள் வாழ்க்கைப் பாதையில்
வளமைக்கு வழிகாட்டி
கரூர் வைஸ்யா பாங்க்

கரூர் வைஸ்யா பாங்க் லிட்.,

பதிவு அலுவலகம்: கரூர்-639 001

எமது பம்பாய் அலுவலகம்:
''சாயி சேம்பர்ஸ்''
365-367 நர்ஸி நாதா தெரு,
மஸ்ஜித் பந்தர்,
தபால் பெட்டி நெ-5254
மாண்ட்வி, பம்பாய்-400 009

K.V. ராகவாச்சாரி
சேர்மன்

PADA-KVB-107



என்மீதே எனக்கு எரிச்சல் எரிச்சலாய் வருகிறது. இந்த வயதில் எனக்கு இப்படியொரு நினைவா? மாட்டிக் கொண்டால் முதல் கேள்வியே,'' நீயெல்லாம் ஒரு பெரிய மனுஷனுய்யா?'' என்றுதான் கேட்பார்கள். இந்தப் பயமும் மனசுக்குள் இருக்கத்தான் செய்கிறது. இருந்தாலும்...,

யாரோ ''கெட்டி மேளம்! கெட்டி மேளம்'' என்கிறார்கள். அப்போது தான் எனக்கு நான் கலியாண வீட்டில் இருக்கிற நினைப்பே உறைக்கிறது. எத்தனை கேவலமான மனிதன் நான்: கலியாண வீட்டுக்கு வந்த இடத்தில் இப்படியா....?

ரமணி வந்து ''என்னப்பா...எப்ப வந்தேன்?'' என்று கேட்கிறான். சடாரென்று பார்வையைத் திருப்பிக் கொள்கிறேன். ''இப்பத்தான். நீ..என்ன.. கலியாணத்துக்கு வர லேட்டாகும்னியே? ஆபீஸுக்கு லீவு போட்டுட்டியா?''

''ஆமாம்பா... மூர்த்தி கண்டிப்பா வந்துடச் சொல்லி 'ரிங்' பண்ணினான். சரின்னு கிளம்பிட்டேன்'' என்றவன், ''நிறைய வேலை இருக்குப்பா... அப்புறமாப் பேசலாம். வரட்டுமா?'' என்று பேசிக் கொண்டே உள்ளே போய் விடுகிறான்.

ரமணி என் ஒரே பிள்ளை. எல்லோருக்கும் உதவி செய்கிற சுபாவம். பி.எஸ்ஸி, பஸ்ட் கிளாஸ். என்றாலும் நல்ல வேலை கிடைக்கவில்லை. அவனது சொற்ப சம்பளத்திலும் நான் எடுக்கிற பாட்டு டியூஷன்களிலும் வரும் வருமானத்திலும் எப்படியோ வயிறு காயாமல் வாழ்கிறோம்.

ரமணி போனதும் மீண்டும் பழைய வக்ர உணர்வுகள் தலை தூக்கின. 'தலை குனிய' வைக்கிற உணர்வுகளின் 'தலை தூக்கல்!'

என்னை இத்தனை சபலத்துக்கும் உள்ளாக்கியது ஒரு குடை! சின்ன, அழகான, கறுப்புக் குடை! பார்த்தால் புதுசு போலத்தான் தெரிகிறது. அதைப் பார்த்ததிலிருந்துதான் என் மனசின் இரு பக்கங்களுக்கும் போராட்டம்.

எனக்கும் வயசாகிக் கொண்டே போகிறது. ஓரடி எடுத்து வைத்தால் எட்டடி வாத்தித் தள்ளுகிறது. அதுவும், நான் பாட்டுச் சொல்லிக் கொடுக்கிற நாலு பெண்களும் நாலு மூலையா.... வேகாத வெய்யிலில் அலைந்து திரும்புவதற்குள் போதும் போதுமென்றாகி விடுகிறது.

ஒரு நாளைப் போல... நானும் ரமணியிடம் சொட்டுக் கொண்டுதான் இருக்கிறேன்.

''வெய்யில் நெருப்பாப் பொறிஞ்சு கொள்ளறதுடா! ஒரு குடை வாங்கிக் குடுடா'' என்று. ''ம்...ம்...'' என்கிறானே தவிர இன்னும் ஒரு குடைக்கு எனக்குப் 'பிராப்தி' இல்லை!

''சார், இலை போட்டாச்சு, நீங்க எங்கயோ அவசரமாப் போகணும்னேளே..... வேணா, முதல் பந்தியிலேயே உட்கார்ந்திடுங்கோ'' என்று யாரோ சொல்கிறார்கள்.

''ரொம்ப தாங்க்ஸ்'' என்று புன்னகைத்தபடியே எழுந்து சாப்பிடப் போகிறேன்.

சாப்பாடு முடிந்து வெற்றிலை பாக்கும் போட்டுக் கொண்டாகி விட்டது. ஒரு குட்டித் தூக்கம் போட்டால் வெகு சுகமாயிருக்கும். என்ன செய்வது, பாட்டுச் சொல்லிக் கொடுக்கப் போகணுமே? அவசரமாய் எழுந்து கொண்டு ரமணியைக் கூப்பிடுகிறேன். ''நான் இப்படி ருக்மிணி வீட்டுக்குப் போயிட்டு, ஒரு மணி நேரத்திலே வந்து சேரறேன். நீ வர நாழியாகுமா?''

''ஆகும்போலத்தான் தெரியறது. அநேகமா நீங்க வந்தப்புறந்தான் நான் வர முடியும்னு நினைக்கிறேன்'' என்றவன், யாரோ

பொம்மைக் கொலு

▼ சுதர்ஸனி ◀



''இந்தப் பொம்மைக்குக் கட்டியிருக்கும் புடவை போல் ஒரு புடவை வேணும் இருக்கா?''



''கை கால் உடைந்த பொம்மைகளை ஒட்டணும்! ஒரு பிளேட் கோதுமை அல்வா தரீங்களா!''



''டல்'லாக இருக்கு டாக்டர்!''

''டல்'லுக்குக் காரணம்?''

''சன் - டல் சாப்பிட்டேன்!''

●

''செட்டியார் பொம்மைக்குப் பக்கத்திலே, அது என்ன பொம்மை?''

''சில் சப்ளை அதிகாரிபொம்மை தான்!''



கூப்பிடவும் தலையை அசைத்தபடியே மீண்டும் உள்ளே விரைகிறன்.

மீண்டும் மனப் புயல்! சுற்று முற்றும் யாரும் என்னை அக்கறையுடன் கவனிப்பதாகத் தெரியவில்லை. ''நல்ல சான்ஸ் நல்ல சான்ஸ்! விடாதே விடாதே!'' என்கிறது ஒரு மனம். ''வேண்டாம்! வேண்டாம்! மாட்டிக்கிடடே, மகா கேவலம்! வேண்டாம், சொன்னக் கேளு. ஊரார் சொத்து உனக்கெதுக்கு? நியா உழைச்சுச் சம்பாதி. அதான் நிலைக்கும்'' என்று அட்வைஸ் பண்ணியது இன்னொன்று.

இரண்டுக்கும் இடையிலே நான் தவித்த தவிப்பு!

நான் வாயிலருகில் போய் நின்றேன். சுற்று முற்றும் பார்த்துவிட்டு 'டக்'கென்று அந்தக் குடையை எடுத்துக் கொண்டு வெளிக் கிளம்புகிறேன். எச்சரிக்கை! எச்சரிக்கை! ரொம்ப மெதுவாகப் போனால் யாராவது கூப்பிட்டாலும் கூப்பிட்டுவிடலாம். ரொம்ப வேகமாகப் போவது நாலு பேர் சந்தேகப்படும்படி தூண்டும்.

தெருவில் வருவோர் போவோரெல்லாம் என்னைத் துரியாய்ப் பார்க்கிறார்கள். எனக்கு வியர்க்கிறது. எச்சிலைக் கூட்டி விழுங்க...

''சார்! சார்!'' என்று பின்னாலிருந்து யாரோ கைதட்டிக் கூப்பிடுகிறார்கள். உடம்பு 'விர்ர்'ரென்று முறுக்கேறி விறைக்கிறது.

திரும்பிப் பார்க்காமல், நடையினை வேகப்படுத்துகிறேன். 'சடா'ரென்று இடது புறச் சந்தொன்றில் திரும்பி விடுகிறேன். 'நல்ல வேளை! தப்பித்தேன். அந்த ஆள் தொடர்ந்து வரவில்லையே!' ......ஸ் அப்பாடா! நிம்மதிப் பெருமூச்சு விடுகிறேன்.

வெய்யில் சற்று மட்டுப்பட்டாற்போல் தோன்றுகிறது. 'அடுத்தவனை ஏமாற்றி' விட்டோம். எவ்வளவு சாமர்த்தியமாய்...! எனக்குச் சிரிப்புச் சிரிப் — அடக்கிக் கொண்டேன். — பாய் வந்தது. 'சே! கெடுகெட்ட ஜென்மம்! 'செய்யறது திருட்டு. இதுல சாமர்த்தியமாச் செஞ்சிட்டதா சந்தோஷம் வேற... நீல்லாம் ஒரு மனுஷ-ந?... தூ!'' என இடிக்கிறது மனச்சாட்சி.

''ஆ....மா எல்லாரும் நேர்மையாத்தான் சம்பாதிக்கிறாங்களாக்கும்? நீ சும்மா கெட'' என நான் மனசை அடக்.... என்ன இது?'

இரக்கமற்ற பாவிகள்! இப்படியா ஒரு பத்து வயசுப் பையனை இவ்வளவு பெரியவர்களாய்ச் சேர்ந்து கொண்டு அடிப்பது?

''ஐயா! ஐயா! அடிக்காதீங்க, அடிக்காதீங்க! வயத்துப் பசி தாங்காமல் தெரியாமல் திருடிட்டேன்!''

எனக்குள் 'சொடே'லென்று ஏர் பிரேக் போட்ட மாதிரி ஆடீனயில் உலுக்குகிறது. 'பார்ரா பார்! பசி தாங்காமல் திருடின அவனுக்குக் கிடைக்கும் தண்டனையைப்பார்! இல்லாமையால் திருடல அவனுக்கே இந்தத் தண்டனை என்றால் உனக்கு?'

ஊமை அழுகை அழும் இதயத்துடன், இதயத்தை அழுத்தும் கனத்துடன், அந்தக் கனத்தைச் சுமக்க முடியாத நிலைமான

உடனுடன் நடக்கிறேன் ருக்மிணி வீட்டை நோக்கி.

அன்று டியூஷனில் மனசே ஓடவில்லை. மன உளைச்சல் ஓயவில்லை. ''நான் வரேம்மா', என்று அந்தக் குடையை எடுத்.....

''என்ன சார்? எங்க வீட்டுக் குடையை எடுத்துண்டு போறேள்'' என்று கேட்கிறாள் ருக்மிணி.

ஆக. குடை வந்து சேர வேண்டிய இடத்துக்கு வந்து விட்டது! எல் மன உளைச்சலுக் கெல்லாம் விடுதலை! கூடவே, ''இது எப்படி, உங்க கைல?'' என்று இவள் கேட்டால்....? என்ன பதில் சொல்வது? ''உங்க அப்பா கலியாணத்துலே விட்டுட்டு வந்துட்டார் போலிருக்கு. நான்தான் பார்த்து 'நம்மாத்து மாதிரி இருக்கே'ன்னு சொல்லி எடுத்துண்டு வந்தேன்' என்று சொல்லிவிட வேண்டும். அது தான் மானமாய்த் தப்பிக்க ஒரே வழி.

நான், ''ஹி....ஹி!'' என்று அசடு வழிந்து கொண்டு ஆரம்பிக்க அவள், ''உங்க குடை அங்கே இருக்கு சார்! இது எங்க வீட்டுக் குடை'' என்கிறாள்.

நான் அயர்ந்துபோய்ப் பார்க்கிறேன். 'உன்னை இவ்வளவு வேளில் நிம்மதியாக இருக்க விட்டுடுவேனா என்ன?' என்று சிரிக்கிற தோரணையில் நிற்கிற அதனை எடுத்துக் கொண்டு நடக்கிறேன்.

குடையா இது? ஒரு குடைக்கா பாருங்கள் லாய் இத்தனை கனம்! முகத்தில் வழியும் வியர்வையைத் துடைத்துக் கொள்கிறேன்.

வீட்டுக்கு வந்து ... லயில் குடையை வைக்கிறேன். இன்னும் ரமணி வந்திருக்கவில்லை. ஈச் சேரில் சாய்ந்து கொஞ்சம் ஆசுவாசப் படுத்திக் கொள்கிறேன். சோர்ந்தாற்போல் ஒரு வாரம் காய்ச்சலில் விழுந்து எழுந்த மாதிரி அத்தனை அசதி!

அப்படியே உறங்கிப் போகிறேன். எவ்வளவு நேரம் அப்படித் தூங்கியிருப்பேனோ எனக்கே தெரியவில்லை. ரமணி வந்து கதவைத் தட்டோ தட்டென்று தட்டுகிறாள். எழுந்து போய்க் கதவைத் திறக்கி...ன்.

''என்னடா, என்னவோ மாதிரி இருக்கே? கலியாண வீட்டிலே ஏதாச்சும் மனஸ்தாபமா என்ன?''

''ம்ஹூம்! அதெல்லாம் ஒண்ணுமில்லே. அடிக்கடி நீங்க கேட்டுண்டு இருந்தேளேன்னு வாயக்கட்டி வயித்தைக் கட்டிக் காசு சேர்த்து அந்தப் பணத்திலே இன்னிக்கு உங்களுக்கு ஒரு குடை வாங்கிண்டு வந்தேன். அதைக் கண்கொத்திப் பாம்பாய்ப் பார்த்துட்டு, எந்தப் படுபாவிப் பயலோ கலியாண வீட்டிலே நவட்டிக்கிட்டுப் போயிட்டான். இவன்லாம் உருப்படுவானா?'' என்று எரிச்சல் பட்டுக் கொண்டே கொல்லைப் பக்கம் போய் முகம் கழுவிக் கொள்கிறாள் அவள்.


நான்....? அவள் கண்ணில் படாமல் குடையை மறைக்க இடத்தைத் தேடிக் கொண்டிருக்கிறேன்!

கராத்தே பயிற்சி 10

பயிற்சியாளர்: டோனி பொன்னையா

சித்திரம்: [signature]


தயாரிப்பு: குண்டுமணி



கிப்படாச்சி நிலை

(HORSE RIDING STANCE)

1. இயற்கை நிலை (NATURAL STANCE)
2. வலது காலிலிருந்து இடது காலை இரு மடங்கு அகற்றி வைத்தல். (படம் பார்க்க)



1.

சரியான முறை



2.

தவறான முறை



லவ் இன் சிங்கப்பூர்



வைரங்கள் பதிக்கப்பட்ட கத்தி திருட்டுப் போக அதைக் கண்டுபிடிக்க சி. ஐ. டி. சிங்கப்பூர் போகிறார். அங்கே லதாவுடன் காதல். லவ் இன் சிங்கப்பூர் சி.ஐ.டி. ரங்கனாத்தின் நீட் வொர்க். அப்பாவைக் கொன்றவனைக் கண்டுபிடித்துக் கத்தியை மீட்கிறார். பிரிந்த தம்பியையும் அடைகிறார். தெலுங்கிலிருந்து 'டப்'பி வந்த 'கத்தி' போடும் கதை.

தம்பியாய் வரும் சிரஞ்சீவி ஆபத்பாந்தவனாய் வந்து அடித்து நொறுக்கி 'சர்வீஸ் சார்ஜ்' கேட்பது பழக என்றாலும் புதுசு. இவர் அண்ணனைக் கண்டதும் நெகிழ்ந்து, அம்மாவிடம் போனில் பேச முடியாமல் தவித்து நடிப்பில் மிஞ்சுகிறார். துடிப்பு. வேகம். இளமை. அழகான ஆட்டம். சரியான வில்லன் - கம் - ஹீரோத்தனம்.

இந்து - தயாளின் கேமராவுக்கு வெளி நாட்டில் நல்ல தீனி. சங்கர் கணேஷ் இசை சிங்கப்பூருக்கு அழைத்துச் செல்கிறது. ஓ.எஸ். ஆரின் டைரக்ஷன் ஓ.கே.

ராமன் பரசுராமன்

மூன்று வில்லன்களை ஹாங்காங், சிங்கப்பூர், ஜப்பான் என்று அனுப்பிவிட்டு நாயகனுக்கு க் காதலியோடு ஊர் சுற்ற வாய்ப்பு தருகிறார்கள். அப்பா சாவுக்குக் காரணமான அந்த மூன்றுபேரையும் பழிவாங்கும் பரசுராமன் சிவகுமார். இவரின் அப்பாவி தம்பி டாக்டர் சிவகுமார். இரட்டை வேடம். ஆள் மாறாட்டக் குழப்பம், அதனால் காதல் சிக்கல், எல்லாம் பழைய சமாச்சாரம்தான். இந்த முறை சிவகுமார் கைவரிசை. வித்யாசத்தைக் காட்டுகிறார்.

வெளிநாட்டில் பைக்கில் பறந்து வந்து உள் நாட்டில் அடித்து உதைக்கிறார். நம்மூர் மாடிமேல் அடிதடி முடிந்ததும் ஹாங்காங்கில் அடிபட்டவர்கள் கீழே கிடக்கிறார்கள். இதுமாதிரி காது குத்தல்கள்.

லதாவும் ரதியும் மாறி மாறி சிவகுமாருடன் ஆடிப்பாடி நமக்கு வெளிநாட்டைச் சுற்றிக் காட்டுகிறார்கள். நகைச்சுவை இல்லை. கருணையும் இல்லை. அப்பாடா!

சத்யத்தின் இசையில் பாடல்கள் இனிமை. வெளிநாட்டில் ஒளிப்பதிவுதரம். ஆனால் சிவகுமாரும் சிவகுமாரும் சந்திக்கும் காட்சியில் ஒருவரின் தலை மட்டும் ஆடுகிறதே! டைரக்ஷன் கோபிநாத்.



மலர்கின்ற பருவத்திலே

● எஸ். ஏ. பி. நாவலின் அழகான தலைப்பை மட்டும் கடன் வாங்கியிருக்கிறார்கள். வடிவுக்கரசி டாக்டர். கண்டிப்பானவர். புதுமுகம் ராஜசங்கர் வார்ட் பாய். இவர் பிளாஷ் பேக்கிற்குள் போய் வனிதாவைக் காதலிக்கிறார். வழக்கமான கிராமக் காதல். கடைசியில் வில்லன் பிரவேசத்தால் நிறைவேறாக் காதல். வனிதா தற்கொலை. படம் முடிந்தது என்று எழுந்தால் பிளாஷ் பேக்தான் முடிகிறது. திரும்பவும் இன்னொரு கதை ஆரம்பம். வார்ட் பாயின் கதையில் உருகிய வடிவுக்கரசி அவரை மணக்க நினைத்துக் கனவில் பாட, வார்ட் பாய் தற்கொலையால் ஒருதலை ராகம்.

ராஜசங்கர் வடிவுக்கரசியின் மகன் போல் இருக்கிறார். வனிதா தேவலாம். அதே வடிவுக்கரசி. கத்தும் காந்திமதி.

வழக்கமாய் கருணி மட்டும் 'ஏ'வாய்ப் பேசுவார். இங்கே ஏறத் தாழ எல்லோரும் இன்னொரு அர்த்தத்தில் பேசுகிறார்கள். வி.கே.ஆரின் பச்சை 'மாட்டு வியாபாரம்' வேறு. இரண்டு அர்த்த வசனக்காரர் அழகாபுரி அழகப்பன்.

கண்ணனின் ஃபோகஸ் சரியில்லாத கேமரா கண்ணை உறுத்துகிறது. எல். வைத்யநாத் டைரக்ஷன் இன்னும் மலர்கின்ற பருவத்தில்தான். கே. வி. மகாதேவன் ஆறுதல். - அவ்வப்போது மட்டும்.





மதனமஞ்சரி

ஆடு. பேசும் குரங்கு. மந்திரக் கிழவிகள், தேன், பாம்பு, குட்டிப் பிசாசு, குலுங்கும் ஜெயமாலினி, மாயா ஜாலங்களை வைத்து இன்னொரு ஜகன்மோகினி. விட்டாலாச்சார்யா ஃபார்முலாவில் வளர்க்கவாகாய் ராஜா ராணிக்கதை.

விநாயக விரத மகிமை சொல்லி பக்தியையும், நீதியையும் தெளிக்கிறார்கள். விநாயகரே எதிரிகளைத் துன்புறுத்த பாம்பு தேள்களை அனுப்புவது மனசில்குத்துகிறது.

ஜெயமாலினி கிழவியாய் நடிக்கக் கஷ்டப்பட்டிருக்கிறார். பலனுண்டு. துல்லியமான கேமரா அடுத்தடுத்த பாடல்கள். நகைச்சுவை-கூத்து ஆடு முட்டியே தீர்க்கிறது. குரங்கு அட்டகாசம் செய்கிறது நடிப்பில்.

வாரா வாரம் வந்து குவியும் மசாலா பத்திரிகைகள் தந்த அலுப்பில் சோர்ந்திருக்கையில் எப்போதாவது அம்புலிமாமா கண்ணில் பட்டால் கொஞ்சம் குழந்தையாய் மாறி ரிலாக்ஸ் செய்து கொள்வது போல் இப்படம் உதவுகிறது. -ஜனனி சாஸ்திரி



கடுகு பதில்கள்!

✻ எஸ். ஆர். விஜயகுமார், சென்னை-28
கே. கிளி பேசுவதைக் கேட்டிருக்கிறீர்களா?
ப: கேட்டிருக்கிறேன். எனக்குத் தெரிந்து ஓர் ஆங்கிலோ — இந்திய மாது காங்கோவிலிருந்து பேசும் கிளியை வாங்கி வந்தார். என்ன அழகாகப் பேசும் தெரியுமா? மிமிக்ரிகூடச் சொல்லிக் கொடுத்திருந்தார். பழம் கொடுக்காவிட்டால் கிட்டக் கூடத் திட்டும். எல்லாம் ஆங்கிலத்தில்தான்.

✻ எஸ். அமிர்தா சௌந்தரராஜன், ஈரோடு
கே. ஏன் கோபுலுவுக்கு இன்னும் பத்மஸ்ரீ பட்டம் கிடைக்கவில்லை?
ப: இதே கேள்வியை நானும் பல வருஷங்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். பதில் சொல்வாரில்லை.

✻ ந. சேதுராமன், கொடுமுடி
கே. முகம் பார்க்கும் கண்ணாடி கண்டு பிடிக்கப்படாமலேயே போயிருந்தால்?
ப: 1) ஷேவிங் ரேஸர் கண்டு பிடிக்கப்பட்டிருக்காது. 2) எத்தனையோ லட்சக் கணக்கான 'வுமன்-ஹவர்ஸ்' கண்ணாடிக்கு முன் செலவழிந்திருக்காது!

✻ மாலினிராஜா, சென்னை-17
கே. என்ன புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறீர்கள்?
ப: சமீபத்தில் படித்த புத்தகம் 'காஸிப்' (Gossip) 1920லிருந்து 1970 வரை பல பத்திரிகைகளில் வந்த சுவையான செய்தி, அரட்டை, கிசுகிசு, வம்பு ஆகியவற்றைத் தொகுத்து இங்கிலாந்தில் வெளியிட்டிருக்கிறார்கள். ராணியின் குடும்பத்திலிருந்து சாதாரண சில்லறை நடிகைவரை இதில் இடம் பெற்றிருக்கிறார்கள். இந்தப் புத்தகத்தின் விலை சுமார் 200 ரூபாய்!

✻ கே. ஆர். மனோகர், தஞ்சாவூர்-1
கே. உங்கள் கதைகளில் உங்கள் மனைவியையும் மைத்துனரையும் தாக்கியே எழுதுகிறீர்களே, அவர்கள் சண்டைக்கு வருவதில்லையா?
ப: அவர்கள் சண்டை போடுபவர்களாக இருப்பதால்தானே, தாக்கி எழுதுகிறேன்.

✻ கே. ராகவன், சிவகாசி
கே. வாடகை சைக்கிளுக்கும் சொந்த சைக்கிளுக்கும் என்ன வித்தியாசம்?
ப: வாடகை சைக்கிளில் நாலைந்து பேர் ஏறலாம். நிறையச் சாமான்களை ஏற்றலாம். கரடு முரடான ரோடுகளில் ஓட்டலாம். சொந்தச் சைக்கிளில் அதெல்லாம் முடியாது.

✻ சின்னக்கண்ணன், சென்னை-40
கே. ஜானி படத்தில் உங்களுக்குப் பிடித்தவர் ஜானியா, வித்யாசாகரா?
ப: நிச்சயமாக ஜானிதான். வித்யாசாகர் ஒரு முடி வெட்டும் கலைஞர். எனக்கு வித்யாசாகர்கள் தேவையில்லை!

✻ ஜி. செல்வராஜன், சென்னை-47
கே. நீங்கள் மனமறிந்து பொய் சொன்னது உண்டா?
ப: இல்லை.... (இந்தப் பதிலே 'உண்டு' என்பதை நிரூபித்துவிடுகிறது!)

✻ வி. கணேசன், திருவானைக்கோயில்
கே. என்னுடைய வாழ்க்கை துரதிர்ஷ்டம் மிகுந்த வாழ்க்கையாக உள்ளதே?
ப: அப்படி நீங்கள் நினைக்கிறீர்கள். நடு வீதியில் ஒரு பத்து ரூபாய் நோட்டைக் கண்டெடுக்கும்போது 'நம் அதிர்ஷ்டம்' என்று சொல்லத் தோன்றுது. கைதவறி ஒரு ரூபாய் தொலைந்து விட்டவுடன், ''ஐயோ நம் துரதிர்ஷ்டம் பணம்-போச்சே'' என்று உடனே நொந்துகொள்ளத் தோன்றும். பஸ்ஸுக்குக் காத்து நிற்கிறீர்கள். ''47 ரூட் பஸ் இப்பத்தான் போச்சு. அடுத்த பஸ் வர ஒரு மணி ஆகும்'' என்றறியும்போது நொந்து கொள்கிறீர்கள். அதுவே நீங்கள் போய் நின்றவுடன் பஸ் வந்து, உங்களுக்கு உட்கார இடமும் கிடைக்கிறது என்றால் அப்போது அதை அதிர்ஷ்டமாகக் கருதுவதில்லை. ஆகவே வாழ்க்கையில் ஏற்படும் துரதிர்ஷ்டங்களை மட்டும் எண்ணிச் சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்காதீர்கள்.

✻ மஞ்சுதேவன், சென்னை-17
கே. உங்களுடைய ஃப்ரெண்ட், ஃபிலாஸபர், கைடு யார்?
ப: புத்தகங்கள்தான். உலக அறிவாளிகளுடன் நேரில் பழக வாய்ப்பு கிடைக்காது. ஆனால் அவர்கள் தங்கள் புத்தகங்கள் மூலமாக உங்களுடன் உரையாடக் காத்திருக்கிறார்கள். ஆயிரக் கணக்கான வருடங்களின் அனுபவங்களும், பாடங்களும் சிந்தனைகளும் புத்தகங்களில் உள்ளன. பயன்படுத்திக்கொள்ளாதவர்கள் பரிதாபத்துக்கு உரியவர்கள்.

பரிசு பெறுபவர் :

மஞ்சுதேவன்
57, மூஸா ஸேட் தெரு, சென்னை-17




குமரனை அணிந்திடும் நேரம்
குதூகலம்
பொங்கிடும்
நேரம்.
குமரன் சில்க்ஸ்
சுபதினங்கள்,
மங்கள நிகழ்ச்சிகள்,
பண்டிகைகள், பார்ட்டிகள்,
குதூகலமான, கோலாகல
இன்ப மயமான எந்த
நாளும், நிகழ்ச்சியும்
முழுமை பெறுவது —
குமரன்.
அசல் பட்டாடைகளை
அணிந்து பவனி வரும்
போதுதான் இது அத்தனை
ஆரணங்குகளும் அறுதி
விட்டுச் சொல்லும் அழகு
இரகசியம். காஞ்சிபுரம்,
ஆரணி, தர்மாவரம்,
பனாரஸ் போன்ற அசல்
பட்டின் அத்தனை
வகைகளும் கண்டு மகிழ —
குமரன் கலைக்கூடம்.
குமரன் சில்க்ஸ்
(ஏர்கண்டிஷன்ட்)
12, நாகேஸ்வரராவ் ரோடு,
பனகல் பார்க் எதிரில், தியாகராயநகர்,
சென்னை-600 017. தொலைபேசி: 443544.

UIPC: KS: 176

அத்தியாயம் 64

துறைமுகச் சிறை

வில்வர் இரவு முழுவதும் உறங்கவில்லை என்ற விஷயத்தை அனந்த் மிக சூசகமாக அறிவித்தாலும் விவாலியரின் கூரிய மூளையில் அது சரேலெனப் பாய்ந்ததால் முகத்தில் உணர்ச்சிகளைக் காட்டிய விவாலியர், அவற்றை விநாடி நேரத்தில் மறைத்துக் கொண்டு தட்டிலிருந்த இறைச்சியை நன்றாக அழுத்தி அழுத்தி, நறுக்கலானான். அந்த அழுத்தத்திலிருந்தே விவாலியரின் உள்ளம் எரிமலையாகி யிருக்கிற தென்பதைப் புரிந்து கொண்ட அனந்தும் பேச்சை நிறுத்திக் கொண்டு தானும் சிற்றுண்டி அருந்துவதில் சிரத்தை காட்டினான்.

விவாலியரும் மேற்கொண்டு ஏதும் பேசவில்லை. சில நிமிஷங்களுக்குள்ளாகவே பழைய சாதாரண நிலையை அடைந்தான். பிறகு அன்று பூராவும் வில்வரைப் பற்றிய எந்த உரையாடலிலும் அவன் இறங்கவில்லை. எல்லா மாலுமிகளுடனும் சிரித்துக் கொண்டும், குலாவியும் பேசி மிதமிஞ்சிய சகஜ பாவத்தைக் காட்டினான். நீண்ட நேரம் கழித்துக் கண் விழித்துத் தள்ளாடித் தள்ளாடி வந்த வில்வரின் தோள் மீது கையைப் போட்டுக் கொண்டு "வில்வர்! மை பிரண்ட்! தௌ எ டேஸ் யூ ஸ்லீப் டு மச்" என்று செல்லமாகக் குற்றம் சாட்டினான்.

"குட் வொய்ன் காஸஸ் குட் ஸ்லீப் (நல்ல மது நல்ல தூக்கத்தைக் கொடுக்கிறது)" என்று வில்வர் சிரித்துக்கொண்டே கூறினான்.

விவாலியர் அவன் முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டு "இன்றிரவு அதைவிட நல்ல மது கொடுக்கிறேன்" என்று கூறிவிட்டுத் தளத்தின் மாலுமிகளைப் பார்வையிடச் சென்றான்.

அன்று விவாலியர் தனது அறையில் பகல் உணவைத் தனியாகவே அருந்தினான். அறைக் கதவைச் சாத்திக் கொண்டு தனது டெலஸ்கோப்பால் காஸண்ட்ராவைக் கவனித்தான். அங்கே டெய்லரும் இங்கலண்டும் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் முகங்களில் மகிழ்ச்சி பெரிதும் தாண்டவமாடிக் கொண்டிருந்ததைக் கவனித்த விவாலியர் புன்முறுவல் கொண்டான். திடீரென எதையோ நினைத்துக் கொண்டு மாலுமியொருவனை அழைத்து அனந்தை அழைத்து வரச் சொன்னான். அனந்த் வந்ததும் அவன் கையில் டெலஸ்கோப்பைக் கொடுத்து காஸண்ட்ராவைக் கவனிக்கும்படி கூறினான்.

காஸண்ட்ராவை நோக்கிய அனந்தின் உடல் திடீரென விறைத்தது. காஸண்ட்ராவின் தளத்தில் இரு மாலுமிகள் ராணியின் தந்தை சங்கர்பந்தைப் பலவந்தமாக இழுத்து வந்தார்கள். டெய்லர் தனது கைத் துப்பாக்கியை அவர் முகத்துக்கு நேராக நீட்டி ஏதோ மிரட்டினான்; அனந்த் மீண்டும் விவாலியரிடம் டெலஸ்கோப்பைக் கொடுத்து "விவாலியர்! இப்பொழுது நீ பார்" என்றான்.

அதைப் பார்த்த விவாலியர் புன்முறுவல் கொண்டான். "அனந்த்! தே நோ வீ ஆர் லுக்கிங் அட் தெம். ஸோ தே எநாக்ட் எ ட்ராமா, தே வில் நாட், டேர் நாட், கில் சங்கர்பந்த் (அனந்த்! நாம் அவர்களைப் பார்ப்பது அவர்களுக்குத் தெரியும். அதனால் இந்த நாடகம் நடத்துகிறார்கள். அவர்கள் சங்கர்பந்தைக் கொல்லத் துணிய மாட்டார்கள்)" என்று திட்டமாகச் சொன்னான்.

அனந்தும் அதை ஆமோதித்தான். மெள்ள மெள்ள மாலையும் நெருங்கியது. தேல் கட்டின் அழகிய துறைமுகம் கண்ணுக்குப் புலப்பட்டது. துறைமுகம் அணுகியதும் காஸண்ட்ராவிலிருந்து ஒரு படகு இறக்கப்பட்டது. அதில் இங்கலண்ட் இறங்கப் படகு வேகமாக வந்தது கடல்ராணியை நோக்கி. விவாலியரும் நூலேணியைத் தொங்கவிட்டான் இங்கலண்ட் ஏறிவர. 'கடல் ராணி'யின் தளத்தை அடைந்த இங்கலண்ட் நேராக விவாலியரிடம் சென்று "டெய்லர் காஸண்ட்ரா தான் துறைமுகத்தில் முதலில்



நுழைய வேண்டும் என்கிறான்" என்ற செய்தியை அவிழ்த்தான்.

விவாலியர் உடலை நன்றாக வளைத்துத் தலையால் வணங்கினான். இங்கலண்டை நோக்கி, "ஐ டோன்ட் அக்ரி (நான் இதற்கு ஒப்பவில்லை)" என்றான் விவாலியர்.

"சங்கர்பந்த் ஆபத்தில் இருக்கிறார்" என்றான் இங்கலண்ட்.


"வில்வரும் ஆபத்தில் இருக்கிறான். யூ டச் ஒன் ஹேர் ஆப் சங்கர்பந்த் ஐ வில் ஹாங் வில்வர் ப்ரம் மை மாஸ்ட், பார் ஆல் டு ஸீ. ஆஸ்க் டெய்லர் நாட் டு ப்ளே வித் விவாலியர் (சங்கர்பந்தின் ஒரு மயிரைத் தொட்டால் கூட வில்வரை எல்லோரும் தரிசிக்கும்படி எனது பாய்மரத்தில் தூக்கி விடுவேன். விவாலியரிடம் விளையாட வேண்டாம் என்று டெய்லரிடம் சொல்)" என்ற விவாலியர் மிகக் குரூரமாக நகைத்தான்.

அதே சமயத்தில் இங்கலண்ட் ஏறிவந்த நூலேணியும் எடுக்கப்பட்டது. ஜலமட்டத்திலிருந்து. "இங்கலண்ட்! யூ கான் ஸ்விம் பாக் டு காஸண்ட்ரா இப் யூ லைக் (வேண்டுமானால் காஸண்ட்ராவுக்கு நீ நீந்திச் செல்லலாம்)" என்றும் கூறினான் நகைப்பினூடே. "அனந்த்!" என்று கூவி அனந்தையும் அழைத்து "தேல்கட் துறைமுகத்தைப் பற்றி உனக்குத்தான் அதிகமாகத் தெரியும்.

இந்தக் கப்பலே அதற்குள் செலுத்து'' என்றும் உத்தர விட்டான்.

சில நேரங்களில் லிவானியர் மிகக் குரூரமாக இருக்க முடியும் என்பது இங்கலண்டுக்கு ஏற்கனவே தெரிந்த விஷயமென்றாலும் குரூரத்துடன் அவனால் நகைச் சுவையையும் கலக்க முடியும் என்பதை அன்றுதான் அறிந்து கொண்டான். அது மட்டுமல்ல. யாருடைய ஆபத்தைக் காட்டியும் லிவானியரை மிரட்டுவது பலனளிக்காத விஷயமென்பதையும் சந்தேகமற உணர்ந்து கொண்டான். சங்கர்பந்தின் ஆபத்தைச் சுட்டிக் காட்டி லிவானியரை மடக்கிவிடலாமென்று டெய்லர் எண்ணியது எத்தனை மடத்தனம் என்பதும் தெள்ளத் தெளிவாகப் புரிந்தது இங்கலண்டுக்கு. சிந்து தூர்க்கத்திலிருந்து தந்திரமாக சங்கர்பந்தை காலண்ட்ரா கப்பலுக்கு வரவழைத்துக் கப்பலே ஓட்டி மால்வான் தளபதியைச் சிறை பிடித்துவிட்ட போதே தான் அதை எதிர்த்ததையும் தன் வார்த்தையை டெய்லர் மதிக்காததையும் எண்ணிப் பார்த்த இங்கலண்ட் ''முட்டாள், சர்வ முட்டாள்'' என்று டெய்லரைச் சபித்தான்.

அவசியமாகப் பேச வேண்டி விருப்பதாகக் கூறி சங்கர்பந்தை அழைத்து வரும்படி தன்னை டெய்லர் அனுப்பியதையும், அதற்கு உடனடியாக ஒப்புக்கொண்டு சங்கர்பந்த் வந்ததையும் எண்ணிப் பார்த்த இங்கலண்ட் ''மால்வான் தளபதி அத்தனை முட்டாளல்லவே. எப்படி என்னை நம்பி, டெய்லரையும் நம்பி வந்தார்?'' என்று தன்னைப் பல முறை கேட்டுக் கொண்டான். அந்தக் கேள்விகளுக்கு காலண்ட்ராவில் விடை கிடைக்கவில்லை. ஆனால் இன்று கடல் ராணியில் கிடைக்கும் என்ற நம்பிக்கை இங்கலண்டுக்கு இருந்தது.



சாண்டில்யன்

இத்தகைய சிந்தனைகளுடன் எதிரே அணுகிக் கொண்டிருந்த தேவ்கட் துறைமுகத்தை நோக்கிய இங்கலண்ட் அதில் முதலில் நுழைய டெய்லர் ஏன் ஆசைப்பட்டான் என்று எண்ணிப் பார்த்தும் விடை கிடைக்கவில்லை. துறைமுகத்தின் உள்ளே அழகாக நீல நிற அலைகள் தாண்டவமாடிக் கொண்டிருந்தாலும் இருபுறமும் லைஹ் யாத்ரி மலைப் பகுதிகள் பயங்கரமாக எழுந்து கொண்டிருந்தன. அந்த மலைகளுக்கிடையில் ஒரு கப்பல் சென்றுவிட்டால், இடையே இருந்த வட்டமான துறைமுகத்தில் தங்கிவிட்டால், துறைமுகத்தின் வாயிலே எந்தக் கப்பலும் அடைத்துவிட முடியும். அதனால் உள்ளே இருக்கும் கப்பல் சிறைப்படும் என்று நினைத்தான் இங்கலண்ட்.

''இந்த விஷயம் திட்டமாகத் தெரிந்தும் டெய்லர் எதற்காக முதலில் காலண்ட்ராவை உள்ளே கொண்டு செல்ல இஷ்டப்பட்டான்?'' என்று இங்கலண்ட் நினைத்துப் பார்த்தான். இருப்பினும் அதைப் பற்றி அவன் யாரையும் கேட்கவில்லை. லிவானியரே அதைப் பற்றிப் பிரஸ்தாபித்தான்: ''அனந்த்! துறைமுகம் மிக' அழகுதான். ஆனால் அதற்குள் 'கடல்ராணி' சென்றால் காலண்ட்ரா துறைமுக வாயிலே அடைத்து விடுமே'' என்று இங்கலண்டின் பக்கத்தில் நின்றிருந்த அனந்தைக் கேட்டான்.

அனந்தின் முகத்தில் உணர்ச்சி ஏதுமில்லை. ''உண்மைதான். கண்டிப்பாக டெய்லர் நமக்கு வழிவிட மாட்டான் வெளியே வர'' என்றான் உணர்ச்சி லவலேசமுமற்ற குரலில்.

''அதுமட்டுமல்ல. நம்மீது காஸண்ட் ராவின் பீரங்கிகளைப் பிரயோகிக்கலாம்'' என்று லிவானியர் சுட்டிக் காட்டினான்.

''பிரயோகிக்கலாம். நம்மை அழித்து விடலாம்.'' என்றான் அனந்த்.

''இருப்பினும் நாம் முதலில் துறை முகத்துக்குள் பிரவேசிக்கப் போகிறோம்?''

''ஆம்.''

''ஏன்?''

''நமது இஷ்டம் அப்படி இருக்கிறது.''

''இது டெய்லருக்கு லாபம்.''

''இங்கலண்டுக்குந்தான்.''

இப்படி லிவானியரும் அனந்தும் வேண்டு மென்றே தன் இரு பக்கங்களிலும் நின்று பேசிக் கொண்டிருந்ததைக் கேட்ட இங்க் லண்டின் பொறுமையும் எல்லை கடக்கவே ''காப்டன் லிவானியர், காம்ரேட் அனந்த்! இந்தப் பேச்சுப் போதும்'' என்றாள் கடுமை யுடன்.

''அனந்த்! இங்கலண்ட் கோபப்படுகிறார்'' என்று சுட்டிக் காட்டினான் லிவானியர்.

''நியாயந்தானே! அவர் வந்த தூது செல்லுபடியாகவில்லை'' என்று ஒத்துப் பாடி னான் அனந்த்.

பிறகு அந்த இடத்தை விட்டு அகன்ற அனந்த் மாலுமிகளை நோக்கி விடுவிடு என்று உத்தரவுகளைப் பிறப்பிக்கலானான். ''பாய் மரங்களில் ஒன்று விரிந்திருந்தால் போதும். மற்றவற்றை அவிழ்த்து விடுங்கள். யாரங்கே? சுக்கானைப் பிடிப்பவனிடம் சுக்கானைத் திருப்பச் சொல். துறைமுகத்துக்குள் கப்பலைச் செலுத்த. துடுப்புகள் மெதுவாகத் துழாவட் டும். கப்பலின் முகப்பு துறைமுக வாயிலை நோக்கியதும் அலைகளின் வேகத்திலேயே கப்பல் துறைமுகத்துக்குள் நுழையட்டும். பின்னால் வரும் நமது ஐந்து துணைக் கப்பல் களை ஒதுங்கிச் செல்லச் சொல்லி கொடியால் சைகை செய்'' என்று உத்தரவுகளைப் பிறப் பித்த அனந்த் கப்பலின் முகப்பில் நின்று கொண்டு துறைமுகத்தை அணைத்திருந்த இரு மலைப் பகுதிகளில் தெற்குப் பகுதியை நோக்கிக் கையை ஆட்டினான். தெற்குப் பகுதியின் உச்சியிலிருந்த கோட்டையி லிருந்து பதிலுக்கு ஆடியது ஒரு மகா ராஷ்டிரக் கொடி.

மாலை நேர மஞ்சள் வெயில் தேவ்கட் துறைமுகத்துக்குப் பெரும் அழகைக் கொடுத் திருந்தது. மலை உச்சிகள் இரண்டும் பொன் மயமாகக் காட்சியளித்தன. மலைச் சிகரத்தி லிருந்த சிறு கோட்டையைச் சுற்றித் தெரிந்த மந்தாரைப் பூக்கள் மாலை வெயிலில் அதிக பொன்னைப் பூசிக் கொண்டு காற்றில் ஆடி உள்ளே நுழைந்த கடல் ராணியை வர வேற்றன.

கடலரசன் தன் அலைக் கரங்களால் கடல் ராணியை ஏந்தி ஏந்தித் தவழச் செய்து தேவ்கட்டுக்குள் செலுத்திக் கொண்டிருந் தான். இந்த அற்புதத்தை ராணியும் சாருவும் ஒருவரை யொருவர் அணைத்த வண்ணம் பார்த்துக் கொண்டிருந்தனர். அனந்த் கப்பலின் முகப்பில் நின்றவண்ணம் கப்பலைச் செலுத்தக் கைகளை ஆட்டியும் இரைந்து குரல் கொடுத்தும் உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தான். லிவானியர் முகத்தில் சந்துஷ்டியையும் சிரிப்பையும் கலந்து படர விட்டுக் கொண்டு நடுப் பாய் மரத் தூணில் சாய்ந்து கொண்டிருந்தான்.

இங்கலண்டும் வில்லரும் தளத்தில் ஒரு கோடியில் நின்று பின்னால் எட்ட பிரும் மாண்டமாக வந்து கொண்டிருந்த காஸண்ட் ராவைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இரு பெண்களும் இரு புறத்திலும் எழுந்த மலைப் பகுதிகளின் லாவண்யத்திலும் துறை முகக்கவர்ச்சியிலும் மெய் மறந்திருந்தார்கள்.

டெய்லர் திட்டப்படியே சகலமும் நடந் தது. 'கடல்ராணி' துறைமுகத்துக்குள் நுழைந்து நங்கூரம் பாய்ச்சியது. காஸண்ட் ராவும் துறைமுக வாயிலை அடைத்து நின்றுவிட்டது. ''கடல்ராணி இனி நமது கையில் இருக்கிறது. இனி அது தப்ப முடி யாது'' என்று காஸ்ஸண்ட்ராவில் டெய்லர் குதூகலித்தான். துறைமுகச் சிறையில் 'கடல்ராணி' ஆனந்தமாக ஆடி நின்றது.

(தொடரும்)

கல்கி நவம்பர் 23 வாசகர் சிறப்பிதழ்

இந்த இதழில் நீங்கள் எழுத்தாளர்களுக்கு கடுமையான பரீட்சை வைக்க வாய்ப்புண்டு! நாலு பொருள்களையும் இரு பெண்கள் ஓர் ஆண் பெயர்களையும் குறிப்பிட்டுத் தபால் கார்டு எழுதுங்கள். (உதாரணம்: காதல் கடிதம்; உயில்; கத்தி; கட்டில் — சாந்தி, ஷீலா, உமாநாத்).

வரும் கடிதங்களிலிருந்து நான்கினை மட் டும் அதிர்ஷ்டக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்து அந்த நான்கினையும் நாலு எழுத்தாளர்களிடம் தந்து அவற்றில் குறிப் பிட்டுள்ள பொருள்கள், பெயர்களை வைத்துக் கதை எழுதுமாறு கேட்டு வாங்கிப் பிரசுரிக் கிறோம். அதிர்ஷ்டசாலிகளான நான்கு வாசகர்களுக்கும் தலா ரூ. 25 பரிசு உண்டு.

உதாரணத்தில் தந்துள்ளது போலல்லாது எழுத்தாளர்களுக்குச் சவாலாக அமையும் விதத்தில் பொருள்களைக் குறிப்பிடுங்கள் பார்க்கலாம்!

முடிவு தேதி: அக்டோபர் 27.

''எழுத்தாளருக்கு சவால்'' என்று கடி தத்தின் தலைப்பில் எழுதவும்.

குறை தெரியா நிறை

ரா. கணபதி



[ரமணரின் நூற்றாண்டு கொண்டாடப்பட்டு வருகிறது.]

அநுபவக் கொடுமுடி என்று ஒன்று உண்டெனில் அதிலேயே அனவரதமும் நிலைத்திருந்த மஹா மஹா மஹான் ரமணர். அனைத்துமான அந்த ஓர் ஆத்மனேயாகத் தம்மை எக்காலும் அநுபவித்துக் கொண்டிருந்தவர் அன்றோ?

உலகுக்கும் உலகியலுக்கும் அதீதமான அந்த உன்னதர் லோகரீதியான தர்ம நெறிகளை, அவற்றில் தலையாம் நெறியான அன்பை, பரம எளிமையை அநுஷ்டித்துக் காட்டிய அரும்பாங்கைப் பற்றி எவ்வளவோ சொல்லலாம். அன்பையும் எளிமையையும் அவர் நகைச்சுவையில் குழைத்துத் தந்தது உண்டு!

எவ்வளவோ சொல்லலாமாயினும், ஒன்று மாத்திரமே பார்ப்போம்.

நம் கண்டத்திலுமுள்ள பெரிய பெரிய ஸாதகர்களும் மௌன மஹா குரு. மௌனமாயிருந்து கொண்டே பரம காருண்யத்தால் அந்தப் பூர்ணருடைய மௌனத்தைத் தங்களுக்கும் அருளும் ஆசார்ய ரத்னம் என்று இவரிடம் வந்து கிடந்தனர். ஆயினும் தப்பித் தவறிக் கூடத் தமக்கு குரு ஸ்தானம், ஆசார்ய பீடம், 'ஸ்வாமித்வம்' இருப்பதாக அவர் நினைத்துக் கொண்டதில்லை. ஆண்டாண்டுகளாகத் தமக்கு அணுக்கத் தொண்டு புரிந்தவர்களிடமும் கூட, 'இன்னது செய். இன்னது சொல்லாதே! இப்படி இரு இப்படி இராதே!' என்று ஒரு வார்த்தை சொல்லாத அதிசய புருஷர்! அவர் வாழ்ந்து காட்டும் முன்னுதாரணத்தாலேயே தான் பிறர் தாமாகப் பாடம் பெற்றனர்.

குறை காண வேண்டியது குருவின் கடமை. அப்போதுதானே திருத்த முடியும்? நமது குருபரரோ தமக்குச் சீடர் உண்டு என்றே எண்ணாதவர்! அதனால் எவரது குறையும் கண்டதில்லை.

பலவிதமான பிழைகள் மலிந்த நாம் பிறரது குற்றம் குறைகளை ஓயாது விமர்சிக்கிறோம். ஆச்ரம வாஸிகளும் இப்படிச் செய்வார்கள். அதைக் கேட்டுக் கொண்டு ரமண பகவான் அமர்ந்திருப்பாராயினும், அவரது திரு நாவில் மட்டும் ஒரு பொழுதும் ஒருவரைப் பற்றியும் குறைவாக வார்த்தை வராது. அது மாத்திரமில்லை. ஏனையோர் யாரைக் குற்றம் கூறுகிறார்களோ அவரிடமே உள்ள நல்ல குணம் எதையேனும் ச்லாகித்துச் சொல்வார்.

திருவண்ணாமலையிலேயே கஜப் போக்கிரி என்று பேர் கொண்ட ஒருவர் அன்று காலமாகிவிட்டார். 'இந்த ஸெண்ட் பெர்ஸெண்ட் அயோக்கியரைப் பற்றி பகவான் நல்ல அம்சமாக எதுவும் காட்ட முடியாதே! இதற்காக இன்று நாம் வேண்டுமென்று பகவான் ஸந்நிதியில் அந்த ஆஸாமியைப் பற்றி நமக்குள் குற்றப்பத்திரிகை படிப்போம். அவர் எப்படி நம் வாயை மூடுகிறார் பார்ப்போம்' என்று அன்பின் ஸ்வாதீனத்தில் வேடிக்கையாகத் தீர்மானித்தார்கள் அடியார்கள்.

இறந்து போன நடத்தை கெட்டவரின் 'லீலா விபூதி'களை அவ்வாறே அலசினார்கள்.

மௌனகுரு இவரை ச்லாகிக்கும் விஷயத்திலும் மௌனியாகத் தான் இருந்தாக வேண்டும் என்று உறுதியுடன் அவரது முகத்தை நோக்கினர்.


அதரம் அருளோடு திறந்தது. ஸதாவும் ப்ரகாசிக்கும் நேத்திரத்தில் ஒரு புத்தொளி தெரிந்தது — எல்லோரும் இருளைக் கண்ட இடத்தில் தான் மட்டும் கண்ட ஒளியினைப் பாராட்டும் பான்மையில்தான்!

சொன்னார்: ''நித்யம் நானும் கவனிச்சிருக்கேன். அவன் இந்த எதிர்க் குளத்திலேதான் துணி தோய்ப்பான். எத்தனை வெள்ளை வெளுக்கத் தோய்ப்பான்! அவன் அழுக்கு போட்டுண்டு நான் பார்த்ததேயில்லே.''

அழுக்காறுகள் பலவற்றைத் தம்மிடம் கொண்ட பிறர், அழுக்குகளையே கண்ட இடத்தில் ரமணர் என்னும் பரம நிர்மலம் ஒரு தூய்மையையே கண்டு கொண்டது.

''பிறர் குறையைக் காண்பதுபகவானுக்கு உகப்பானதல்ல என்று தெரியாததால் நான் பலரைக் குற்றம் சொல்லி யிருக்கிறேன். நான் செய்வது தப்பு என்று பகவான் எடுத்துச் சொல்லியிருக்கக் கூடாதா?'' என்றார் ஒருவர்.

உடனே பரம ஸத்தியத்தையே தம்முள் ளுறும் நகைச் சுவைக் கனியில் இனிதாக்கி பகவான் மலர்ந்தார் மலர்ச் சிரிப்போடு: ''அப்படி நான் சொல்லியிருந்தால் நான் உன்னைக் குற்றம் கண்டதாக ஆகியிருக்காதா?''



● கக ல்ல் கிகி யேயேயே!
தத மேமே ன்ன் ப்ப் ரர ம்ம் ஹாாாங் காாாாங் பப டட விவி மம ர்ர்ர் சச னை ம்ம்ம் வெகு ஜோாாாாாாாார்ர்ர்ர்ர்.
தோவாளைபுதூர் எஸ்.பி. ஆறுமுகம்

● மற்ற வாரப் பத்திரிகைகள் எழுத மறந்து போயிருக்கும்போது, நீங்கள் ஒருத்தராவது 'மினி மீஸா'வை ஆட்சேபிக்க முன் வந்திருப்பது பெரிதும் ஆறுதலாக இருக்கிறது.
கன்னியாகுமரி ரஞ்சனி ராஜாராமன்

● உங்கள் பத்திரிகையை விடாமல் தொடர்ந்து வாசிக்கிறேன். சுவாரஸ்யமான பல விஷயங்கள், தகவல்கள் கடச் கடத் தருகிறீர்கள். ஆனால் இந்திராவைத் தாக்கும் சில தலையங்களை ஜீரணிக்க முடியவில்லை.
அண்ணாநகர் கே. ஏ. சுந்தரேசன்

● 'அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பது போல உள்ளது உங்கள் தலையங்கம். இந்திரா காந்தி ஒரு சர்வாதிகாரிதான். ஆனால் யாருக்கு? உங்களைப் போல, செய்தியைத் திரித்து பிரசாரம் செய்யும் கோயபெல்சுக்கும், தனி நபர் உரிமை என்பதன் பெயரில் சமுதாயத்தைச் சுரண்டிப் பிழைக்கும் கடத்தல்காரர்களுக்கும், வியாபாரிகளுக்கும், பண முதலைகளுக்கும், அராஜகவாதிகளுக்கும், அற்பர்களுக்கும் அவர் நிச்சயமாகச் சர்வாதிகாரிதான்.
மேலப்பாலையூர் கமாலி

● அம்மையார் அவர்கள் ''இந்தச் சட்டத்தை அடக்குமுறைக்குப் பயன்படுத்த மாட்டோம்'' என்று உறுதி கூறியிருப்பதை பத்திரிகைச் செய்திகளில் காண்கிறோம். இது 'பசு'தானா; இல்லை பசுத் தோல் போர்த்திய 'புலி'தானா என்பதைக் காலம்தான் நமக்கு உணர்த்தும்.
வீரபாண்டி வதிலை அன்புச்செல்வன்

● வெங்காயத்தைச் சொல்லி ஓர் ஆட்சியை இறக்கினார்கள். இன்று சீனியும் கிரெசினும் விண்வெளியில் பறக்கிறது. அஸ்ஸாம் தொடர் நாவலாகி விட்டது. வகுப்புக் கலவரங்கள் காட்டுத் தீயாகிறது. ஆட்சியைத் துணிவுடன் விமர்சிக்கத் துணிந்துள்ள மாவீரன் ''கல்கி''யே! உனது வீர நடை தொடரட்டும். புல்லர்கள் முகமூடி பொசுங்கட்டும்.
சிதம்பரம் சிவ. ராஜகுமார்

● இருக்கிற சட்டங்களிடத்திலும் அவற்றை அமுல் நடத்துபவர்களிடமும் பயம் அற்றுப் போனதால்தானே புதுச் சட்டமே தேவைப் படுகிறது?
பொன்மலை ஆர். சங்கர்

● ஓ பிரியா பாலு! என் டோப்பா துணுக்கின் தீவிர ரசிகரே! தாங்கள் 5.10.80 கல்கி இதழில் 20ம் பக்கத்தில் எழுதியிருந்த அருமையான துணுக்கினை அவசரக் குடுக்கையைப் போல் 27.12.73 குமுதம் இதழில் எழுதிவிட்ட பாவியாகிய என்னை அருள் கூர்ந்து மன்னிப்பீர்களா?
போடி முத்து. தங்க. ஐயப்பன்

● பெங்களூரில் நடந்த ''பத்திரிகை அலுவலக முற்றுகை'' பற்றி நீங்கள் வெளியிட்டு உள்ள கார்ட்டூனுக்குப் பாராட்டுக்கள். அந்தப் பேனாவின் முனை பூட்ஸ் காலைத் துளைக்கும் என்பதை மறந்துவிட்டார்கள் போல இருக்கிறது.
கோபி இளஞ்சேரன்

● திருக்கழுக்குன்றத்தில் மட்டுமே சிவன் கோவில் மலைமீது இருக்கிறது என்கிற செய்தி தவறு. குளித்தலை அருகே ஐயர் மலையில் ரத்னகிரீஸ்வரர், துறையூர் அருகே அரப்பளீஸ்வரர் மலையில் உள்ள அரப்பளீச்வரர், திருச்சியில் உள்ள மலைக்கோட்டையில் தாயுமானவர், திருவெறும்பூரில் உள்ள திருஎறும்பீசுவரர் போன்ற சிவன் கோவில்கள் மலை மீதுதான் அமைந்திருக்கின்றன. வேறுபல கோவில்களும் இருக்க வாய்ப்புண்டு.
திருச்சி-8 தி. ரா. சிவக்குமாரன்

● ஹெல்மெட் அணிந்தால் அழகு குறைந்து போகிறது என்கிறார் திருமதி மீனா. ஆனால் அட்டையைப் பார்க்கும்போது அவர் சொல்லும் பாயிண்ட் அடிபட்டுப் போய் விடுகிறதே!
மேலமிஞ்சிப்பட்டு த. யோக நாயகன்

● சிவாஜியின் நலம் விரும்பும் என்போன்றவர்களின் கூற்றுக்குச் செவி சாய்க்காத சிவாஜி அவர்கள், அவர் போற்றும் மறைந்த தலைவர் அறிஞர் அறிஞர் அண்ணா அவர்களின் வேண்டுகோளுக்காவது மதிப்புக் கொடுப்பார் என்று நம்புகிறேன்.

சிவாஜியின் 125வது பட விழாவில் அறிஞர் அண்ணா கூறியது: ''சிவாஜி கணேசன் இன்னும் பலபடங்களில் நடிக்க வேண்டுமென்று இங்கு பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். அவருக்கு அறுபது வயது அல்லது எழுபது வயதானால் கூட, நடிக்கும் திறமை நிறைந்து இருக்கிறது என்ற போதும் அவருக்கு ஒன்று சொல்வேன். அந்த வயதிலும் அவர் பூந்தோட்டத்தில் கட்டிப் பிடித்துக் காதல் காட்சிகளில் நடிக்காமல் நல்ல குடும்பத் தலைவன் வேடங்களில் வட இந்திய நடிகர் 'அசோக்குமார்', ஏற்று நடிப்பது போல் வயதுக்கு ஏற்ற பாத்திரத்தில் நடிக்க வேண்டும்.

சிவாஜி இதைக் கவனித்து 'எனக்கு இன்னும் அறுபது வயது ஆகவில்லையே' என்று ஜோக்கடிக்காமல் (டாக்டர்களின் ஆலோசனையையும் மீறி அரை மணி நேரத்துக்கும் மேலாகப் பேசிய) அண்ணாவின் கடைசி மேடைப் பேச்சுக்கு மதிப்பளிப்பார் என்று எதிர்பார்க்கிறோம்.
ராஜபாளையம் எஸ். விஜயன்

அத்தியாயம் 18

அடிவா னத்தில் தொலைதூ ரத்தில்
அவன்குரல் கேட்கிறது
முடிவைக் காண முடியாப் புதிர்கள்
முடிந்து மடிகிறது!
—மு. மேத்தா — ''கண்ணீர்ப் பூக்கள்''

''ஆமாம்! எப்படியோ நடந்து போச்சு! இப்படிப் பேச வெட்கமா இல்லே? இதுவும் ஒரு சாக்கா? உன்னை எப்படி யெல்லாம் வளர்த்தேன்! எத்தனை ஒழுங்கா, அருமையா வளர்த்தேன்! என்ன பிரயோஜனம்? எல்லாத்தையும் மறந்து, ஒழுக்கத்தைத் தூக்கிக் குப்பையிலே எறிஞ்சிட்டியே!'' என்று இரைந்தாள் கல்யாணி.

''அம்மா! போதும் நிறுத்துங்க!'' உஷா கொதித்து எழுந்தாள். ''இந்த மாதிரி வார்த்தைகளை யெல்லாம் பேசாதீங்க! ஓர் ஆணும், பெண்ணும் ஒருத்தரை ஒருத்தர் காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்க விரும்பறதிலே என்ன குற்றம் கண்டுட்டீங்க? அவர் என்னைக் கெடுத்துட்டு நிர்க்கதியாத் தவிக்க விடல்லையே? என்னை ஊரறிய உலகம் அறியக் கல்யாணம் செய்துக்கப் போறார். என் வயத்திலே வளரும் குழந்தையைத் தன்னுடைய துன்னு பகிரங்கமா, பெருமையா ஏத்துக்கப் போறார். அப்புறம் என்னம்மா?''

''இதுக்காகத்தான் காலேஜ் படிப்புக்கு மெட்ராஸுக்கு அனுப்பி வைக்கணும்னு அடம் பிடிச்சியா?'' கோபமாகக் கேட்டாள் கல்யாணி.

''ஏம்மா இப்படிக் குத்தலாப் பேசறீங்க? இப்படி நடக்கும்னு நான் மட்டும் எதிர்பார்த்தேனா? அவரைத் தற்செயலா சந்திச்சேன்... அவ்வளவுதான்...''

''யார் அந்த 'அவர்'?''

''படிச்சவர், பணக்காரர், அழகானவர். எனக்கு வரப்போகும் கணவருக்கு என்னென்ன தகுதிகள் இருக்கணும்னு நீங்க விரும்பி இருப்பீங்களோ, அத்தனையும் அவரிடம் இருக்கு. ஆனா....''

''ஆனா என்ன?''

''என்னை விட வயசிலே ரொம்ப மூத்தவர். அவருக்கு நாற்பதுக்கு மேலே ஆச்சு...''


''உஷா!'' கல்யாணியால் இதை ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை. ஆவேசமாக அவள் ஏதோ சொல்ல முற்பட்டபோது உஷா குறுக்கிட்டாள்.

''அம்மா! நீங்க என்ன சொல்லப் போறீங்கன்னு எனக்கு நல்லாத் தெரியும். என்ன சொல்லி இப்ப என்ன பிரயோசனம்? அவர் குழந்தையை என் வயித்திலே சுமந்துக்கிட்டு இருக்கேன். அப்படியிருக்க, அவர் வயசைப் பத்தி இப்ப விவாதிக்கிறதிலே ஏதாவது அர்த்தம் இருக்கா? நீங்களே யோசிச்சுச் சொல்லுங்க.''

தர்க்க சாஸ்திர ரீதியில் ' உஷா கூறிய வார்த்தைகளின் நியாயத்தைக் கல்யாணியால் மறுக்க முடியவில்லை. மனித சக்திக்கு அப்பாற்பட்ட அளவில் பெரும் பிரயத்தனப்பட்டு, தனக்கு ஏற்பட்ட ஆத்திரத்தையும் கோபத்தையும் அடக்கிக் கொண்டாள். ஆனது ஆகிவிட்டது. இனிமேல் ஆவேசமாகக் கூச்சல் போடுவதாலும், உஷாவைத் திட்டுவதாலும் என்ன பயன்?

''யார் இந்த மனுஷன்? அவர் பேரென்ன? எங்கே இருக்கார்? என்ன செய்யறார்?'' என்று கேட்டாள் கல்யாணி.

உஷா தனது இரு கரங்களையும் இணைத்து இறுக்கிக் கொண்டாள். இது மற்றுமொரு சங்கடம் நிறைந்த பிரச்னை. இதனை வெகு ஜாக்கிரதையாக, நாசுக்காகக் கையாள வேண்டும். ''அம்மா, அவருடைய தொழி



லைப் பத்திச் சொன்னு, நிச்சயமா அது உங்களுக்குப் பிடிக்காது. எனக்குத் தெரியும். ஆனாலும் ப்ளீஸ், நான் சொல்லப் போறதை கேட்டு ஆத்திரப்படாதீங்க. மறுபடியும் கோபமாச் சத்தம் போடாதீங்க....''

''ம்...ம்....சரி, சரி...!'' நறுக்கென்று கல்யாணி குறுக்கிட்டாள். ''சுத்தி வளைச்சது போதும். விஷயத்துக்கு வா. நான் கேட்டதுக்குப் பதில் சொல்லு.''

''அம்மா.... அவர் பெயர்... ராஜீவ் குமார்.... வந்து... வந்து... அவர்தான்.. பிரபல சினிமா நடிகர் ராஜீவ் குமார்!'' தயங்கித் தயங்கி உஷா இந்த வார்த்தைகளை வெளிக் கொணர்ந்த நேரம், அவளால் கல்யாணியின் பார்வையைச் சந்திக்க முடியவில்லை. தன் பாதங்களை நோக்கியபடி அவள் உடுத்தியிருந்த • நைலக்ஸ் சேலையின் முன்றானையை விரல்களுக்கு மத்தியில் மடித்து, கசக்கி, நசுக்கி, பிழிந்து எடுத்து விட்டாள்.

நிசப்தம் நீடித்துக் கொண்டே போயிற்று. உள் தயக்கத்துடன் உஷா தனது கண்களை உயர்த்திக் கல்யாணியைப் பார்த்தாள்.

''அம்மா, என்னம்மா ஆச்சு!''

உஷா திக்குமுக்காடிப் போனாள். கல்யாணியின் முகமெல்லாம் வெளுத்துப்போய் இருந்தது. அவள் முகத்தில் எமனே காட்சி தந்தான். அவள் கண்களில் தெரிந்த பாவனை உஷாவுக்குத் திகிலூட்டுவதாக இருந்தது. பயந்து நடுங்கிப் போனாள். தனது ஆயுட் காலத்தில் கல்யாணியின் இந்தத் தோற்றத்தை உஷா கண்டிருக்கவில்லை.

தற்காலிகமாகக் கல்யாணி பேசும் சக்தியை இழந்து விட்டிருந்தாள். திடீரென அவள் கால்கள் தடுமாறின. மடிந்துபோய் விட்டன. ஓடிச் சென்று உஷா அவளைத் தாங்கிப் பிடித்துக் கொள்ளாமல் இருந்திருந்தால் நிச்சயமாகக் கல்யாணி அப்படியே நின்ற இடத்திலேயே வீழ்த்தப்பட்ட மரம் போல்மடிந்து கீழே விழுந்திருப்பாள்.

உஷா பதறிப்போய் விட்டாள். ''அம்மா! அம்மா! என்னம்மா என்ன ஆச்சு உங்களுக்கு? உடம்பு சரியில்லையா?''

கைத் தாங்கலாகக் கல்யாணியைக் கட்டில்வரை மெதுவாக நடத்திச் சென்று, உஷா தனது தாயாரை அதன்மீது படுக்கச் செய்தாள். அணியால் செய்த உயிரற்ற பொம்மையைப் போல் கல்யாணி தெம்பில்லாமல் தலையணை மீது சாய்ந்தாள். அவள் கண்கள் மூடியிருந்தன. மயக்கம் அடைந்து, சுய நினைவை இழந்திருந்த மாதிரி தெரிந்தது.

உஷா பாத்ரூமுக்கு ஓடிச் சென்று அவசரமாக வாஷ்பேஸின் குழாயிலிருந்து ஒரு தம்ளரில் தண்ணீர் பிடித்து வந்து, கல்யாணியின் முகத்தில் தண்ணீரைத் தெளித்தாள்.

நிதானமாகக் கல்யாணி கண்களைத் திறந்தாள். பதற்றத்துடன் உஷா அவளையே உற்று நோக்குவதைப் பார்த்தாள்.

''அம்மா! என்னம்மா உடம்புக்கு? பழனி மாமாவை அனுப்பி உடனே டாக்டரை அழைச்சுக்கிட்டு வரச் சொல்லட்டுமா?'' என்று அக்கறையுடன் விசாரித்தாள் உஷா.

''எது வந்தாலும் எத்தகைய சோதனை உண்டானாலும் எதற்கும் மனம் தளராத அம்மாவா இப்படிக் கதி கலங்கி உணர்ச்சி வசப்பட்டு விழுந்து கிடக்கிறாள்? அதிலும் எதற்கு? நான் ஒரு சினிமா நடிகரை மணக்கப்போகிறேன் என்று அறிந்ததால் ஏற்பட்ட அதிர்ச்சியா இது? நோ, நோ! அப்படி இருக்க முடியாது. நான் சொன்ன செய்திக்கு இது அளவுக்கு மீறிய ரியாக்‌ஷனாக இருக்கிறதே! அதனால் இருக்க முடியாது. பின்பு அம்மா ஏன் இப்படி ஆகிவிட்டார்? மயக்கம் போட்டு விழுந்ததற்கும், பிரேதக் களைப்பட்ட வெளுத்துப்போன இந்த முகத்துக்கும் என்ன காரணம்? ஒருவேளை அம்மா ஏதாவது கடுமையான நோய்வாய்ப்பட்டு இருக்கிறாரா? இதை என்னிடமிருந்து மறைத்து வைத்து விட்டாளா? என் மனத்தைச் சஞ்சலப்படுத்தக் கூடாது என்பதற்காக அம்மாவே வேலைக்காரர்களிடம் அதைப் பற்றி என்னிடம் எதுவும் சொல்லக் கூடாது என்று கட்டளை இட்டிருப்பாளா? இருதய நோயாக இருக்குமோ?


'இப்போதே பழனி மாமாவைக் காரில் சென்று உடனே டாக்டரை அழைத்து வரச் சொல்கிறேன்!' என்று மனத்துக்குள் நிச்சயித்துக் கொண்டு உஷா அறையை விட்டு வெளியேறத் திரும்பினாள்.

எங்கிருந்துதான் கல்யாணிக்கு அத்தனை சக்தி வந்ததோ! போகத் திரும்பிய உஷாவைச் சடாரென்று கையைப்பற்றிக் கொண்டு தடுத்து நிறுத்தினாள்.

''வே...வே... வேண்டாம். டா... டாக்....டாக்டரைக் ...கூ... கூப்பிடாதே!'' கல்யாணியின் குரல் மிகவும் தாழ்ந்து, கரகரத்துப் போயிருந்தது. எங்கோ இணற்றடியிலிருந்து மெல்லியதாக வெளி வருவது போல் தோன்றியது.

''ஒண்ணுமில்லை... சில நிமிஷங்களிலே சரியாயிடும்... குடிக்க... கொஞ்சம் தண்ணி.''

சமையற்கட்டுக்கு விரைந்து உஷா ஒரு தம்ளரில் குடிநீரைக் கொண்டு வந்தாள். கல்



''தப்பும் தவறுமா இங்கிலீஷ் பேசிக்கிட்டிருப்பானே டெஸ்பாட்ச் கிளார்க் ராமமூர்த்தி, அவன் புதுசா வந்த லேடி ஸ்டெனோ மேரிகிட்டே நல்லா வாங்கிக் கட்டிக்கிட்டான்...!''

''ஏன்?''

''அவகிட்டே போய் இவன் தன்னை அறிமுகப் படுத்திட்டு, 'ஆர் யூ மேரிட்'ங்கிறதுக்குப் பதிலா 'வில் யு மேரி'ன்னுட்டான்....!''

- கிணத்துக்கடவு ரவி

யாணியின் அருகில் அமர்ந்து, அவள் தோள்களுக்குப் பின் ஆதரவாகக் கை கொடுத்து, மற்றொரு கையால் தம்ளரைக் கல்யாணியின் உதடுகளுக்கு அருகே ஏந்தினாள் உஷா.

சிரமப்பட்டுத் தலையைச் சற்றே உயர்த்திக் கல்யாணி ஒரு வாய் தண்ணீரை அருந்தினாள். போதும் என்றாற்போல் தன் கையால் தம்ளரைத் தள்ளிவிட்டு மீண்டும் பலவீனமாய்ப் பின்னுக்குச் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள்.

"இப்போ எப்படி அம்மா இருக்கு? கொஞ்சம் தேவலையா?"

கண்களை மூடியவாறே ஆமாம் என்பது போல் கல்யாணி லேசாகத் தலையை அசைத்தாள். கண்களைத் திறக்காமலேயே, திடீரென்று "அவர் பெயர் என்னன்னு சொன்னே? ராஜீவ் குமாரா?" என்று கல்யாணி கேட்டாள்.

"ஆமாம்மா."

"அவருடைய போட்டோ ஏதாவது உன்கிட்டே இருக்கா?"

"இருக்கும்மா."

"அதைக் காட்டு பார்க்கலாம்."

உஷா தனது அலமாரியைத் திறந்து, புடவைகள் பலவற்றின் அடியில் பத்திரமாக அவள் ஒளித்து வைத்திருந்த கவர் ஒன்றினை வெளியே இழுத்தாள். அதிலிருந்து ராஜீவ் அவளுக்கு அளித்திருந்த புகைப்படத்தை வெளியே எடுத்தாள். புகைப்படத்தின் அடியிலிருந்தவெற்றிடத்தில் "To my only love-From your own Rajiv" என்று அவன் கைப்பட எழுதியிருந்தான்.

ராஜீவின் புகைப்படத்தை உஷா கல்யாணியிடம் கொடுத்தாள்.

வெகுநேரம் கல்யாணி அந்தப் புகைப்படத்தை மௌனமாக உற்றுப் பார்த்தாள். பின்பு அதை உஷாவிடமே திருப்பிக் கொடுத்தாள். தன்னிடம் போட்டோவை நீட்டிய பொழுது கல்யாணியின் கை நடுங்குவதை உஷா கவனித்தாள்.

இதுவும் விந்தையான விஷயமே! எதற்கும் அசைந்து கொடுக்காத இரும்பு நெஞ்சம் படைத்த கல்யாணியின் கரம் நடுங்குவதா, உதறுவதா!

திடீரென்று கல்யாணி தனது இரு கரங்களாலும் தன் முகத்தை மூடிக்கொண்டாள். வெகு நேரம் அப்படியே இருந்தாள். அறையில் நிலவிய நிசப்தம், அணு குண்டு வெடிக்கப்போகுமுன் நிலவும் பயங்கர ஓசையை எதிர்நோக்கும் மனோநிலையை உண்டாக்குவதாக இருந்தது.

நீண்ட இடைவெளிக்குப் பின் கல்யாணி ஒரு மிக முக்கியமான தீர்மானத்துக்கு வந்த தோரணையில், முகத்திலிருந்து கைகளை அகற்றி, நிமிர்ந்து உட்கார்ந்தாள். வேண்டுமென்றே தனது பார்வையை உஷா மீது பட விடாமல், அவள் விழிகளைச் சந்திக்க முடியாமல், வேறு எங்கோ பார்த்தபடி, உயிரே இல்லாத, தெம்பே இல்லாத வறண்டு போன குரலில் கல்யாணி பேசினாள்.

"நீ கர்ப்பமா இருக்கிறது வேறு யாருக்காவது தெரியுமா?"

"தெரியாது."



கல்கத்தாவில் நடந்த நிகழ்ச்சி இது. அங்கு ஒருவர் ஆபீஸ் போவ தற்காகத் தினமும் காலையில் குறிப்பிட்ட பஸ் ஸ்டாப்பில் பஸ் ஏறு வார். அங்கிருக்கும் ஒரு பிச்சைக்காரனுக்குக் காசு போடுவார். ஒரு நாள் காலையில் அவர் தன் பர்ஸை எடுத்துக்கொண்டு வர மறந்து விட்டார் விட்டுக்குப்போக சோம்பல்... அதனால் அன்று அந்தப் பிச்சைக்காரனிடமே பஸ் சார்ஜுக்காக ஐம்பது பைசா கடன் வாங்கிக் கொண்டார். 'ஸ்டேட்ஸ்மென்' - சரோஜா ராமச்சந்திரன்

''சரி உஷா. இதைப் பத்தி யார்கிட்டே யும் பேசாதே. உடனே அபார்ஷன் செய் தாகணும். நானே ஒரு நல்ல டாக்டர் கிட்ட ரகசியமா ஏற்பாடு டண்றேன். நீ இந்த மனுவுனேக் கல்யாணம் பண்ணிக்க முடியாது. இந்தக் குழந்தையைப் பெத்துக்கக் கூடாது.''

''அம்மா!'' உஷா பேராச்சரியமடைந்த நிலையில், ஒரு கணம் பிரமிப்பில் வாய் அடைத்துப் போனாள். சீக்கிரமே தன்னைச் சமாளித்துக் கொண்டாள். ''அம்மா! நீங் களா இப்படி யோசனை சொல்றீங்க? என்ன அக்கிரமம் இது! நான் அபார்ஷன் செய்து கொள்ள மாட்டேன். எனக்கு இந்தக் குழந்தை வேணும்! நான் ராஜீவை உண் மையா நேசிக்கிறேன். அவரைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்!''

''முடியாது.'' — அதே ஜீவனற்ற, உயி ரற்றுப்போன குரலில் கல்யாணி பேசினாள். ''நீ அவரைக் கல்யாணம் செய்துக்க முடி யாது.''

''ஏன் முடியாது? உங்க அனுமதியைக் கேட்டுப் பெற வந்ததனாலேதானே இப்படி யெல்லாம் உங்களாலே பேசமுடியுது? உங் களைக் கேட்காம ரகசியமா அவரை நான் கல்யாணம் செஞ்சுக்கிட்டு இருந்தா அப்போ என்ன பண்ணியிருப்பீங்க? இப்பவும் சொல் றேன். உங்களாலே என்னைத் தடுத்து நிறுத்த முடியாது! எனக்கு வயசு பதி னெட்டு ஆச்சு! சட்டப்படி யாராலும் இந் தக் கல்யாணத்தைத் தடுக்க முடியாது!''

இவ்வாரம் அட்டைப்படத்தில் காட்சி தரும் ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி பட்டப் படிப்பு முடித்து, பத்திரிகைத்துறையில் டிப்ளமாவும் பெற்ற பின்னர் ஒரு பாங்கில் பணி புரிகிறார். ஏனென்று கேட்டால் அங்கேதான் நல்ல வேலை கிடைத்தது என்கிறார். நியாயமான வாதம்தானே!

இந்த ஆண்டு நவராத்திரியை முன்னிட்டு இவர் தேர்ந்தெடுத்துள்ள புதிய பொம் மைகள் மேற்கு வங்கக் கைவினைஞர்களின் தயாரிப்பான போதிலும் வங்காளப் பண் பாடு மட்டுமின்றி நாகாலாந்து, ஒரிஸ்ஸா. கலாசாரங்களையும் பிரதிபலிப்பவை!

வண்ணப் படம் எடுத்தவர்:
ஹெச். நாராயணன்



''ஐயோ! உஷா!'' — தாள முடியாத வேதனையில் தவித்துத் துடிப்பவளைப்போல ஒலித்தது கல்யாணியின் குரல். இதற்கு மேல் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாதவளாக, கல்யாணி திரும்பி உஷாவை நேருக்கு நேர் பார்த் தாள். அந்தப் பார்வையில் அதிர்ச்சி, திகில், கெஞ்சல், துக்கம் — எல்லாமே கலந் திருந்தது. ''உஷா, நான் சொல்றதைக் கேளும்மா குழந்தை! இந்தக் கல்யாணம் நடக்கக் கூடாது! இந்தக் கல்யாணம் நடக்கவே கூடாது!''

புத்தி ஸ்வாதீனமற்ற வெறி பிடித்தவள் போல் கல்யாணியின் கண்கள் இயற்கைக்கு ஒவ்வாத வகையில் அதீதமான பிரகாசத் துடன் பளிச்சிட்டது.

''ஏன் நடக்கக் கூடாது?'' உஷா கடுமை யான ரீதியில் கேட்டாள்.

''உஷா, உன்னை மன்றாடிக் கேட்கிறேன்! காரணத்தைக் கேட்காதே! என்னை வற் புறுத்தாதே! சொல்ல வைக்காதே! ஏம்மா, குழந்தை, நான் உன்னைப் பெத்த அம்மா இல்லையா? உனக்காகவே இத்தனை வருஷமா உயிர் வாழ்ந்தவ நான்! சரியான காரணம் இல்லாமே நான் உன் விருப்பத்துக்குத் தடையா நிற்பேனா? என்மேலே நம்பிக்கை வை! அம்மா எது சொன்னாலும் நல்லதுக் குத்தான் சொல்றான்னு நினைச்சுக்கோ!''

''என்னை மன்னிச்சுடும்மா. இது சாதா ரண விஷயமில்லே. என் வாழ்க்கைப் பிரச்னை. காரணம் தெரியாமல், கண்மூடித்தன மாக நீங்க சொல்றதை என்னாலே பின்பற்ற முடியாது. ராஜீவை நான் கல்யாணம் செய்துக்கிறதுலே உங்க உண்மையான ஆட் சேபனை என்ன? ஏன் இந்தக் கல்யாணம் நடக்கவே கூடாதுன்னு இவ்வளவு பிடி வாதமாகச் சொல்றீங்க? என்ன காரணம்?''

கல்யாணி திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தாள். சடாரென்று எழுந்து நின்று உஷாவின் கண்களுக்கு நேராக விழித்தாள். ஒரு நீண்ட மூச்சை உள்ளுக்குள் சுவாசித் துக்கொண்டாள்.

''சரிடி, சொல்றேன், சொல்றேன்! உண்மை தெரிஞ்சா அந்த வேதனையை, அந்த அதிர்ச்சியை உன்னாலே தாங்க முடி யாதேன்னு அதிலிருந்து உன்னைக் காப் பாத்த நினைச்சேன்! ஆனா நான் எவ்வளவு தான் எடுத்துச் சொன்னாலும் நீ பிடிவாத மாக விட மாட்டேங்கறே! உண்மையைக் கேட்டுக்கோ! வேதனையை நல்லா அனுபவி!''

மேலும் தொடர முடியாமல் கல்யாணி தடுமாறினாள்.

(அடுத்த இதழில் முடியும்)



இனித்திட வரும் தீபாவளிக்கு....
இருவிழி மயங்கும் வண்ணங்களில்....
கணக்கில்லாத புதிய மாதிரிகளில்....
கவின்மிகு கோ-ஆப்டெக்ஸ் படைக்கிறது....
பட்டு, பாலியஸ்டர், பருத்திச் சேலைகள், வேட்டிகள், சட்டைத் துணிகள், லுங்கிகள், ஆடை அணிகலன்கள் மற்றும் அலங்காரத் துணி வகைகள்!
சிறப்புத் தள்ளுபடி
20%
6-10-80 முதல்
6-11-80 வரை
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
ELEGANT

முதல் ஆசீர்வாதம்

தர்ப்பைக் கட்டையும் கையில் இருந்த சின்னப் பையையும் வெறுப்புடன் பெஞ்சு மேல் போட்டுவிட்டு ''ராமா, ராகவா'' என்று சொல்லியபடியே பழைய சுசி சேரில் சாய்ந்தார் சாமா சாஸ்திரி.

மோர் நிறைந்த பித்தளை தம்ளருடன் சோகமே வடிவாக அவர் அருகில் வந்து நின்ருள் அவரது பாரியாள் கற்பகத்தம்மாள்.

''ஏன்னு இந்தாங்கோ மோர், கொஞ்சம் சாப்பிடுங்கோ'' என்று டம்ளரை நீட்டிருள்.

லேசாகக் கண்ணைத் திறந்து அந்த டம்ளரை வாங்கி அதைப் பருகிவிட்டு டம்ளரைக் கற்பகத்தம்மாளிடமே கொடுத்தார் -சாமா சாஸ்திரி.

''ஏன்னு, பெரிய பண்ணையார் வீட்டுக்குப் போனேளா? அவாளைப் பார்த்தேளா?'' தன் ஆர்வத்தை வார்த்தைகளில் வடித்தாள் கற்பகத்தம்மாள்.

லேசான புன்னகையை இதழ்களில் நெளிய விட்டு விட்டு ''போனேன், பார்த்தேன்'' என்ருர் சாஸ்திரி.

''என்னன்னு ஒரே விரக்தியாச் சொல்றேள். அவர் என்ன சொன்னுர்? கொஞ்சம் விளக்கமாத்தான் சொல்லுங்களேன்.''

''ஒரு மூட்டை நெல்லு கொடுத்திடறேன். தோட்டத்திலேந்து காய்கறி அனுப்பறேன். வேறே ஒண்ணும் எதிர்பார்க்காதீர். நாலே வியாஜ்யம் வியாஜ்யம்னு கத்திண்டு நெறையச் செலவாயிடுத்து அப்படின்னுர். சந்தோஷம்னு சொல்லிட்டு வந்துட்டேன்'' என்ருர் சாஸ்திரி.

''ஏன்னு திருமாங்கல்யத்தைப் பத்தி ஒண்ணும் கேக்கலியா?''

சாமா சாஸ்திரி சிரித்துக்கொண்டார்.

''என்னன்னு நான் கேட்கிறேன், நீங்க சிரிக்கிறேள். நாளு ஆயிண்டு இருக்கில்லே. மாப்பிள்ளை வீட்டுக்குப் பூஜைக்குத் திருமாங்கல்யம் கொடுக்கறேம்னு சொல்லிட்டோம். இன்னிக்குச் செவ்வாய்க்கிழமை. வர்ற குருவாரம் நல்ல நாளா இருக்கு. அதுக்குள்ளே கொடுக்க வேண்டாமா?'' என்று சோகம் இழையோடத் தன் கணவர் சாஸ்திரிக்கு நினைவூட்டினுள் கற்பகத்தம்மாள்.

''எல்லாம் அந்தப் பரமேசுவரன் இருக்கான். மனுஷ சக்திக்கு முடிஞ்ச வரைக்கும் நானும் எல்லார் கிட்டேயும் கேட்டுப் பார்த்துட்டேன். பவுன் ஆயிரம் ரூபாய் விக்கிற இந்த நாள்லே யாரு திருமாங்கல்யம் தானம் பண்ணச் சம்மதிப்பா?''

புரோகிதம் பார்க்கும் சாமா சாஸ்திரிக்கு நான்கு பெண்கள். எப்படியோ மூன்று பெண்களுக்குத் திருமணம் செய்து கொடுத்து விட்டார். நிலம் கொஞ்சம், வீடு ஒன்று என்று இருந்த பூர்வீக சொத்தை விற்றுக் காமா சோமா என்று மூன்று பெண்களின் திருமணத்தை முடித்து வைத்த சாஸ்திரிக்கு நான்காவது மகள் மங்களத்தின் திருமணம் தான் பெரிய பிரச்னையாக இருந்தது. கையில் இருக்கும் தர்ப்பைக் கட்டுத்தான் இப்போது அவரிடம் இருக்கும் சொத்து!

இதுவரை யாரிடமும் சென்று எதற்குமே கைநீட்டாத சாஸ்திரி மங்களத்தோட கல்யாணத்தை முன்னிட்டுத் தெரிந்தவர்களிடத்தும், தான் புரோகிதம் பார்க்கும் செல்வர்களிடத்தும் சிறு சிறு உதவிகளைப் பெற்று எப்படியாவது அவள் திருமணத்தை முடிக்க முயற்சி மேற்கொண்டார்.

வயதும் அறுபதைத் தாண்டிவிட்டது. உடல் நிலையும் ஒன்றும் நன்ருக இல்லை. திடீரென்று ஏதேனும் நடந்து விட்டால் என்ன செய்வது என்று கவலைப்பட்டே ஒரு வரனைப் பார்த்து முடித்தார். அந்தக் கல்யாணச் செலவுகளுக்குத்தான் கஷ்டப்படுகிருர். அவர் யார் யாரெல்லாம் உதவி செய்வார்கள் என்று நினைத்தாரோ அவர்களில் சிலர் ஏதோ சிறு உதவிகளை மட்டுமே செய்ய முன் வந்தார்கள்.



தூரியானந்தம்

புதன் கிழமை. காலை நேரம். சாஸ்திரி சந்தியாவந்தனம் செய்துவிட்டு உடல் எங்கும் திருநீறு துலங்க வந்தவர் சின்னனும் அஞ்சலையும் வந்து நிற்பதைப் பார்த்து விட்டுத் தெருப் பக்கம் போனார். கற்பகத்தம்மாள் கூடவே பின்னால் சென்றாள். சின்னனும் அஞ்சலையும் பவ்யமாகக் கைகளைக் கட்டிக் கொண்டு நின்றனர்.

''என்ன விஷயம் சின்னான்?'' என்று கேட்டார் சாஸ்திரி.

சின்னான் தலையைச் சொறிந்தபடியே ''ஒண்ணும் இல்லே சாமி. கொஞ்சம் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தோம்'' என்றான்.

''சின்னம்மா கல்யாண விஷயமா சாமியைப் பார்த்துட்டுப் போவோம்னு வந்தோம்!'' என்றாள் அஞ்சலை.

''அஞ்சலை, நோக்குத் தெரியாதது இல்லேடி. நான் நாலு பொண்ணுகளைப் பெத்தேன். இந்த மங்களம் மாதிரி தரித்திரம் பிடிச்சவ இந்த உலகத்திலே ஒருத்தி கூட இருக்க மாட்டா!''

''ஏம்மா அவங்களைத் திட்டுறீங்க? அவங்க என்ன பண்ணுவாங்க?''

''கல்யாணத்துக்கு முக்கியமா வேண்டிய திருமாங்கல்யத்தைக்கூட இவளுக்கு எங்களாலே பண்ண முடியலேடி. அப்படி ஒரு தரித்திரம் பிடிச்சவ அவ'' — இப்படிச் சொல்லும் போது கற்பகத்தம்மாளின் கண்கள் கண்ணீர் சிந்தின.

''என்னம்மா தாலிதானே? இதுக்குப் போயி ஏன் கவலைப்படறீங்க.''

''என்னடி அவ்வளவு அலட்சியமாச் சொல்லிட்டே! அரைப் பவுன்லே தாலி பண்ணணும். அரைப் பவுன் இப்போ ஐந்நூறு ரூபாய். நாங்க அவ்வளவு பணத்துக்கு எங்கே போவோம்?''

சின்னனும் அஞ்சலையும் ஒருவரை யொருவர் பார்த்துப் புன்னகை செய்து கொண்டார்கள்.

பிறகு அஞ்சலை தன் இடுப்பில் செருகி இருந்த சுருக்குப் பையை எடுத்தாள். சின்னான் ஒரு வெற்றிலையை எடுத்து அவளிடம் நீட்டினான். அந்தச் சுருக்குப் பையில் இருந்து ஒரு தாலியை எடுத்து அதை வெற்றிலையில் வைத்து சாஸ்திரிகளிடம் நீட்டினார்கள்.

''சின்னா, அஞ்சலை! என்ன இது?'' — இருவரும் சேர்ந்தே கேட்டார்கள்.

''சாமி, நீங்க நல்லா இருந்தப்போ எவ்வளவோ பேருக்கு உதவி செஞ்சிருக்கீங்க. உங்க பண்ணையிலே வேலை பார்க்கிறவங்களுக்குக் கல்யாணம்னு நெறைய நெல்லும் துணியும் எடுத்துக் கொடுத்திருக்கீங்க. தாலி கூடச் செஞ்சு போட்டிருக்கீங்க. உங்களுக்கு நாங்க ஏதாச்சும் ஒத்தாசை பண்ணணும்னு நெனைச்சுக்கிட்டே இருந்தோம். இப்பத் தாங்க அதுக்கு நேரம் வந்திருக்கு. தட்டாம எடுத்துக்குங்க'' என்றான் சின்னான்.

''சின்னான், நேக்கு என்ன சொல்றதுன்னே தெரியல்லேப்பா. உனக்கு ஏதப்பா இதுக்குப் பணம்? எனக்காக,, உனக்கு கவர்மெண்ட்ல கொடுத்த நிலத்தை வித்துட்டியா?'' என்று சாஸ்திரி கண் கலங்கக் கேட்டார்.

''இல்லே சாமி. இவளுக்கு அறுபது வயசாயிடுச்சு. இந்தத் தாலியைப் போட்டுக்கிட்டாத்தான் இவ என் பெண்டாட்டின்னு எல்லாரும் சொல்லுவாங்களா என்ன? அதுனால அவ கழுத்திலே மஞ்சளைக் கட்டிட்டு அவ போட்டிருந்த அந்தத் தாலியைத் தான் உங்க கிட்டக் கொடுத்தேன். இது அவ அப்பன் எங்க கல்யாணத்துக்காக வாங்கிப் போட்டது சாமி. ரொம்ப ராசியானது, நல்ல தங்கத்திலே செஞ்சது சாமி'' என்றான் சின்னான்.

சாஸ்திரிக்கு என்ன சொல்வதென்றே தோன்றவில்லை.

கற்பகத்தம்மாள் சிலையென நின்றுவிட்டாள்.

சாஸ்திரி கூப்பிடவே மங்களம் வந்தாள்.

அவளை ஒரு கையிலே பிடித்துக்கொண்டு அப்படியே மெதுவாய்ச் சின்னான் அருகே சென்றார்.

சின்னனும் அஞ்சலையும் ஒன்றும் புரியாமல் விழித்தார்கள்.

''சின்னான், நீ எவ்வளவு உயர்ந்தவன்டா! நீ என் கூடப் பிறக்காததுதான் பாக்கி'' என்று சொல்லிக் கொண்டே அவனை ஒரு கையால் இழுத்துத் தம்முடன் அப்படியே அணைத்துக் கொண்டார்.

''மங்களம்! முதல்லே நீ சின்னான் காலிலேயும் அஞ்சலை காலிலேயும் விழுந்து நமஸ்காரம் பண்ணிக்கோ'' என்று உணர்ச்சி பூர்வமாகப் பேசினார் சாஸ்திரி.

''சாமி இதெல்லாம் என்னுங்க'' — சின்னான் கலவரத்துடன் கேட்டான்.

''பேசாம இருடா. நீதான் முதல்லே என் பொண்ணுக்கு ஆசீர்வாதம் பண்ணணும். உன்னைவிட யாருக்குடா அந்தத் தகுதி இருக்கு? என்னைப் பொறுத்தவரைக்கும் நீதான் பரமேஸ்வரன்; அஞ்சலைதான் பார்வதி தேவி!'' என்று சொல்லிவிட்டு அவன் கைகளை எடுத்துத் தம் கண்களில் ஒற்றிக் கொண்டார் சாஸ்திரி.

சின்னனின் கைகள் அப்பொழுது அவனையும் மீறி நடுக்கத்துடன் அவர் கண்களில் இருந்து வழியும் கண்ணீரைத் துடைத்து விட்டன.

''தினம் ஓட்டல் பூட்டிட்டு வீட்டுக்குப் போகும் போது எதுக்கு கொத்துச்சாவியோட ஒரு மைசூர் பாகையும் எடுத்துட்டுப் போறீங்க?''

''நானைக்கு சாவியை மறந்துட்டு வந்துட்டாப் பூட்டை உடைக்க!'' - க. இராமதாஸ்



காதல் என்பது இதுதானா?

ஸ்ரீவித்யா

சிந்தனைச் சிதறல்கள்

முதன் முதலில் என் கணவரை அபூர்வ ராகங்கள் படப்பிடிப்பின் இடையில் வீட்டில் தான் சந்தித்தேன். அப்பொழுது அவர் என்ஜினியரிங் கல்லூரியில் நான்காவது வருடம் படித்துக் கொண்டிருந்தார். இவரும் இவருடன் வந்தவரும் பம்பாயைச் சேர்ந்தவர்கள். ஒரு நாள் எனக்கு போன் செய்தார்கள். ''நாங்கள் ஒரு மலையாளப் படமெடுக்கப்போகிறோம். மது அதை இயக்குகிறார். தற்சமயம் எங்கள் அலுவலகம் சவேரா ஹோட்டலில் இருக்கிறது. உங்களால் அங்கு வர முடியுமா?'' என்று கேட்டார்கள். ''நான் ஓட்டலுக்கெல்லாம் வருவதில்லை. படம் சம்பந்தமாகப் பேசவோ, ஒப்பந்தம் செய்யவோ வீட்டுக்கு வாருங்கள்'' என்று நான் சொன்னேன். வீட்டுக்கு வந்தார்கள். என்னிடம் மன்னிப்புக் கேட்டார்கள். ''உங்களது திரைப்பட உலகின் நடைமுறை என்ன என்பது எங்களுக்குத் தெரியாது. புரொடக்ஷன் மானேஜர் சொல்லித்தான் அப்படி நாங்கள் ஹோட்டலுக்கு அழைத்திருக்கக் கூடாது என்பது தெரிய வந்தது. நாங்கள் திரைப்படத்துக்குப் புதிது'' என்றார்கள்.

மன்னிப்புக் கோரியபோது இவர்கள் மற்றவர்களிடமிருந்து மாறுபட்டவர்களாக எனக்குத் தென்பட்டனர். ஆனால் அன்று அதற்கு நான் அதிகம் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. படப்பிடிப்பு நடந்தது. படமும் முடிந்தது. திடீரென்று ஒரு நாள் தைரியமாக என்னை அணுகி, ''என்னைத் திருமணம் செய்து கொள்ள விருப்பமா?'' என்று கேட்டார்.

திகைப்பில் ஆழ்ந்த என்னால் பதில்சொல்ல முடியவில்லை. அப்போது பல பிரச்னைகள் என்னைச் சூழ்ந்து கொண்டிருந்தன. செல்வ நிலையிலும் அவ்வளவாக முன்னேற்றம் இல்லை. பட உலகில் சாதிக்க நினைத்தவை முழுமையாக நிறைவேறவில்லை. இந்த நிலையில் என்னால் பேசவே முடியவில்லை. ஆனால் முடியாது என்று மறுத்து விட்டேனா என்றால் அதுவும் இல்லை. இதே கேள்வியை வேறு சிலர் என்னிடம் கேட்டிருக்கிறார்கள். திருமணம் புரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடனேயே என்னுடன் சிலர் பழகியும் பேசியும் இருக்கிறார்கள். இவர்களை நான் உடனுக்குடன் மறுத்திருக்கிறேன், உதறியிருக்கிறேன்.

ஆனால் இவரிடம் ஏனோ அப்படி நடந்து கொள்ள முடியவில்லை. இவரிடம் ஏதோ சத்திய ஒளியை உணர்ந்தேன். இருப்பினும் கூட மூன்று மாத அவகாசம் கேட்டேன். மூன்று மாதங்களுக்குப் பிறகும் வந்து என்னைக் கேட்கிறாரா பார்க்கலாம் என்ற எண்ணம்! இது ஒரு திமிரான முடிவுதான்! கேள்வியை அவர் கேட்ட பிறகு பதில் நான்தானே சொல்ல வேண்டும்? ஆனால் திரும்பவும் இரண்டாம் முறை அதே கேள்வி வரவேண்டும் என்று நான் எதிர்பார்ப்பது நியாயமா? அவர் கேட்கவே இல்லை.

இந்த நிலையில் எனக்கு அமெரிக்கா செல்லும் ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. விமான நிலையத்தில் என்னை வந்து பார்த்து வழி அனுப்பினார். என் மனத்தில் பிரிகிறோமே என்ற தாபம் ஏற்படுவதை உணர்ந்தேன். அதை உள்ளடக்கிக் கொண்டு வெளிநாடு சென்றுவிட்டேன். அங்கிருந்து கடிதம் எழுதித் தொடர்பு கொள்ளத் தயக்கம். ஆனால் சதா அவர் நினைவு. உள்ளத்தில் அவரிடம் அன்பு இருக்கிறது என்று நன்றாகத் தெரிந்தது. அங்கிருந்து நான் திரும்பி வரும்போது பம்பாயில் அவர் என்னைச் சந்திக்க வேண்டும் என்று கடிதம் எழுதி, எனது மேக்கப் உதவியாளர் மூலமாக அவருக்குக் கிடைக்கச் செய்தேன். அதன்படி அவர் பம்பாய் வந்திருந்தார். எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா? சென்னை வந்த பிறகு என் தாயார், ''என்ன, யாரிடமும் நெருங்கிப் பழக மாட்டாயே அவரிடம் மட்டும் சகஜமாக இருக்கிறாயே;'' என்று கேட்க, நான் அவரை மணம் செய்துகொள்ள விரும்புவதைத் தெரியப்படுத்தினேன்.

ஆரம்பம் குழப்பமாகவே இருந்தது. ஆனால் என் தாயாரிடம் நான் பேசி அவரைச் சம்மதிக்க வைக்க, என் தாயார் என் தந்தையையும் சம்மதிக்க வைத்து விட்டார். ஆயினும் இன்னும் ஒரு பிரச்னை பாக்கி இருந்தது. எனக்குத் தொடர்ந்து நடிக்க வேண்டும் என்று விருப்பம். அதை என் கணவர் குடும்பத்தினர் ஒப்புக் கொள்வார்களா? இதை அவர்களிடம் கேட்க நான் முடிவு செய்தேன்.

பேட்டி: சலன்



திரு ஜார்ஜ்:
திருமதி ஸ்ரீவித்யா ஜார்ஜ்



பெண்மை, மென்மையானது. அதன் உள்ளம் ஆழமானது. அது சுரங்கம் போன்றது. அத்தனையும் ரகசியச் சுரங்கம். அவள் நல்லவளோ, கெட்டவளோ, ஆயிரம் ரகசியங்களை ஒரு மனத்தில் அடக்கக் கூடிய சக்தியுள்ளவளாக இருக்கிறாள்.

ஆடவன்தான் உளறுவாயன்; எதையும் உளறிவிடுகிறான். பெண்மை பலவீனமானது. அந்தப் பலவீனமே பலமானது என்று நான் முன்பொரு முறை எழுதியிருக்கிறேன்.

அதிவீரராம பாண்டியனும் மற்றவர்களும் சொன்னபடி பெண்ணைத் தேர்ந்தெடுப்பது பற்றி இன்றைய இளைஞனுக்கு நான் சில யோசனைகளைச் சொல்லியாக வேண்டும்.

ஒன்று:

கூச்சம் இல்லாமல் ஆடவனின் கண்களை நேருக்கு நேர் பார்க்கும் கன்னிப் பெண். இவள் துணிச்சல் உள்ளவளாக இருப்பாள். நடத்தைக் கேடு இல்லா விட்டாலும் குணக் கேடு இருக்கும். அடங்காப் பிடாரியாகவும் இருப்பாள்.

இரண்டு:

பத்துப் பேருக்கு மத்தியில் சத்தம் போட்டுச் சிரிக்கும் பெண். இவள் நிச்சயமாகச் சபலமுடையவளாக இருப்பாள். உணர்ச்சியின் ஒருவகையான தாளமே சத்தம் போடும் சிரிப்பு. ஒருவேளை ஒழுங்காக இருந்தாலும் உணர்ச்சி மிக்கவளாக இருப்பாள். சாதாரணமாக எதிலும் திருப்தி அடைய மாட்டாள்.

மூன்று:

நேரம் கெட்ட நேரங்களில் கண்டதைச் சாப்பிடும் பெண். இவளுக்குச் சாப்பாட்டைத் தவிர வேறு ஆசைகள் இருக்காது. உணர்ச்சிகள் குறைவு. தெய்வ பக்தி அதிகமாக இருக்கும். வகை வகையான சாப்பாடுகளைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பாள்.

நான்கு:

ஆடவர்களைப் பார்க்கும்போது முந்தானையைச் சரிப்படுத்திக் கொள்ளாத பெண்: இவள் எதிலும் அலட்சியமாக இருப்பாள், கவலைப்பட மாட்டாள். இருக்கும் செல்வத்தை ஒழுங்காக வைத்துக் கொள்ளத் தெரியாது. போனால் போகட்டும் என்ற புத்தி இருக்கும். வாழ்க்கை நன்றாக இருக்கிறதா கெட்டுப் போய்விட்டதா என்று ஆராயக்கூடத் தெரியாது.

ஐந்து:

விசேஷங்களிலும், சபைகளிலும் சத்தமில்லாமல் ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கும் பெண்: இவள், தனக்குக் கிடைத்ததே பெரிது என்று திருப்தி அடைவாள். சுத்தமான நடத்தை உள்ளவளாக இருப்பாள். உள்ளுக்குள்ளே ஆசைகள் எழுந்தாலும் உடனே அடக்கிக் கொள்வாள். ஆனால் வாழ்க்கையில் பெருத்த ஏமாற்றம் நிகழ்ந்தால் எந்தக் கடைசி எல்லைக்கும் துணிந்து விடுவாள்.

ஆறு:

தலை குனிந்து நடக்கும் பெண்: இவள் கற்பின் செல்வியாக விளங்குவாள். காம ரசம் மிக்க வேடிக்கைப் பேச்சுக்களில் கலந்து கொள்ள மாட்டாள்: கடமையிலேயே கண்ணும் கருத்துமாய் இருப்பாள். 'செக்ஸ்' கதைகளைக் கேட்டால் 'சீச்சீ, கருமம்' என்பாள். வாழ்க்கையில் உடலுறவைப் பெரிதாக மதிக்க மாட்டாள். வீட்டை அழகாக ஒழுங்கு படுத்தி வைத்துக் கொள்வாள். குறிப்பிட்ட நேரத்தில் எதையும் செய்து முடிப்பாள்.

ஏழு:

ருதுவாகிப் பத்து ஆண்டுகளுக்கு மேலாகி அடக்கமாக வாழும் பெண்: இவளே வாழ்க்கைக்கு வெகு சுகமாக இருப்பாள். வாழ்க்கையைத் தாகத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தவளாதலால் கணவனை உயிராக நேசிப்பாள்.

ஒன்று, ருதுவான இரண்டு மூன்று ஆண்டுகளிலேயே திருமணம் செய்து கொள்ள வேண்டும். அல்லது பத்து வருடம் கழித்தும் அடக்கமான பெண்ணை மணந்து கொள்ள வேண்டும். மிகவும் பழைய பாணியிலான இந்தக் கருத்துக்களை இன்றைய இளைஞன் எப்படி எடுத்துக் கொள்வானோ எனக்குத் தெரியாது.

நாகரிக உலகத்தில் பெண்மையின் வடிவம் மாறிவிட்டது. பழைய தாய்மை குறைந்து வருகிறது. இன்று எந்தக் கேடும் சர்வ சாதாரணமாக அங்கீகரிக்கப்படுகிறது.

திருமணம் என்பது அவ்வப்போது தோன்றுகிற வெறியையே மூலமாகக் கொண்டு நிச்சயிக்கப்படுகிறது. வாழ்க்கை என்பது அலங்கோலமாகி விட்டது.

இந்த நிலையில் எப்போதோ நான் படித்த சில விஷயங்களைச் சொல்லி வைக்கிறேன்.

என்னதான் எச்சரிக்கையாக இருந்தாலும் மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்தான்.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor: K. Rajendran

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka